அனைத்து அறிவுரை!



பக்கம் 18

உதயன்

பக்கங்கள் 24
யாழ். 20/=
வன்னி 20/=

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

சுடர்: 29 கதிர்: 268 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 5, வியாழன் 21.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

21 AUG 2014

# கூட்டமைப்பினர் இன்று இந்தியா பயணம் பிரதமர் நரேந்திர மோடியை சந்திப்பர்

யாழ்ப்பாணம், ஓக. 21
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை எதிர்வரும் சனிக்கிழமை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்காக, இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறுவர் அணி இன்று மதியம் இந்தியாவுக்குச் செல்லவுள்ளது.



"மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். அதுகுறித்து இந்தியப் பிரதமருடன் பேசுவீர்களா?

அனைத்து விடயங்களையும் உள்ளடக்கியே நாம் அவருடன் பேசவுள்ளோம்.

*- இரா.சம்பந்தன்*

"இந்திய அரசின் அழைப்பை ஏற்று நாம் நாளை (இன்று) இந்தியாவுக்குச் செல்லவுள்ளோம். வெள்ளிக்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சரையும், சனிக்கிழமை இந்தியப் பிரதமரையும் சந்திக்கவுள்ளோம்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 'உதயனிடம்' தெரிவித்தார்.

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி கடந்த மே மாதம் பதவியேற்றிருந்தார். புதிய பிரதமரை நேரில் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியிருந்தது. தமிழ்த்

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

# காலநிலை மாற்றத்தால் யாழ்ப்பாணம் பாதிப்புறும்

கொழும்பு, ஓக.21
காலநிலை மாற்றம் காரணமாக இலங்கையின் கரையோர மற்றும் விவசாய மூலவளங்களில் ஏற்படும் சேதம், இந்த நூற்றாண்டின் இறுதியளவில் நாட்டின் பொருளாதாரத்தின், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 வீதமான பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசியாவுக்கான காலநிலை மற்றும் பொருளாதாரம்

■ மீன்பிடியில் கணிசமான பாதிப்பு ஏற்படுவதுடன், கடுமையான அலைகள், நீர் மட்டம் உயர்தல் ஆகியவற்றால் கரையோர உயிர் தொகுதியும் பாதிக்கப்படும். அதனால் யாழ்ப்பாணம், மற்றும் கம்பஹா பகுதிகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும்.

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## சீனா இலங்கை பக்கமே

இலங்கை சீனாவுக்கு தலையையும் இந்தியாவுக்கு வாலையும் காட்டிக் கொண்டு தனது பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிறது.....

பக்கம் 14

# ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குக

## இலங்கையிடம் வலியுறுத்துகின்றார் பான் கீ-மூன்



கொழும்பு, ஓக. 21
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவினருக்கு இலங்கை அரசு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கீ-மூன். ஐ.நா. விசாரணையாளர்கள் இலங்கைக்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ள நிலையிலேயே ஐ.நா.பொதுச் செயலாளர் இவ்வாறு வலியுறுத்தி

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

■ ஐ.நா. அலுலகத்தால் முன்னெடுக்கப்படும் விசாரணையின் முக்கியத்துவத்தை இலங்கை உணர வேண்டும்.

*- பான் கீ-மூன்*

■ ஐ.நா. விசாரணைக் குழு தன்னிச்சையானது. அதுகுறித்து நாம் அலட்டிக்கொள்ளவில்லை.

*- மஹிந்த ராஜபக்ஷ*

## இலங்கையில் எபோலாவா?

கொழும்பு, ஓக.21
இலங்கையில் எபோலா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா என்பது குறித்த விசாரணைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
அண்மையில் கண்டியைச் சேர்ந்த பெண் ஒருவர் எபோலா அறிகுறிகளுடன் உயிரிழந்தார் என்று வெளியான தகவல்களை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
உயிரிழந்த பெண்ணின் இரத்த மாதிரிகள் பரிசோதனைக்காக சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

**எபோலா** என்றால் என்ன?
விவரங்கள் 2 ஆம் பக்கத்தில்

## செப்பு கடத்தியோருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஓக. 21
காங்கேசன்துறைப்பகுதியிலிருந்து 3 கிலோகிராம் செப்பு உலோகத்தைக் கடத்திச் சென்றபோது கைது செய்யப்பட்ட தென்பகுதியைச் சேர்ந்த 9 பேருடைய விளக்கமறியலை நீடித்துள்ளது மல்லாகம் நீதிமன்றம்.
இந்த மாத ஆரம்பத்தில் குறித்த நபர்களால் செப்பு உலோகம் லொறியில் கடத்திக் கொண்டு செல்லப்பட்டபோது உயர்பாதுகாப்பு வலய எல்லையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது.
அதையடுத்து குறித்த 9 பேரும் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்கள் தொடர்பான வழக்கு மல்லாகம் நீதிமன்றில் மீள எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. இந்தக் கடத்தல் தொடர்பில் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-4)



இலங்கை எழுச்சி பெறும் தேசத்தின் சவால்கள் என்னும் தொனிப்பொருளில் கொழும்பு கலதாரி விடுதியில் நடைபெற்று முடிந்த பாதுகாப்பு மாநாட்டில் இந்தியாவின் பா.ஜ.கட்சியின் சிரேஷ்ட தலைவர் சுப்ரமணிய சுவாமி கலந்துகொண்டு நேற்று உரையாற்றினார். அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த சுவாமி, இலங்கை அரசின் அனுமதியின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் இந்யதிப் பிரதமரை சந்திக்க முடியாது என்று கூறியிருந்தார்.

# 'விசா' வழங்காவிடினும் விசாரணைகள் நடக்கும்

## திட்டவட்டமாக கூறுகிறார் நவிப்பிள்ளை



யாழ்ப்பாணம், ஓக. 21
இலங்கை அரசு நுழைவிசைவு (விசா) வழங்க மறுத்தாலும் போர்க் குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைகள் தொடர்ந்து நடைபெறும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை.
ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு நுழைவிசைவு வழங்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை குறித்து பி.பி.ஸி. செய்திச் சேவைக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே நவிப்பிள்ளை இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"ஸ்கைப், செய்மதி ஒளிப்படங்கள், இணைய தொலைபேசிகள் போன்ற நவீன வசதிகளைப் பயன்படுத்தி விசாரணைக் குழுவால் தகவல்களைத் திரட்டவும், விசாரணைகளை மேற்கொள்ளவும் முடியும். சிரியா மீதான போர்க் குற்ற விசாரணையின்போது அந்த நாட்டுக்குள் நுழைவ

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாணம், கிளிநொச்சியைத் தவிர்த்து வடக்கில் 3 மாவட்டங்களுக்கு வறட்சி நிதி

யாழ்ப்பாணம், ஓக. 21
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்கள் தவிர்ந்த வடக்கின் ஏனைய மூன்று மாவட்டங்களுக்கு மாத்திரம் வறட்சி மீள் கட்டுமான நிதியாக 210 மில்லியன் ரூபா அவசர அவசரமாக திறைசேரியால் நேரடியாக அந்தந்த மாவட்டச் செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
கடும் வறட்சி காரணமாக வடக்கின் 5 மாவட்டங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வறட்சிக் காலத்தில் பொது மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்வதற்காக இடர்முகாமைத்துவ அமைச்சூடாக, ஒவ்வொரு மாவட்ட இடர்முகாமைத்துவ நிலையங்களுக்கும் நிதி வழங்கப்பட்டு வருகின்றது.
வறட்சியின் உடனடிப் பாதிப்பை தீர்ப்பதற்குரிய வகையிலேயே இந்த நிதி வழங்கப்பட்டு அதனூடாக குடிதண்ணீர் விநியோ

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

# இலங்கையின் மதிப்புக் குறைவது புலம்பெயர் தமிழ் மக்களால்தான்

## ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி கொதிக்கின்றார்

கொழும்பு, ஓக.21
புலம்பெயர் தமிழ் மக்களே இலங்கையின் நன்மதிப்பை சீர்குலைத்து வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதி நிதி ரவிநாத் ஆரியசிங்க.
புலம்பெயர் தமிழர்களின் இரண்டாம்தலைமுறையினர் இலங்கைக்கு எதிராகப் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின் றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
கொழும்பில் நடைபெற்று வரும் தேசியபாதுகாப்பு மாநாடு - 2014 இல் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,
"இலங்கையில் ஒரு நாளும் வாழாதவர்கள் இவ்வாறு நாட்டுக்கு எதிராக தீவிர பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர். சில தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், ஊடக நிறுவனங்களும் இலங்கைக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்து வருகின்றன. இலங்கையின் நன்மதிப்பை சீர்குலைப்பதற்கு முயற்சிக்கின்றன.
புலம்பெயர் தமிழர்கள் சிறுவர்களுக்கு மூளைச் சலவை செய்து வருகின்றனர். இதனால் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.
தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் பரப்புரை மேற்கொண்டு பணம் சம்பாதிப்பதே இவர்களது நோக்கமாக அமைந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இவ்வாறான பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் சட்டவிரோத நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் முதல் ஆள்கடத்தல்கள் வரையில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். புலிச் செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகள் குறித்து யூரோ பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்."- என்று தெரிவித்துள்ளார். (ற)



# ஜனாதிபதியின் பாக். பயணம் பிற்போடப்படலாம்

கொழும்பு, ஓக.21
பாகிஸ்தானுக்கு எதிர்வரும் மாதத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்படவிருந்த உத்தியோக பூர்வ பயணம் பிற்போடப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.
பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் தற்போது நிலவும் அமைதியற்ற அரசியல் நிலை காரணமாகவே இந்தப் பயணம் தாமதம் ஆகலாம் என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)


# 30 ஆயிரம் சுகாதார ஊழியர் போராட்டம்



கொழும்பு, ஓக.21
சம்பள உயர்வு உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து, நாட்டிலுள்ள 27 துறைசார் சுகாதார ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.
தமக்கு உரிய தீர்வு வழங்குமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அதிகாரிகள் இதுவரை பதிலளிக்கவில்லை என்று தொழிற்சங்க ஒன்றியத்தின் ஒன்றிணைந்த குழுவின் ஒருங்கிணைப்பாளர் கீதிக்கா சுவர்ணலதா விஜேசூரிய குறிப்பிட்டார்.
முப்பது ஆயிரத்திற்கும் அதிகமான ஊழியர்கள் இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் பங்கெடுத்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் கே.ஏ.எஸ் கீரகல கருத்துத் தெரிவிக்கும் போது, ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொழிற்சங்க ஒன்றியத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்த போதும், தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற)

# முல்லைத்தீவில் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டியவர்கள் சிக்கினர்

கிளிநொச்சி, ஓக.21
முல்லைத்தீவு மாந்தை கிழக்கு, ஒட்டங்குளம் காட்டுப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மரம் வெட்டிய நான்கு பேர் மாங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து நாட்டுத் துப்பாக்கி ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து நடவடிக்கை எடுத்த மாங்குளம் பொலிஸ் நிலைய சிறப்புக் குழுவினர், மரம் வெட்டியவர்களைக் கைது செய்துள்ளதுடன், அவர்களிடம் இருந்து மரம் அரியும் இயந்திரம், துப்பாக்கி மற்றும் பல பொருள்களையும் கைப் பற்றியுள்ளனர்.
கைது செய்யப்பட்ட நால்வரும் முல்லைத்தீவு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவித்துள்ள பொலிஸார் சட்டவிரேத மரம் தறிப்புத் தொடர்பில் தகவல் வழங்குமாறும் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர். (ற-18)





கைப்பற்றப்பட்ட மரங்களும், நாட்டுத் துப்பாக்கியும்.



ஜப்பானிய காணி, போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை உதவி அமைச்சர் மனபு சகைய் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். கொழும்பு நகரில் மேற்கொள்ளப்படவுள்ள பெரும் போக்குவரத்து திட்டம் குறித்த அறிக்கையை ஜப்பானிய காணி போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை உதவி அமைச்சர் இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதியிடம் கையளித்தார். (ற)

# வீட்டை அடித்து நொருக்கி பணமும் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 21
நள்ளிரவு வேளை வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாதோர் வீட்டுக் கூரை மற்றும் கதவுகளை அடித்து நொருக்கிவிட்டு அங்கிருந்த சுமார் 10 ஆயிரம் ரூபாவை எடுத்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கந்தரோடையில் நடந்துள்ளது.
குறித்த வீட்டில் வசித்து வருபவர் பகலிலேயே அங்கு தங்கியிருப்பது வழமை. இரவு நேரத்தில் வேறொரு இடத்தில் தங்கச் சென்று விடுவார். இந்தநிலையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாதோர் வீட்டை அடித்து நொருக்கியுள்ளதுடன், பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.
இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)

# எபோலா தீநுண்ம நோய்

எபோலா தீநுண்ம நோய் (*Ebola virus disease*) (*EVD*) அல்லது எபோலா குருதி ஒழுக்கு காய்ச்சல் (*Ebola hemorrhagic fever*) (*EHF*) என்று எபோலா தீ நுண்மத்தின் நான்கு வகைகளால் மனிதரில் ஏற்படும் நோய் பெயரிடப்பட்டுள்ளது. இது ஓர் உயிருக்கு கேடு விளைவிக்கும் கடுமையான நோயாகும். கடுமையான குருதி இழப்பு ஏற்பட்டு நோய்வாய்ப்பட்ட பத்து பேரில் சராசரியாக ஐந்து முதல் ஒன்பது பேர் உயிரிழக்கின்றனர். 1976ஆம் ஆண்டு ஆபிரிக்காவின் சையர் நாட்டின் எபோலா ஆற்றங்கரையில் இத்தீநுண்மம் முதலில் கண்டறியப்பட்டதால் இதற்கு எபோலா தீநுண்மம் என்ற பெயர் ஏற்பட்டது.

### நோய் பரவல்

இத்தீநுண்ம நோய்வாய்ப்பட்ட நோயாளியின் நீர்மங்களுடன் தொடர்பு கொண்டவர்களுக்கு அவற்றின் மூலமாக தீ நுண்மம் தொற்றிக்கொள்கிறது. இது காற்றின் மூலமாகப்பரவுவதில்லை. எபோலா நோயுற்றவர்கள் ஏராளமாக குருதி இழப்பர். அவர்களது வயிற்றுப் போக்கிலும் வாந்தியிலும் குருதி வெளியேறும். கடுமையாக நோயுற்றவர்களின் மூக்கு, காதுகள் மற்றும் ஆண்/பெண் குறிகளிலிருந்து குருதி ஒழுகும். இந்த நீர்மங்கள் மற்றவர்களை நோய் தொற்றிக் கொள்ளக் காரணமாக அமைகின்றன.

### அறிகுறிகள்

ஒருவருக்கு எபோலா பற்றும்போது முதல் அறிகுறிகள் மற்ற நோய்களை ஒத்திருக்கும். காய்ச்சல், உடல் தளர்ச்சி, தலைவலி, வயிற்றுவலி, மூட்டுவலி மற்றும் தொண்டைவலி ஆகியன முதல் அறிகுறிகளாகும். இந்த அறிகுறிகளால் மலேரியா அல்லது குடற் காய்ச்சல் நோயென தவறாக எண்ணப்படுவதுண்டு. பின்னர் நோய் தீவிரமாகி குருதி இழக்கத் தொடங்குகின்றனர். இந்நிலையில் அதிர்ச்சி, குறைந்த குருதி அழுத்தம், விரைவான நாடித்துடிப்பு (இதயத் துடிப்பு), மற்றும் உறுப்புகளுக்கு குறைந்த குருதி வழங்கல் ஆகியன அறிகுறிகளாகும். இவற்றால் உறுப்புக்கள் செயலிழக்கத் துவங்குகின்றன. இதனை உறுப்பு செயலிழப்பு என்கின்றனர்.
மேலும் நோயாளியின் உடலை இறுக்கமாக்குவதால் படுக்கையிலேயே இருக்க வேண்டியதாக உள்ளது.

### சிகிச்சை

இந்த நோய் தீ நுண்மத்தால் உண்டாவதால் மருந்துகள் இல்லை. ஆயினும் நோயாளிகளுக்கு நோயைத் தாங்க தகுந்த மருத்துவ ஆதரவு அளித்தால் உடலின் எதிர்ப்பாற்றலால் பலர் உயிர் பிழைக்கின்றனர். எபோலா நோயாளிகளுக்கு வயிற்றுப்போக்கு, வாந்தி மற்றும் குருதி இழப்பினால் நேர்ந்த நீர்ம இழப்பைச் சரிகட்ட அவை தொடர்ச்சியாக கொடுக்கப்பட்டு வர வேண்டும். மருத்துவமனையில் சிரைவழி நீர்மங்கள், குருதி ஆகியனவற்றைக் கொடுப்பதுடன் குருதி அழுத்தம், சுற்றோட்டத் தொகுதி சீர்மை ஆகியவற்றிற்கான மருந்துகளும் அளிக்கப்படுகிறன.
ஒரே நேரத்தில் பலர் எபோலா வாய்ப்பட்டால் அதனை தடுக்க மருத்துவர்களும் அரசும் விரைந்து செயல்படுகின்றனர். நோயுற்ற மக்களை தனிமைப்படுத்தி மற்றவர்களுக்குப் பரவாமல் தடுக்கின்றனர். நோயாளிகள் வெளியேற்றும் நீர்மங்கள் நோய் பரவாதவாறு அகற்றப்படுகின்றன.




எபோலா தீ நுண்மத்திற்கான தடுப்பு மருந்து கண்டறிவதற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முயற்சித்து வருகின்றன. தற்போது எபோலா தாக்கம் அதிகரித்துள்ள மேற்கு ஆபிரிக்க நாடுகளில் சில மருத்துகள் பரீட்சிக்கப்பட்டு வருகின்றன.

*நன்றி - கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவில் இருந்து.*

பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 05 வியாழக்கிழமை (21.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 268

# கூட்டமைப்பை நாடாளுமன்றுக்குள் அனுமதித்தமை அரசின் மகாதவறு

## றொஹான் குணரட்ண தெரிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 21

**ஆயுதப் போராட்டத்துடன் நெருங்கிய தொடர்புடைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அரசியல் நீரோட்டத்தில் இணைத்து, அவர்களை நாடாளுமன்றத்துக்குள் அனுமதித்து அரசு மாபெரும் தவறிழைத்துவிட்டது. இது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) ஆகியோருக்கும் பொருந்தும் என சர்வதேச தீவிரவாதம் தொடர்பான நிபுணரும் பேராசிரியருமான றொஹான் குணரட்ண தெரிவித்தார்.**



அரசியலுக்குள் இனம், மதங்களை உட்புகுத்துவதும் சிங்கள, தமிழ்த் தேசியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பதும் நாட்டை அழிவுப் பாதைக்கே இட்டுச்செல்லும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

வட இந்தியாவுடன் உறவுகளைப் பலப்படுத்துவதுபோல தென்னிந்தியாவுடனான உறவையும் இலங்கை அரசு பலப்படுத்தவேண்டும். இலங்கை - இந்திய உறவில் தமிழகத்தின் பங்கு முக்கியமானது என்றும் பேராசிரியர் றொஹான் குணரத்தன சுட்டிக்காட்டினார்.

'மோடியின் தலைமைத் துவத்தின்கீழ் இலங்கை - இந்திய உறவு' என்ற தலைப்பில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு.

**இலங்கை - இந்திய உறவு**

இலங்கை - இந்திய உறவு வரலாற்றுக் காலம் முதல் இன்றுவரை தொடர்கிறது. ரஜீவ் காந்திக்குப் பின்னர் இந்தியாவின் சிறந்ததொரு தலைவராக மோடி உருவாகியுள்ளார். அரசியல், பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அப்பாற்சென்று பொருளாதாரம் குறித்தும் தனது மூன்றாவது கண்ணூடாக தூரநோக்குடன் மோடி சிந்திக்கின்றார். தனது பதவியேற்பு நிகழ்வில் சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்து தனது தலைமைத்துவத்தின் சிறப்பை வெளிப்படுத்தினார். சார்க் நாடுகளின் கூட்டமைப்பை மோடி சிறந்த முறையில் கட்டியெழுப்புவார். இந்தியாவுடனான வரலாற்று உறவை மேம்படுத்திக்கொள்வதற்கு இது சிறந்த சந்தர்ப்பமாகும்.

இலங்கை - இந்திய உறவில் தமிழ்நாட்டின் உறவு மிக முக்கியமானதாகும். தமிழகத்தின் பிரதான அரசியல் கட்சிக

(22ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு கோவில்களில் ஒரே இரவில் திருட்டு

### சுதுமலை வடக்கில் சம்பவம்

வலி.தென் மேற்கு, ஒக்.21

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் ஒரே இரவில் அருகருகே இருந்த நான்கு ஆலயங்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த தங்கக் குடை, தங்கத் தாலி, தங்கப் பொட்டுக்கள், வெள்ளி அங்கிகள் உட்பட பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

அடியார்கள் மத்தியில் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ள இந்தத் துணிகரமான திருட்டு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு சுதுமலை வடக்குப் பகுதியில் அமைந்துள்ள சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

சுதுமலை வடக்கு புவனேஸ்வரி அம்பாள், சிவன், முருகன், வைரவர் ஆகிய நான்கு ஆலயங்களுமே திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகின.

சிவனாலயத்தின் முன்புறத்திலிருந்த இரு கதவுகளையும் உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த சிவபெருமானுக்கு அணியும் வெள்ளி அங்கிகள், அம்பாளுடைய தங்கத்தாலி,

(22ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் 1,500 வெற்றிடங்கள் 98 தாதியர் மட்டுமே நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 21

வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 500 தாதியர்களுக்கான வெற்றிடம் உள்ள நிலையில் 98 தாதியர் வெற்றிடங்களே தற்போது வடக்கு மாகாணத்தில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு வடக்குக்கு நியமிக்கப்பட்டுள்ள 98 தாதியர்களும் இந்த வார இறுதியில் தமது கடமைகளைப் பொறுப்பேற்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள சகல மாகாண சபைகளின் செயலாளர்களுடனான கலந்துரையாடல் கடந்த திங்கள்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதன் போது ஒவ்வொரு மாகாணத்தின் சுகாதார நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாகாணங்களிலும் ஏற்படும் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாகாணமும் ஒவ்வொரு விதமாகச் செயற்படாமல் சகல மாகாணங்களும் ஒரே விதத்தில் மருந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனைப் போன்று ஆயிரம் வைத்திய

(22ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் டில்லிப் பயணம் இலங்கை அரசுக்குச் சாட்டையடி

### சுப்பிரமணியன் சுவாமி கோமாளி என்கிறார் மனோ

யாழ்ப்பாணம், ஓக. 21

இந்தியாவில் ஒரு நகர சபை உறுப்பினராகக் கூட மக்களின் வாக்குகளை பெறாத, பெற முடியாத சுப்பிரமணிய சுவாமியை இங்கே அழைத்து வந்து, ஊதிப் பெருப்பித்துக் காட்டி நாடகமாடியவர்களுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய பயணம் நல்ல ஒரு சாட்டையடி என்று ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சுப்ரமணியன் சுவாமி என்ற ஒரு கோமாளியை இங்கே அழைத்து வந்து, அவரை இந்திய அரசின் பிரதிநிதி என்று, அப்பாவிச் சிங்கள மக்கள் மத்தியில் உருவகப்படுத்திக் காட்ட, இலங்கை அரசால் முடியுமானால், இந்திய அரசின் கதாநாயகனான நரேந்திர மோடியைச் சந்தித்து, 13 ஆவது திருத்தம் தொடர்பாகவும், அதை மென்மேலும் விரிவாக்குவது தொடர்பாகவும் உரையாட

(22ஆம் பக்கம் பார்க்க)

## 15 வயது மாணவனால் சிறுமி துஷ்பிரயோகம்

கிளிநொச்சி, ஓக. 21

கிளிநொச்சி பொன்நகர் மத்தி பகுதியில் 8 வயது மாணவியொருவர் அதே இடத்தைச் சேர்ந்த 15 வயது மாணவன் ஒருவனால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சிப் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் பொன்நகர் மத்திப் பகுதியில் நடந்துள்ளது.

தனியார் வகுப்புக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த குறித்த மாணவியைக் குறித்த மாணவன் பாலியல் துஷ்பிரயோத்துக்கு உட்படுத்தினார் எனப் பெற்றோரினால் கிராம அலுவலர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஆகியோருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபருக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 21

காரணம் எதுவும் குறிப்பிடாமல் பழிவாங்கலுக்காக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துக் கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்ட

(22ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வாசி ஒருவர் தனுஸ்கோடியில் கைது

### இலங்கை வர முயன்றவேளை

இராமநாதபுரம், ஓக. 21

தனுஸ்கோடியில் இருந்து இலங்கைக்குப் படகு மூலம் செல்ல முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன்தொடர்புடைய முகவரைக் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

இராமநாதபுரம் மாவட்டம் தனுஸ்கோடிப் பகுதியில் பொலிஸார் நேற்று அதிகாலையில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுகொண்டிருந்தனர். இதன் போது கடற்கரை ஓரமாகச் சந்தே

(19ஆம் பக்கம் பார்க்க)

## அழகு சிகிச்சை நிலையங்கள் குறித்து புதிய சட்டம் தேவை

### ஹெல உறுமய வலியுறுத்து

கொழும்பு, ஓக.21

அழகு சாதனப்பொருள்கள் மற்றும் அழகு சிகிச்சை நிலையங்கள் குறித்து நாட்டில் புதிய சட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும் என்று அரசின் பங்காளிக்கட்சியான ஜாதிக ஹெல உறுமய நேற்று வலியுறுத்தியது.

(22ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச இஸ்லாமிய அமைப்புகளுடன் இலங்கை முஸ்லிம் குழுக்கள் தொடர்பு

### கோத்தபாய எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 21

"முஸ்லிம் குழுக்கள் சில, சர்வதேச இஸ்லாமிய அமைப்புகளுடன் தொடர்பைப் பேணி வருகின்றமை தொடர்பில் எமக்குத்தகவல் கிடைத்துள்ளது. இவர்களது நடவடிக்கைகள் குறித்து நாம் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம்."

இவ்வாறு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சிக்கல்களுக்கான நடவடிக்கை மையத்துக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த அமைப்பும் இது தொடர்பாக தனது கவனத்தைச் செலுத்த வேண்டும் என்றும்அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இனக்குழுக்களிடையே மதவாதம் தலைதூக்குவதே போருக்குப் பிந்திய இலங்கையின் கரிசனைக்குரிய விடயமாக உள்ளது. அதற்குத் தீர்வு காணாவிட்டால் எதிர்காலத்

(22ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் பொலிஸார் படுகாயம்

யாழ்ப்பாணம், ஓக. 21

மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸார் சறுக்குண்டு விழுந்து படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். கொழும்புத்துறைப் பகுதியில் இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் காங்கேசன்துறை பொலிஸ்

(22ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலத்திரனியல் அறிக்கை வெளியீடு இன்று

தென்மராட்சி, ஓக.21
சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த மே மாதம் நடத்தப்பட்ட இலத்திரனியல் முறையில் குடிமக்கள் அறிக்கை அட்டை தயாரித்தல் தொடர்பான இறுதி அறிக்கை வெளியீடும், 2015 இல் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பான முன்மொழிவுகள் குறித்த அறிக்கை வெளிப்படுத்தலும் இன்று மாலை 5 மணிக்கு சாவகச்சேரி நகர சபை பொன் விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இலங்கை உள்ளூராட்சி திணைக்களமும், ஆசியா மன்றமும் இணைந்து உள்ளூராட்சிச் சபைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர் மூலம் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று பெற்ற தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கைகளே வெளியிடப்படவுள்ளன.
நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அடுத்த வருடம் (2015)சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பான முன்மொழிவுகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நகர சபையின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குமாறு செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார்.
பெறப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் மின்சாரம், சுகாதாரம், நீர் விநியோகம், மழைநீர் வடிகால்கள், திண்மக் கழிவு, வீதிகள் பராமரிப்பு, தாய் சேய் சிகிச்சை நிலையங்களுக்கான வசதி, நூலக சேவை, மயானங்கள், விளையாட்டு மைதானம் போன்றவற்றின் அபிவிருத்திகளும் எதிர்காலச் செயற்பாடுகளும் பற்றிய இறுதி அறிக்கை வெளியிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வடக்கு - கிழக்குத் தமிழர்கள் புலனாய்வாளர் கண்காணிப்பில்

## தேசிய சமாதானப் பேரவை கண்டனம்

கொழும்பு, ஓக.21
போர் முடிவுக்கு வந்த பின்னரும் சீருடை தரித்த படையினரும், சாதாரண உடையில் திரியும் புலனாய்வு உத்தியோகத்தர்களும் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வசிக்கும் பொது மக்களின் அன்றாடச் செயற்பாடுகளைக் கண்காணித்து வருவதாகப் பரவலாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.
திருமண வைபவம், பூப்புனித நீராட்டு வைபவம், நினைவு கூரும் நிகழ்வுகள், கலந்துரையாடல்கள், சிவில் சமூகத்தினரால் ஒழுங்கு செய்யப்படும் பயிற்சிப் பட்டறைகள் என்பன இடம்பெறும் சந்தர்ப்பங்களில் அதில் கலந்து கொள்ளும் தாம் படையினராலும் புலனாய்வுப் பிரிவினராலும் கண்காணிக்கப்படுவதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.
இது தொடர்பாக தேசிய சமாதானப் பேரவை தெரிவிக்கையில்;
கடந்த மாதம் தேசிய சமாதான மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு, நடத்தப்பட்ட மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகள் படையினரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டன. இவற்றில் இரண்டு வடக்கு - கிழக்கிலுள்ள முன்னைய போர் வலயங்களுக்கு வெளியே இடம்பெற்றுள்ளன.
கண்டியில் அமைந்துள்ள மதிப்பு வாய்ந்த சிவில் சமூக அமைப்பொன்றின் மண்டபத்தினுள்ளே மதம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நடத்தினோம். புலனாய்வுப் பிரிவினர் பொதுமக்கள் போன்று மண்டபத்தினுள் நுழைந்து அங்கு விவாதிக்கப்பட்ட விடயங்களைப் பதிவு செய்வதாக எமக்குத் தகவல் கிடைத்தது.
காலியில் நாம் ஒரு நிகழ்வை நடத்தினோம். அதில் சகல சமூகங்களையும் சேர்ந்த சிறுவர்களும், பெற்றோரும் கலந்து கொண்டிருந்தனர். நாம் உள்ளூர் பொலிஸாரையும் அங்கு அழைத்ததோடு நகர மேயருக்கும் அது குறித்து அறிவித்திருந்தோம்.
ஆனால் வேறொரு பொலிஸ் குழுவினர் அங்கு வந்து நிகழ்வு தொடர்பாக ஆராய்ந்தனர். உள்ளூர் பொலிஸார் நிகழ்வு தொடர்பாக விரவமாகக் கூறிய பின்னர் அவர்கள் அங்கிருந்து அகன்று சென்றனர்.
கிழக்கு மாகாணத்திலுள்ள அட்டாளைச்சேனையில் இளைஞர்களுக்கான நட்புறவு முகாம் ஒன்று எம்மால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாம் இது தொடர்பாக உள்ளூர் பொலிஸாருக்கும், உள்ளூராட்சி மன்ற நிர்வாகத்துக்கும் தெரியப்படுத்தியிருந்தோம். ஆனால் அவர்கள் அங்கு பிரசன்னமாகி இருந்தும் கூட, சீருடை தரித்த இராணுவத்தினர் ஆயுதங்களுடன் அங்கு வந்து அந்த நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.
தேசிய சமாதானப் பேரவை போருக்குப் பிந்திய சூழ்நிலையில் நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.
இதேவேளை -
வடக்கு - கிழக்கில் வாழுகின்ற மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டுவதற்கான உதவிகள் அவசியமாகத் தேவைப்படுகின்றன. வடக்கு - கிழக்கில் வாழும் மக்களையும் உள்ளடக்கிய இணைந்த ஒரே நாடு இது என்ற சிந்தனை உருவாக இது வழிவகுக்கும். மதங்களுக்கு இடையிலான நிகழ்வுகளை தேசிய சமாதானப் பேரவை அனைத்து மதங்களையும் சேர்ந்த மதகுருமார்களுடன் இணைந்தே நடத்தி வருகின்றது. இதனைக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவும், தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டமும் பரிந்துரை செய்துள்ளன. இவை இரண்டும் அரசினாலேயே செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மானிப்பாய் நகரை அழகுபடுத்தும் நடவடிக்கையில் படையினர்

வலி.தென்மேற்கு, ஓக.21
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மானிப்பாய் பட்டினத்தை அழகுபடுத்த முன்வந்துள்ள பாதுகாப்புப் படையினர் வீதியோரங்களிலுள்ள குப்பை கூளங்களை அகற்றித் துப்புரவு செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.
நான்கு உப அலுவலகங்களைக் கொண்ட வலி.தென்மேற்குப் பிரதேச சபை விரைவில் நகர சபையாகத் தர முயர்த்தப்படவுள்ளது. இந்த நிலையில் குறிப்பாக குறித்த பிரதேசத்திலுள்ள பிரதான வீதிகள் துப்புரவு செய்யப்படாததால் வீதியோரங்களில் புற்கள் வளர்த்திருப்பதுடன் திண்மக் கழிவுகளும் சேர்ந்துள்ளன.
அதை அவதானித்த பாதுகாப்புப் படையினர் மானிப்பாய் பட்டினத்தையும், மானிப்பாய் கிராமத்தையும் உள்ளடக்கிய பிரதான வீதியையும் துப்புரவு செய்ய முன்வந்துள்ளனர்.
வீதியோரங்களிலுள்ள புற்தரைகளை வெட்டி திண்மக் கழிவுகளை அகற்றுவதிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.
இதேவேளை -
பிரதான வீதியோரங்களிலுள்ள சுற்று மதில்களில் ஒட்டப்படும் சுவரொட்டிகள் தொடர்பிலும் அவற்றை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்தும் வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளரிடம் சுட்டிக்காட்டிய பாதுகாப்புப் படையினர் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு பிரத்தியேகமான இடத்தை ஒதுக்குமாறும் தெரிவித்துள்ளனர். (வ-115)

## கூட்டம்

தென்மராட்சி, ஓக.21
சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டமும் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள சங்கக் கட்டடத்தில்' இடம்பெறும்.
தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் திருமதி சுதாகர் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் கலந்து கொள்வார். (வ-9)

## விபத்துக்களில் சிக்கி நால்வர் காயம்

தென்மராட்சி, ஓக.21
வெவ்வேறு இடங்களில் வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்த நால்வர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகலில் இடம்பெற்றுள்ளன. நுணாவில் மத்தி ஏ-9 வீதியில் வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்றை மோதியதில் நுணாவில் மேற்கைச் சேர்ந்த கந்தன் தயாபரன் (வயது-39) என்பவரும், சாவகச்சேரி நகர சபையிலிருந்து அலுவலக நிமித்தம் யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்குச் சென்ற அ.அஜிந்தன் (வயது-33) என்பவரும், மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்குச் சைக்கிளில் சென்ற மாணவியை வேகமாக வந்த கார் மோதியதில் சரசாலை தெற்கைச் சேர்ந்த சபாரத்தினம் சங்கீதா (வயது-16) என்பவரும்-
நல்லூர் கைலாய பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிள் மோதி ஓட்டோ தடம்புரண்டதில் நீர்கொழும்பைச் சேர்ந்த சுரேந்திரநாதன் பிருந்தா (வயது-38) என்பவருமே இவ்விதம் காயமடைந்தவர்களாவர். (வ-9)

**தேவை**
நல்ல குருத்தோலை சார்வு தேவை.
வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.
அண்ணா தொழிலகம்
நாவலர் வீதி, இணுவில். (சி/16101) (7.6.3)

**தவறிவிட்டது**
யாழ்.நகர்ப் பகுதியில் கடந்த 15.08.2014 அன்று தேவராசா வினோபாஜி, ஆனந்தா வீதி, மானிப்பாய் என்னும் முகவரியுடைய எனது தேசிய அ.அ(890732941V) மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் TP. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(51027) (12.3.6)
தொடர்பு: 077 369 9828

**நல்லூர் உற்சவகால விசேட விலைக்கழிவு**
நல்லூர் திருவிழாவை முன்னிட்டு எமது நல்லூர் கிளையில் மட்டும் மலிவு விலையில் அண்ணா உற்பத்திப் பொருள்கள் (நூடில்ஸ் பைக்கற், மல்லிக் கோப்பி ரின், ஜீவாகாரம், டிப்பிடிப்பி பைக்கற், சாம்பிராணிப் பெட்டி) 5 பொருள்கள் அடங்கிய பொதி. ஒன்று 250/= விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
அண்ணா கோப்பி காட்சியறை
பருத்தித்துறை வீதி, நல்லூர். (சி/16102) (7.6.3)
(நல்லூர் சிவன் கோயில் பின்புறம்)

**7ஆம் ஆண்டு நினைவலைகள்**



அமரர்
பதஞ்சலி
ஆனந்தமகேஸ்வரன்
திதி: 21.08.2014
மண்ணில் 04.03.1941
விண்ணில் 07.09.2007

அன்பு காட்டி அரவணைத்து புன்னகையுடன் உறவாடி
பண்புடனே எமை வளர்த்துத் தரணியிலே உயரவைத்து
இன்பமுடன் நாம் வாழ வழிகாட்டிய அப்பாவே!
என்றும் உங்கள் நினைவுகளுடன்

ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்
'மயூரபவனம்'
உடுவில்,சுன்னாகம்.
குடும்பத்தினர்.

**நினைவஞ்சலி**

18ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு



தோற்றம் 01.08.1930
மறைவு 21.08.1996
திருமதி பாக்கியரெட்ணம் அந்தோனிப்பிள்ளை



தோற்றம் 24.12.1919
மறைவு 02.09.2013
அமரர் பேதுரு அந்தோனிப்பிள்ளை

எமையீன்ற எமதன்புப் பெற்றோரே! அம்மா ஐயா என்றழைத்து
அன்பு முகம் பார்த்து ஆறுதலடைந்தோம் இன்று தங்கள் இன்முகம் காணாது
தினமும் பிரிவுத் துயரில் தவிக்கின்றோம் உங்கள் குரல்களும் நினைவுகளும்
எம்மனதை விட்டு என்றும் நீங்காது. ஆண்டவர் சந்நிதியில் இளைப்பாறுவீர்களாக.

திருமதி சில்வெஸ்ரர்
மூர் வீதி, மன்னார்.
துயரத்துடன்
பிள்ளைகள்.
(51039)(45.6)

**31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு**



தோற்றம் 02.03.1962
மறைவு 23.07.2014

அமரர் கந்தையா தேவராசா

கடந்த (23.07.2014) புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (22.08.2014) வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

தூதாவளை,
கரணவாய்,
கரவெட்டி
குடும்பத்தினர்.

# தொற்றா நோய் குறித்த சிகிச்சை

தென்மராட்சி, ஓக.21

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவுகளில் 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான தொற்றா நோய் தொடர்பான சிகிச்சை நிலையங்கள் அந்தந்த பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகள் தோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பிரிவுகளிலும் உள்ள 35 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் நோய்த் தடுப்பு முறை பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கச்சாய் ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சிகிச்சை நிலையத்தில் பெரும் எண்ணிக்கையான ஆண்களும்பெண்களும்கலந்துகொண்டு இரத்த அழுத்தம், நீரிழிவு, கண் மற்றும் பல்வேறு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வு இன்று வரணியில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மாடுகளைக் கடத்தி விற்பனை செய்தவர்கள் வசமாக மாட்டினர்

பளை, ஓக.21

பளைப் பிரதேசத்தில் நீண்ட காலமாக மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகளைக் கடத்தி விற்பனை செய்து வந்த இருவர் நேற்று முன்தினம் பளைப் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டனர்.

பளை தம்பகாமம் பகுதியில் ரோந்து சென்ற பொலிஸார், இரு நபர்கள் மூன்று மாடுகளை நடத்திக் கொண்டு செல்வதை அவதானித்து விசாரித்த போது குறிப்பிட்ட மாடுகளை அவர்கள் திருடிச் செல்வது உறுதியாகியது.

குறித்த இருவரையும் நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பளைப் பிரதேசத்தில் நீண்ட காலமாவே தாம் இவ்விதம் மாடுகளைத் திருடி விற்பனை செய்ததை குறித்த நபர்கள் ஒப்புக் கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (வ-9)

**அற்றோணித் தத்துவத்தை ரத்துச் செய்தல்**

பாலசிங்கம் செல்வரத்தினமும் பெண் சியாமளா இன்பமதியும் ஆகிய நாங்கள் 2003ஆம் ஆண்டு ஆடி மாதம் 16ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் அ.க.நடராசா முகதாவில் 9634ஆம் இலக்கத்தில் கந்தசாமி பாலசிங்கத்துக்கு வழங்கிய அற்றோணித் தத்துவத்தை இத்தால் ரத்துச் செய்கின்றோம். விளம்பரத் திகதியில் இருந்து அற்றோணித் தத்துவத்தின் மூலம் அவரினால் செயற்படுத்தும் எந்த ஒரு மாற்றமும் செல்லுபடி ஆகாது என்பதை இத்தால் அறியத் தருகிறோம்.

பாலசிங்கம் செல்வரத்தினம்

(50817) (7.6.3)

**பணம் வசூலிப்பாளர் தேவை**

**சிங்களம் தெரிந்திருத்தல் வேண்டும்.**

மாதாந்தம் ரூபா 25,000/= தொடக்கம் ரூபா 40,000/= வரை சம்பாதிக்கலாம். உணவு, தங்குமிடம் இலவசம். நேரில் வரவும்.

**சுஜித் என்ரபிறைசஸ்**

பருத்தித்துறை வீதி,

நுணாவில் சந்தி, சாவகச்சேரி.

021 227 0586

(சி.16110) (45.6)




வார இறுதி வகுப்புகளும் ஆரம்பம்.

**Why** Choose **BCAS for QS & Civil Engineering ?**

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- 15 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.

021 221 9910 / 077 710 2131

www.bcas.lk

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

காலை: கஜவல்லி மகாவல்லி உற்சவம்
மாலை: வேல்விமானம்

# நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தி வரும் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு- 'ஆலயத் தொண்டும் வழிபாடும்' என்ற தலைப்பில் மு.நித்தியானந்தனின் சிறப்புச் சொற்பொழிவும், கோண்டாவில் கைலாசநாத வேதசிவாகம அறநெறிப் பாடசாலை, பெரியபுலம் வடகேசரிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும்- திருமதி புஸ்பமலர் யோகராஜனின் மாணவர்கள் வழங்கும் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

♦♦♦

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு - பாட்டு - திருமதி குணபூஷணம் நாகராசா, வயலின் - எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் - ஜி.கண்ணதாஸ், முகர்சிங் - என்.சதீஷ்குமார்.

♦♦♦

'பிரம்மகான சபை'யால் நல்லை ஆதீனத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு இசை அர்ச்சனை இடம்பெறும். ஏ.ஜி.சுவாமிநாதன் குழுவினர் நிகழ்வில் பங்குபற்றுவர். (ஒ)

♦♦♦

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குரு மூர்த்த ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா பக்க வாத்திய சகிதம் வழங்கும் 'கம்பராமாயணம்' தொடர் நிகழ்வில் 'விபீஷணன் சரணாகதி' இசைப் பேருரை இடம்பெறும். (ஒ)

♦♦♦

யாழ்ப்பாணம் சின்மயாமிஷனின் ஏற்பாட்டில் 'இந்துவாக வாழ்வோம்' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மிக அருளுரை ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்றைய அருளுரையின் தலைப்பு 'தியானமும் வாழ்க்கையும்' என்பதாகும். (ஒ)

# இன்னிசை நிகழ்வு

தென்மராட்சி, ஓக.21

யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகத்தின் இணைப்பு மற்றும் ஒத்துழைப்புடன் நடத்தப்படும் இந்திய மற்றும் தேசிய அம்சங்களுடன் கூடிய கலாசார நிகழ்வுடனான இன்னிசை இரவு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 7 மணிக்கு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெறவுள்ளது. (வ)

# கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக.21

வட்டு வடக்கு, சித்தன்கேணி பிரமனாச்சி தோட்ட கற்பக விநாயகர் ஆலய மஹோற்சவம் இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

ஆவணிச் சதுர்த்தி நாளான 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் சனிக்கிழமை ஆலய தீர்த்த வாரியான கணேசகுண்டத்தில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (வ)


# ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக 21

தொண்டர் ஆசிரியர்களாக நியமனம் பெற்று ஐந்து வருட சேவையைப் பூர்த்திசெய்த வன்னிப் பாடசாலைகளில் கடமை யாற்றும் ஆசிரியர்களுக்கும், யாழ்.மாவட்டத்தில் இருந்து வன்னிப் பிரதேச பாடசாலைகளுக்கு இரண்டு வருட கட்டாய சேவையில் அனுப்பப்பட்ட ஆசிரியர்களுக்குமான அவசர கலந்துரையாடலொன்று நாளை மறுதினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைமைப் பணி மனையில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் ஆசிரியர்களின் இடமாற்றம், போக்குவரத்து, நியமன வகை மாற்றம், சம்பள உயர்வு என்பவை குறித்து முக்கிய தீர்மானங்கள் மேற்கொள் ளப்படவுள்ளன.

எனவே சம்பந்தப்படும் அனைத்து ஆசிரியர்களையும் தத்தமது முதல் நியமனக் கடிதப் பிரதிகளுடன் தவறாது பங்கு பற்றுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது. (வ-4)



# சந்தனத்தின் வாசம் தந்து...

இராகம்: ஆனந்தபைரவி
தாளம்: ஆதி

பல்லவி

சந்தனத்தின் வாசம் தந்து வந்தினிக்கும் கந்தவேளே
உந்தன் எழில் காண்பதற்கே எந்தனுள்ளம் ஏங்குதையா

அனுபல்லவி

வண்ண வண்ணக் கோலத்தோடு வள்ளி தெய்வியார் அணைக்க
எண்ணம் எந்தன் கண்ணாய் நிற்க எங்கும் நிறைந்திருப்பவனே

சரணம்

வெல்லத் தமிழ்ச் சாறுடனே வேதப் பொருள் கலந்து
நல்ல உளத் தார் அமைக்கும் ஞானவடி வேலவனே
கல்வியுள்ளார் களிக்க கருணை மழை பொழியும்
நல்லை நகர் நாயகனே நாட்டின் ஒளியானவனே
கள்ளுமிழும் பூக்கலந்த கனகமணி மாலை ஆட
புள்ளிமயில் ஏறி வெள்ளிப் பூஞ்சிரிப் புதிர்ப்பவனே
தெள்ளுதமிழ்ப் பாடலெனத் தேன்சிந்தும் உன்வடிவை
அள்ளி அள்ளிப் பருகுகின்றேன் ஆசை இன்னும் தீரவில்லை

*சிற்பி.*

# வல்லமை தந்தருள வா

போரோய்ந்த பின்னும் பொழுதின்னும் பூக்கவில்லை
ஆரிடம்போய்க் கெஞ்சிடுவோம் ஆறுமுகா - தீர்வொன்று
என்றுவரும் என்று தெரியாமல் ஏங்குகிறோம்
நன்று செயும் நாளை நவில்

நல்லைக் குமரையா நம்பியுனை நாடுகின்றோம்
தொல்லையே இன்னும் தொடர்கிறதே- எல்லோர்க்கும்
அல்லலெல் லாம் நீக்கி ஆனந்த வாழ்வமைக்கும்
வல்லமை தந்தருள வா.

*சிற்பி.*

# மறந்தவிதம் ஏதையா...?

நல்லைக்குமரா என் நாயகனே உன்னுடைய
வீதி எழில்கொஞ்சும், விண்ணுயரப் பேரொலிக்கும்...
கூடிவரு மக்களிடை குண்டுப்பின் நுழையாது
காவடி, பிரதட்டை, கண்வழியும் வேண்டுதற்கோ...
சாலை சாலையெனச் சனம் வந்துன் பதிசேரும்
ஆகமுருகாவுன் அடிபணியும் மக்களிடை
மாறாத் துயருண்டு என் மன்னாநீ அறியாயோ...?
தேவர் துயர்துடைக்க தேவேநீ பொய்கையுற்றாய் - எம்
மாளாவினையறுக்க மறந்தவிதம் ஏதையா...?

*தீவக தியாகன்*




ஸ்ரீ லங்கா புத்தகசாலை
SLBD SRILANKA BOOK DEPOT
Publishers and Dealers in Educational Publications and Stationery. (Specialized for School Text, Past Papers & Work Book, Medical Book
234, காங்கேசன்துறை வீதி,
(கதிரேசன் கோயில் முன்பாக)
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2573
(சி/13889)(4.3.6)

## கண்ணகிபுரம் கிராம மக்களுக்கு போக்குவரத்து வசதிகளில்லை

கிளிநொச்சி, கண்ணகிபுரம் கிராம மக்கள் போக்குவரத்து வசதிகள் இன்றியும், போதிய அடிப்படை வசதிகள் இன்றியும் வாழ்ந்து வருகின்றனர்.
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அக்கராயன் பகுதியிலுள்ள கண்ணகிபுரம் கிராமத்தில் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.
இந்த நிலையில் இந்தக் கிராமத்துக்கான போக்குவரத்து வசதிகள் எவையும் இல்லாத நிலையில் இந்தப் பகுதி மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்காகப் போகுவரத்துச் செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
இதேவேளை - எந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதாக இருந்தாலும் கிராமத்துக்கு வெளியே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.
அத்துடன் இந்தக் கிராமத்தின் பிரதான வீதி இன்று வரை புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றது.
தற்போது தொழில் வாய்ப்பின்மை போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வாழ வேண்டிய நிலை காணப்படுவதாகவும் இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (த-55)

## மதுபோதையில் வாகனத்தை செலுத்தியவருக்கு அபராதம்

கிளிநொச்சி, ஓக. 21
கிளிநொச்சியில் மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது.
கிளிநொச்சி ஏ-9 வீதியில் மது போதையில் வாகனம் செலுத்திச் சென்ற நபரொருவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வாகப்தீனிடம் முன் னிலைப் படுத்தினர்.
இதன் போது 7ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் அவரது சாரதி அனுமதிப்பத்திரம் ஆறு மாத காலத்துக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-55)

## பல்லவராயன்கட்டு அ.த.கவை மீள இயக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஓக. 21
கிளிநொச்சி, பூநகரி கல்விக் கோட்டத்தில் மூடப்பட்டுள்ள பல்லவராயன்கட்டு அ.த.க. பாடசாலையை மீள இயக்குமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 2008 ஆம் ஆண்டு இடப் பெயர்வுடன் மூடப்பட்ட இந்தப்பாடசாலை ஓர் ஆரம்பப் பாடசாலையாகும்.
பூநகரி கல்விக் கோட்டத்தில் 30 பாடசா லைகள் உள்ளன. இந்தப் பாடசாலைகளில் 6 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.
பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாலயம், பல்லவராயன்கட்டு அ.த.க.பாட சாலை, அத்தாய் முத்துக்குமாரசாமி வித்தியாலயம், செட்டியகுறிச்சி அ.த.க.பாடசாலை, தம்பிராய் அ.த.க.பாடசாலை, கௌதாரி முனை அ.த.க.பாடசாலை என்பன இவ்விதம் மூடப்பட்டுள்ளன.
இந்தப் பாடசாலைகளில் பல்லவராயன்கட்டு அ.த.க.பாட சாலையினை மீள இயங்க வைக்குமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
இந்தப் பாடசாலை இயங்குமானால் சுமார் 100 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் நன்மை பெறுவார்கள். (த-18)

## அலுவலர் பற்றாக்குறையுடன் மாந்தை கிழக்கு பிரதேச சபை

மாங்குளம், ஓக. 21
மாந்தை கிழக்கு பிரதேச சபை வரி அறவீட்டாளர் உட்பட 37 அலுவலக உத்தியோகத்தர்களின் ஆளணிப் பற்றாக் குறையுடன் இயங் குவதனால் தமது தேவைகளை உடனடியாக நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலை நிலவுவதாகப் பொது மக்கள் கூறுகின்றனர்.
அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 6 பேர் தேவையாகவுள்ள போதிலும், ஒருவர் மட்டுமே கடமையில் உள்ளார்.
முகாமைத்துவ உதவியாளர் 5 பேர் தேவையாக உள்ள போதிலும் 3 பேர் மட்டுமே கடமையில் உள்ளனர். சுகாதார சேவை யாளர்கள் 5 பேர் தேவையாகவுள்ள நிலையில் 3 பேர் மட்டுமே இப்போது உள்ளனர். அதேபோல் வரி அறவீட்டாளர்கள் 2பேர், சாரதி 3 பேர், அலுவலக உதவியாளர் 2 பேர், காவலாளி ஒருவர், ஆயுள்வேத மருத்துவ அலுவலர் ஒருவர் , மின் இணைப்பாளர் ஒருவர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் இருவர், ஆயுள்வேத மருந்தாளர் ஒருவர் என 37 பேருக்கான ஆளணி நிரப்பப்படாதுள்ளது.
அத்துடன் பிரதேச சபையின் வரி அறவீட்டாளர் வெற்றிடம் கடந்த 7 வருடமாக நிரப்பப்படாமலேயே உள்ளது. இதனால் பிரதேச சபைக்கு வருமானம் தரக்கூடிய வரி அறவீடு பாதிப்படைகின்றது.
இதனைவிட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பற்றாக் குறை காணப்படுவதனால் கட்டடங்கள் அமைத்தல், வீதி அபிவிருத்தி என்பன பாதிப்படைந்துள்ளன.
அத்துடன் பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதில் சிரமம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.
எனவே, வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினர் இது தொடர்பாக கவனம் எடுத்து உடனடியாக ஆளணி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-422)

## கலைஞர் விவரத்திரட்டு நூல் வெளியீடு

கிளிநொச்சி, ஓக. 21
வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையுடன் பச்சிலைப் பள்ளி பிரதேச கலாசார பேரவையால் வெளியிடப்படும் பச்சிலைப்பள்ளி பிரதேச கலைஞர் விவரத்திரட்டு நூல் வெளியீடு இன்று பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி.ப.ஜெயராணி தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்துகொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாஸன், கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், பூநகரி பிரதேச செயலர் சி.சத்தியசீலன், கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தன் ஆகியோர் கலந்துகொள்வர். (வ-18)

## ஊற்றுப்புலம் பகுதியில் காட்டு மரங்கள் கடத்தல்

கிளிநொச்சி ஊற்றுப்புலம் பகுதியில் பெறுமதியான காட்டு மரங்கள் களவாக வெட்டப்பட்டுக் கடத்தப்பட்டு வருவதாகவும், இதனால் இப் பகுதியின் காட்டு வளம் அழிவடைவதாகவும் இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி ஊற்றுப் புலம் பகுதியை அண்மித்த காட்டுப் பகுதிகளிலும், புதுமுறிப்புப் பகுதிகளிலும் பெறுமதி வாய்ந்த பாலை மற்றும் முதிரை மரங்கள் சட்ட விரோதமாக வெட்டப்பட்டு வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.
இப்பகுதியில் இருக்கின்ற மக்கள் சாதாரண விறகுத் தேவைக்குக் கூட காட்டுமரங்களை வெட்ட முடியாத நிலை காணப்படுகின்றது.
அண்மையில் கூட இந்தப் பகுதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான காட்டுமரங்கள் வெட்டப்பட்டு கொண்டு செல்லப் பட்டபோது வனவளத் திணைக்கள அதிகாரிகளால் பிடிக்கப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
சில அதிகாரிகளினுடைய ஒப்புதலின்பேரிலேயே இந்தப் பகுதியிலிருந்து மரங்கள் கடத்தப்படுவதாகத் தெரிவித்துள்ள இந்தப் பகுதி மக்கள், இவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எதனையும் எடுப்பதற்கு யாரும் முன்வருவதில்லை எனவும் கூறுகின்றனர். (த-55)


TCT MULTI TRADE CENTRE

# TCT Multi Trade Centre

நிஜம் நிஜம்

**நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்டு 30.08.2014 வரை**
**ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம் வழங்கும் வியாபார சலுகைகள்!!!**

- Maam, Munchee, Littlelion, Master, Luckyland, Maliban ஆகிய பிஸ்கட் வகைகள்
- பேபி சோப், சோப் வகைகள், Cleaning பொருள்கள், சலவைத்தூள் வகைகள்.
- Delmege Soya, Ruhunu Soya, Lanka Soya, Prima Noodles வகைகள், தேயிலை வகைகள், சமபோசா
- குளிர்பான வகைகள் (Smak, Kist), (Orange Barley, Lemonade) சோடா வகைகள்.
- Oats வகைகள், Chocolate வகைகள்
- Senitary Napkin வகைகள் உட்பட

**90 வகையான பொருள்களுக்கு இலவச இணைப்புக்கள்.**

- மீன் ரின் வகைகள் Ceylonta Tea வகைகள்
- Fortune, Tasty எண்ணெய் வகைகள், MD Jam வகைகள்
- Pepsi, Marinda, Fanta, Necto, Barly, 7up ஆகிய சோடா வகைகள் Sun quick Cordial வகைகள், தண்ணீர் போத்தல் வகைகள்.
- குழந்தைகளுக்கான Soft Love Baby Diaper, Pampers Baby Diaper, Eco Plus Serviette Tissue
- Protinex, Nestomolt, Comfort, Fair & Handsome, Garnier Hair Dye

**இவற்றுடன் 80 பொருள்கள் எங்கும் இல்லாதவாறு விசேட விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது.**

**இவை தவிர 100இற்கு மேற்பட்ட பொருள்கள் தொடர்ச்சியாக விலை குறைப்பு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவது யாவரும் அறிந்ததே.**

- Enfa பால்மா வகைகள் Sustagen ஆகியவற்றில் ஏதாவது ஒன்றினை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு நாளாந்த அதிஸ்டம்.
- ரூபா 10658/= பெறுமதியான Gass, Empty, Regulator, Gass Cooker ஆகியவற்றினை ரூபா 9700/= க்கு கொள்வனவு செய்யும் வசதி
- Philips மின்குமிழ் வகைகளில் ஏதேனும் ஒரு மின்குமிழ் கொள்வனவு செய்து 100 ரூபா பெறுமதியான அன்பளிப்பு சீட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- Osram மின்குமிழ் ஒன்றினை கொள்வனவு செய்து CFL மின்குமிழ் அல்லது குமிழ் மின்குமிழ் ஆகியவற்றை உடனடியாக வெல்லும் வாய்ப்பு.
  இத்துடன் மாத இறுதி குலுக்களில் துவிச்சக்கரவண்டி ஒன்றினை வெல்லும் வாய்ப்பு.

**வெளிநாட்டிலிருந்து தாய் மண்ணை தரிசிக்க வந்துள்ள எமது உறவுகளுக்கு!!!**

- குழந்தைகளுக்கான உணவு வகைகள் (Baby Foods)
- வெளிநாட்டு உணவு வகைகளான Tulip, John West, Bornholms, Bon Appetit என்பவற்றுடன் மேலும் பல பொருள்களை எம்மிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் எமது வாடிக்கையாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையான Child & Mother Care Unit புதிதாக ஸ்தாபிக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காணப்படுகின்றது.

**உங்கள் ரிசிரிக்கு உடன் விரைந்து சலுகை மழையில் நனையுங்கள்.**

நிபந்தனை : கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

எமது வாடிக்கையாளர் உச்ச பயன்பாட்டை பெறுவதற்கு எந்த ஒரு நியாயமான வியாபார போட்டியினையும் நாம் எதிர்கொள்ள தயாராகவுள்ளோம்.

"அறப்பணியே முதல் பணி"

**ரிசிரி பல்பொருள் விற்பனை நிலையம்**
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 8025/021 745 1895/077 751 1285

(C/16115)(7.6.3)

# காஸா மீது மீண்டும் தாக்குதல்

காஸா, ஓக.21
காஸாவில் வான்வழி தாக்குதலை இஸ்ரேல் மீண்டும் ஆரம்பித்துள்ளது. போர் நிறுத்தத்தை மீறி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்தே தாக்குதல் நடத்தப்பட்டது என்று இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும், இஸ்ரேல் நாட்டுக்கும் இடையே கடந்த மாதம் 8 ஆம் திகதி ஆரம்பித்த கடும் மோதலில் இதுவரை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 4 லட்சத்து 25 ஆயிரம் பேர் மோதல் காரண மாக காஸா பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தும் இருக்கின் றனர். இஸ்ரேலுக்கும், காஸா முனையை ஆட்சி செய்து வரும் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும் இடையே நிரந்தர போர் நிறுத்தம் செய்வதற்கான முயற்சி, எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடைபெற்று வருகிறது. இவ்விரு தரப்புக்களுக்கும் இடையே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த 5 நாள் போர் நிறுத்தம், நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணிக்கு முடிவுக்கு வந்தது.



இந்தநிலையில் போர் நிறுத்தத்தை மேலும் 24 மணி நேரம் நீடிக்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்ட னர். இருப்பினும் இரு தரப்பினருக்கும் இடையே முக்கிய விவகாரங்களில் உடன்பாடு ஏற்படாமல் இழுபறி நிலைமை நீடித்தது. இந்த 24 மணி நேர போர் நிறுத் தம், இரு தரப்பினரும் தங்கள் பேச்சை நிறைவு செய்வதற்கு உரிய அவகாசம் வழங்கும் என்று பாலஸ்தீன அதிகாரி தெரிவித்தார். எகிப்தின் வேண்டு கோளை ஏற்று, பேச்சு தொடர்ந்து நடைபெறுவதற்கு ஏதுவாக மேலும் 24 மணி நேரம் போர் நிறுத்தம் நீடிக்கப்படுகிறது என்று இஸ்ரேல் தரப்பில் கூறப்பட்டது.

இந்தநிலையில் காஸாவின் மீது இஸ்ரேல் இராணுவம் வான்வழி தாக்குதலை ஆரம்பித்துள்ளது. காஸாவில் இருந்து ரொக்கெட் வீசப்பட்டதை அடுத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்துகிறது என்று அந்நாட்டின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஹமாஸ் இயக்கத்தினர் போர் நிறுத்தத்தை மீறிவிட்டனர் என்று இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது. இஸ்ரேல் தாக்குதலில் ஏற்பட்ட சேதம் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. இஸ்ரேல் நாட்டின் தெற்கு பகுதியில் உள்ளபெர்ஷீபாநகரில்ஹமாஸ் தீவிரவாதிகள் ரொக்கெட் வீசியுள்ளனர் என்று இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (வ)

## எபோலாவைக் கட்டுப்படுத்த லைபீரியாவில் ஊடரங்கு

லைபீரியா, ஓக.21
மேற்கு ஆபிரிக்க நாடான லைபீரியாவின் தலைநகரில் எபோலா வைரஸ் காய்ச்சலால் இதுவரை 460 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தநிலையில், எபோலா நோய் தலைநகரில் பரவுவதைத் தடுக்க 50 ஆயிரம் பேர் வசிக்கும் குடிசைப் பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டு ஜனாதிபதி எலன் ஜான்சன் அறிவித்துள்ளார்.

இரவு 9 மணி முதல் காலை 6 மணிவரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

பரிசோதனை நிலையில் உள்ள மருந்தை 3மருத்துவ ஊழியர்கள் . வாங்கியதாக கூறப்படுகிறது. மருந்துக்காக மக்கள் வெளியே கூடினால் நோய் பரவ வாய்ப்பு ஏற்படும் என்பதால் இந்த ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (வ)

## ஜப்பானில் நிலச்சரிவு 27 பேர் உயிரிழப்பு

டோக்கியோ, ஓக.21
ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பெய்துவரும் கனமழையால் புறநகர் மலைப் பகுதியில் நேற்றுக்காலை நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 18 பேர் உயிரிழந்தனர். 13 பேரைக் காணவில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் உள்நாட்டு தொலைக் காட்சி அறிக்கையின்படி டோக்கியோ நகரம் நீரோடைகளால் சூழப்பட்டு காட்சியளிக்கிறது. புறநகர் பகுதிகளில் உள்ள வீடுகளின் மீது பாறை விழுந்து மண் மற்றும் குப்பைகளால்மூடப்பட்டுள்ளன. மீட்புக் குழுவினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். ஹெலியில் சென்று கயிறு மூலம் நிலச் சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (வ)



ஜப்பானில் இடம்பெற்ற நிலச்சரிவில் கட்டட இடிபாடுக்குள் சிக்கியுள்ளோரை மீட்கும் பணியில் ஈடுபடுவோர். (வ)

## சீனாவின் அதிநவீன செய்மதி வெற்றிகரமாக விண்ணுக்கு



பீஜிங், ஓக.21
பூமியை மிகத்துல்லியமாக கலர் மற்றும் கிளாரிட்டியுடன் படம் பிடிக்கும் அதி நவீன ஹை-டெபனீஷன் செய்மதியைச் சீனா நேற்று முன்தினம் வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.

காவோபென்-2 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த செய்மதி வடக்கு சீனா வின் ஷான்ஷி மாகாணத்தில் உள்ள தையூன் செயற்கைக் கோள் ஏவுதளத்தில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது.

பூமியில் உள்ள சிறிய பாகத்தைக் கூட மிகத்தெளிவாக, துல்லியமாக படம் பிடித்து அனுப்பும் திறன் வாய்ந்தது இந்த செய்மதி.

இதற்காகவே தனியாக லாங் மார்ச்-4பி என்ற ரொக்கெட் கேரியரும்இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

இது பூமியில் மிக அருகில் அதாவது வெறும் ஒரு மீற்றர் தொலைவிலுள்ள பொருள்களையும் கூட அதே வண்ணத்துடன் விண்ணில் இருந்தே படம் பிடிக்கும்.

புதிதாக விண்ணில் ஏவப்பட்டுள்ள இந்தச் செய்மதி புவியியல் ஆராய்ச்சி, சுற்றுச்சூழல் மற்றும் வானிலை மாற்றம், விவசாயக் கணிப்புகள், பேரழிவு மேலாண்மை திட்டங்களுக்காக உபயோகப்படுத்த உள்ளதாக அந்த நாட்டு அறிவியல் மற்றும் பாதுகாப்பு மையம் தெரிவித்துள்ளது. (வ)

## அமெரிக்கப் பத்திரிகையாளர் தலை துண்டித்துக் கொலை

### ஈராக்கில் பயங்கரவாதிகள் அட்டூழியம்

பக்தாத், ஓக.21
ஈராக்கில், இஸ்லாமிய பயங்கரவாதிகள், அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜேம்ஸ் போலேவின் தலையைத் துண்டித்து கொடூரமாகக் கொலை செய்துள்ளனர். இதனை காணொலியாக எடுத்து வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்காவுக்கு ஒரு தகவல் என்ற தலைப்பில், அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுக்காக அந்தக் காணொலி வெளியிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கொல்லப்பட்ட போலே (வயது -40) 2012ஆம் ஆண்டு துருக்கிக்கு சென்று கொண்டிருந்தபோது சிரியாவில் ஆயுதம் ஏந்திய பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார். அந்தக் காணொலியின் இறுதியில் மற்றொரு அமெரிக்கரும் தோன்றுகிறார். அவர் சிரியாவில் இருந்து 2013 ஆம் ஆண்டு பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட பத்திரிகையாளராவார்.

ஈராக் விவகாரத்தில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று எச்சரிப்பதற்காகவே இந்த படுகொலையை பயங்கரவாதிகள் நிகழ்த்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது. (வ)

## அமெரிக்க படையை கொன்று குவிப்போம்

### ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் எச்சரிக்கை


பக்தாத், ஓக.21
அமெரிக்க இராணுவ வீரர்களை எங்கு பார்த்தாலும் கொன்று இரத்தத்தில் மூழ்கடிப்போம் என்று ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர்.

ஈராக்கில் பெரும்பாலான பகுதிகளை கைப்பற்றிவிட்ட ஐ. எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளிடமிருந்து, கிறிஸ்தவர்கள் மற்றும் யாஸிதி சிறுபான்மையின மக்களைக் காப்பாற்ற அமெரிக்கா தனது விமானப் படையினரை அனுப்பி தாக்குதலில் ஈடுபட்டிருந்தது. எனினும் தீவிரவாதிகள் சிரியா மற்றும் ஈராக்கில் தினம்தோறும் நகரங்களை கைப்பற்றி வருவதால், அமெரிக்கா தனது தாக்குதலை விரிவுபடுத்தவுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தநிலையில் தங்களுக்கு எதிராக தாக்குதலை நடத்தி வரும் அமெரிக்கர்களை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் காணொலி ஒன்றின் மூலம் கடுமையாக எச்சரித்துள்ளனர்.

அமெரிக்க இராணுவ வீரர் ஒருவரின் தலை கொடூரமாக வெட்டப்பட்டுள்ள இந்த காணொலியில், ஆங்கில தலைப்புடன் ஓடியோ அறிக்கை ஒன்றை தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர்.

அதில் அவர்கள் :-
'எங்களது வீரர்கள் யாரையாவது அமெரிக்க விமானப் படையினர் தாக்கி னால், மிக மோசமான பதில டியை நாம் கொடுப்போம். அமெரிக்கர்களை எங்கு கண்டாலும் கொன்று குவித்து, இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்போம்' என்றும் தெரிவித்துள்ளனர். (வ)




இந்தியாவில் எபோலா வைரஸ் ஒழிப்புக் குறித்த மணற்சிற்பம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் மணல்சிற்ப கலைஞர் ஒருவரால் ஒடிசாவில் அமைக்கப்பட்டுள்ள மணல்சிற்பம். (வ)

## இந்தியாவை வல்லரசாக்க ஆராய்ச்சியில் கவனம் தேவை

### விஞ்ஞானிகளுக்கு மோடி வலியுறுத்து



டில்லி, ஓக.21

இந்தியாவை ஒரு வல்லரசு நாடாக மாற்ற, இந்திய விஞ்ஞானிகள் பாதுகாப்பு குறித்த ஆராய்ச்சியில் அதீத முக்கியத்துவம் செலுத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

டில்லியில் நேற்று நடைபெற்ற பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

"உலகம் மாறிக் கொண்டிருப்பது போல, போர் முறைகளும் மாறுகில் [illegible]. இதனால், தொழில்[illegible] ன்பது தற்போது மு[illegible] நவியாக விளங்கு[illegible].

உலகம் 20[illegible] செய்ய நினைக்கும் [illegible]சயலை இந்தியா 2018 [illegible]யசெய்து விட வேண்[illegible] அதற்காக எமது வி[illegible]கள் ஆராய்ச்சியில் [illegible]னம் செலுத்தி புதிய [illegible]டிப்புக்களை உருவா[illegible]கிட வேண்டும்.

இந்தி[illegible]ன் பாதுகாப்புக்காக, பா[illegible]ப்பு குறித்த ஆராய்ச்சியில் [illegible]நீத கவனம் செலுத்த வேண்[illegible]டும்" - என்றார். (வ)

## 2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் கனிமொழி, ராசாவுக்கு பிணை



ஆ.ராசா



கனிமொழி

டில்லி, ஓக.21

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு முறைகேடாக 200 கோடி ரூபாய் பணப் பரிமாற்றம் இடம்பெற்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் கனிமொழி மற்றும் ஆ.ராசாவுக்கு பிணை வழங்கி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.

2ஜி ஸ்பெக்ட்ரம் உரிமம் வழங்கப்பட்ட விவகாரத்தில், கலைஞர் தொலைக்காட்சிக்கு பல்வேறு நிறுவனங்களிடம் இருந்து முறைகேடாக ரூ.200 கோடி பணம் வழங்கப்பட்டதாக கூறி மத்திய அமுலாக்கப் பிரிவினர் வழக்குத் தொடர்ந்தனர்.

இந்த வழக்கில் தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா, கனிமொழி எம்.பி., தயாளு அம்மாள், உள்ளிட்ட 10பேர்மற்றும்சுவான்தொலைத் தொடர்பு நிறுவனம் உள்ளிட்ட 9 நிறுவனங்கள் என மொத்தம் 19 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகையை கடந்த மே 25 ஆம் திகதி டில்லியில் உள்ள சி.பி.ஐ., தனிக்கோர்ட்டில் மத்திய அமுலாக்கப்பிரிவினர் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கில் பிணைகோரி ஆ.ராசா, கனிமொழி எம்.பி., தயாளு அம்மாள் உள்ளிட்ட 10 பேர் தாக்கல் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தனர்.

இந்த பிணை மனு மீதான தீர்ப்பை நேற்று சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் வழங்கியது.

இதில் கனிமொழி , ஆ.ராசா உள்ளிட்ட 9 பேருக்கும் பிணை வழங்கி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், ரூ 5 லட்சம் பிணைத் தொகை செலுத்தவும் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. (வ)

# அஸாமில் அரசுக்கு எதிராக கலவரம் வன்முறையில் 15 பேர் உயிரிழப்பு

கோலாகட், ஓக.21

அரசுக்கு எதிராக அஸாமில் நடைபெற்று வரும் கலவரத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் தடியடி மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். வன்முறை சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15ஆக அதிகரித்துள்ளது.

அஸாமில் இரண்டு பேர் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக கோலாகட் பகுதியில் கடந்த வாரம் போராட்டம் நடைபெற்றது. அப்போது, நாகாலாந்தைச் சேர்ந்த அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த இருவர் மீது ரவை பாய்ந்தது.

அதனையடுத்து அந்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் அரசின் மெத்தனப்போக்கை கண்டித்து கல்வீச்சு உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்கள் நடந்தது. இதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15ஆக அதிகரித்துள்ளது.



இந்த வன்முறை சம்பவங்கள் அதிகரித்ததையடுத்து, பொலிஸார் தடியடி மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். உயிரிழப்புகள் காரணமாக அஸாம் - நாகாலாந்து எல்லைப் பகுதியில் பதற்றம் காணப்படுவதால், பொலிஸார் ம[illegible]றும் எல்லைப் பாதுகாப்பு ப[illegible]டையினர் குவிக்கப் பட்டுள்ள[illegible]னர்.

இதனி[illegible]டயே, சிராங் மாவட்டத்தில் [illegible]ாதுகாப்பு படையினருடன் நடந்த துப்பாக்கி சண்டையில் போடோ லாந்து தீவிரவாதிகள் 5 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஏகே -47 ரக துப்பாக்கிகள், வெடி பொருள்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன. (வ)

# நாட்டு மக்களுக்கு போலியான கனவுகளை விற்கிறார் பிரதமர்

## சாடுகின்றார் சோனியா

பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு நாட்டு மக்களுக்குப் போலியான கனவுகளை விற்பதாகக் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

முன்னாள் பிரதமரும், அவரது கணவருமான ராஜீவ் காந்தியின் 70ஆவதுஆண்டுபிறந்த தினத்தையொட்டி டில்லியில் நடைபெற்ற தமது கட்சிக் கூட்டத்தில் உரையாற்றியபோதே சோனியா இவ்வாறு கூறினார். அங்கு அவர் கூறியதாவது:-

"ராஜீவ் காந்தியின் தொலைநோக்குக் கண்ணோட்டமும், கொள்கைகளும் எப்போதுமே எம்மிடம் உள்ளன.

மகளிருக்கான உரிமைகள் பற்றிக் குறிப்பிட்ட சோனியா, மக்கள் தொகையில் சரிபாதி யாக உள்ள பெண்களை தவிர்த்து விட்டு எந்த ஒரு நாடும் முன்னேறிவிட முடியாது என்று ராஜீவ் காந்தி அடிக்கடி கூறுவார்.

மகளிருக்கு நாடாளுமன்றத்திலும், சட்டசபையிலும் 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என ராஜீவ் எப்பொழுதும் விரும்பினார்.

மகளிர் இட ஒதுக்கீடு பிரேரணையை எமது கட்சி மாநிலங்களவையில் நிறைவேற்றியபோதிலும், சில காரணங்களால் மக்களவையில் நிறைவேற்ற முடியாமல் போய் விட்டது. இருப்பினும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற தேசிய ஜனநாயக கூட்டணி அரசை எமது கட்சி வலியுறுத்தும்.



காங்கிரஸ் கட்சி மக்களுக்கு அதிகமான நன்மைகளை செய்துள்ளபோதிலும், சில தனி நபர்கள் விரித்த வலையில் மக்கள் சிக்கிக்கொண்டுள்ளனர். 'போலியான கனவுகள்' மக்களுக்கு விற்கப்படுகிறது' என்று மோடி அரசை சோனியா கடுமையாகச் சாடினார்.

தேர்தலுக்காக காங்கிரஸ் கட்சி தனது கொள்கைகளை ஒரு போதும் விட்டுக்கொடுத்ததில்லை என்றும், வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் ஒரு அங்கம் என்றும்- கொள்கையில் உறுதியாக இருப்பதுதான் முக்கியம்' என்றும் அவர் தெரிவித்தார். (வ)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற ஆலோசனை சபை கூட்டங்களில் கலந்து கொண்டார். ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டையிலுள்ள நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் ஜனாதிபதி தலைமையில் இந்தக் கூட்டங்கள் இடம் பெற்றன. ஜனாதிபதியின் கீழ் இயங்கும் அமைச்சுக்களுடன் சம்பந்தப்பட்ட அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனை சபை, பெருந்தெருக்கள் துறைமுகங்கள் மற்றும் கடற்படை தொடர்பான ஆலோசனை சபை, நீதி மற்றும் சமாதானம் தொடர்பான ஆலோசனை சபை ஆகியவற்றின் கூட்டங்களில் பங்குபற்றுவதற்காகவே ஜனாதிபதி நாடாளு மன்றம் சென்றிருந்தார். (ற)

## 250 மில். ரூபா செலவில் 17 ஜனாதிபதி ஆணைக்குழுக்கள்

கொழும்பு, ஓக.21

2005ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் அரசு, 250 மில்லியன் ரூபா செலவில் 17 ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டபோதிலும் அவற்றில் அனேகமானவற்றின் அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி தலைவர் அனுர குமார திஸ்ஸ நாயக்கவின் கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அரசு ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை, அவை செயற்பட்ட காலம், அவற்றுக்கான செலவு போன்ற விவரங்களை நாடாளுமன்றத்துக்கு அறிவித்தது.

இவற்றின் அறிக்கைகளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென அனுர திஸ்ஸ நாயக்க கேட்ட போதும் அவ்வாறு சமர்ப்பிக்க வேண்டுமென சட்ட ஏற்பாடு இல்லையென அரசின் பிரதான கொறடாவான தினேஷ் குணவர்தன கூறிப்பிட்டார். (ற)

## எபேலா தாக்கம் தொடர்பில் பதிவாகவில்லை

*-சுகாதார அமைச்சு*

கொழும்பு, ஓக.21

எபேலா வைரஸ் தொடர்பில் இலங்கையில் எந்தப் பதிவும் பதிவாகவில்லை என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. எபோலா வைரஸ் தொற்று தொடர்பில் எவரும் பீதியடையத் தேவையில்லை எனவும் அந்த அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

ரிகிலஸ்கடவ ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்த நபர் ஒருவர் எபோலா வைரசுக்கான அறிகுறிகள் பலவற்றால் பாதிக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளதை தொடர்ந்து மக்கள் மத்தியில் எபேலா குறித்த அச்ச நிலை தோன்றியிருந்தது. இந்தநிலையிலேயே சுகாதார அமைச்சு மேற் கண்டவாறு தெரிவித்துள்ளது.

ரிக்கிலிகஸ்கட பகுதியில் உயிரிழந்த பெண் எபோலா வைரஸ் தாக்கத்தால் உயிரிழக்கவில்லை. ஆயினும் உயிரிழந்தவரின் இரத்த மாதிரி பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. முன் எச்சரிக்கை நடவடிக்கையாகவே இவ்வாறு இரத்த மாதிரி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் எலிக் காய்ச்சலால் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டுள் ளது"- என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. உயிரிழந்த நபர் இந்தியா வுக்கு சென்று திரும்பியவர் என தெரிவித்துள்ள அதிகாரிகள் அவரது குருதி மேலதிக பரிசோதனைக்காக அனுப்பட்டுள்ளது என்றும், சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர். (ற)

# அமெ.-சீனா அதிகாரப் போட்டி இலங்கைக்கு ஆபத்தாகாது

### கடற்படை அதிகாரி ரியர் அட்மிரால் டி.சீ. குணவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, ஓக.21

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான அதிகாரப் போட்டி இலங்கையைப் பாதிக்காது என்று தெரிவித்துள்ளார் இலங்கை உயர் கடற்படை அதிகாரி ரியர் அட்மிரால் டி.சீ. குணவர்த்தன.

கொழும்பில் நடைபெற்று வரும் பாதுகாப்பு கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இந்து சமுத்திர பிராந்திய வலயத்தின் ஆதிக்கத்தை பெற்றுக்கொள்ள சீனாவும் அமெரிக்காவும் முனைப்புக் காட்டி வருகின்றன. எனினும், அணிசேரா கொள்கைகளை இலங்கை பின்பற்றி வருவதால் இரு நாடுகளினதும் அதிகாரப் போட்டியால் இலங்கைக்கு பாதிப்பு கிடையாது. அனைத்து தரப்பினரது உதவிகளையும் இலங்கை வரவேற்கின்றது.

கடுமையான நிபந்தனை பிறப்பிக்காது வழங்கப்படும் உதவிகளை இலங்கை ஏற்றுக் கொள்ளும் என்ற போதிலும் அதனை, அந்த தரப்புடனான கூட்டணியாக கருதப்பட முடியாது

**கடுமையான நிபந்தனை பிறப்பிக்காது வழங்கப்படும் உதவிகளை இலங்கை ஏற்றுக் கொள்ளும் என்ற போதிலும் அதனை, அந்த தரப்புடனான கூட்டணியாக கருதப்பட முடியாது.**

சட்டவிரோத ஆள்கடத்தல் மற்றும் போதைப் பொருள் கடத்தல் ஆகியனவே இலங்கை எதிர்நோக்கி வரும் கடற் பாதுகாப்பு சவால்களாகும். பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி சேகரிக்கும் நோக்கிலேயே போதைப் பொருள் வர்த்தகம் மேற்கொள்ளப்படுகின்றது.

பெரும் எண்ணிக்கையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் சட்டவிரோத ஆள் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். புலி உறுப்பினர்கள் வெளி நாடுகளில் அடைக்கலம் பெற்றுக் கொண்டுள்ளனர். அவர்கள் அந்தந்த நாடுகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## இந்தியாவுக்கு எதிராக செயற்படாது இலங்கை

கொழும்பு, ஓக.21

தீவிரவாதிகள் இந்தியாவுக்கு எதிராக இலங்கையைக் களமாக பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது என்று தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்.

இந்தியாவின் மீது தாக்குதல் நடத்த இலங்கையைப் பயன்படுத்திக்கொள்ள எந்த சந்தர்ப்பத்திலும் இடமளிக்கப்பட மாட்டாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பினர் இலங்கையூடாக இந்தியாவுக்குள் ஊடுருவுகின்றனர் என்று குற்றச்சாட்டப்பட்டுள்ள நிலையிலேயே வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## மாகாபொலவை அதிகரிக்குமாறு மாணவர் கையெழுத்து வேட்டை

கொழும்பு, ஓக.21

பல்கலைக் கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொல மற்றும் கல்வி ஊக்குவிப்புப் புலமைப் பரிசில் கொடுப்பனவுகளை அதிகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பல்கலைக்கழக மாணவர்களால் நாடளாவிய ரீதியில் கையெழுத்துப் பெறும் போராட்டம் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது 2 ஆயிரத்து 500 ரூபாவாக வழங்கப்படும் மகாபொல புலமைப் பரிசில் மற்றும் 2 ஆயிரம் ரூபாவாக வழங்கப்படும் கல்வி ஊக்குவிப்புப் புலமைப் பரிசில் ஆகியவற்றை 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு கோரியே மாணவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் கையெழுத்து மனு, உயர் கல்வி அமைச்சு, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் பல்கலைக்கழகத்தில் இணைந்தவுடன் கிடைப்பதில்லை. 13 மாதங்கள் கடந்த பின்னரே கிடைக்கின்றன. இதனால் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். புலமைப் பரிசில் கொடுப்பனவுக்கான பெற்றோரின் வருமான எல்லை கடந்த 10 ஆண்டுகளாக மாற்றப்படவில்லை. அதனால் தகுதியுள்ளமாணவர்களுக்குபுலமைப் பரிசில் கிடைப்பதில்லை - போன்றவற்றையும் மாணவர்கள் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர். (ற)

## பொன்சேகாவின் முன்னாள் செயலருக்குப் பிடியாணை

கொழும்பு, ஓக.21


ஜனநாயக்கட்சியின் தலைவரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவின் முன்னாள் செயலாளர் ஹரிபிரய டி சில்வாவுக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய வீரர்களுக்கு பாதுகாப்பளித்து அவர்களை, அரச விரோத செயற்பாடுகளுக்காக பயன்படுத்தினர் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் முன்னிலையாகாததைஅடுத்தே நீதிவான் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

சரத் பொன் சேகா மற்றும் அவருடைய முன்னாள் செயலாளர் ஹரிபிரய டி சில்வா ஆகிய இருவருக்கு எதிராகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறுகின்றது.

நேற்றைய விசாரணையின் போது ஹரிபிரய டி சில்வா சமுகமளிக்காமையை அடுத்தே நீதிவான் ரோஹினி வல்கம மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார். (ற)

## மேர்வின் சில்வா ஒரு கோமாளி: கலகொட அத்தே ஞானசார தேரர் கூறுகின்றார்





கொழும்பு, ஓக.21

பொதுமக்கள் தொடர்பு அமைச்சர்மேர்வின்சில்வாஒருகோமாளி என்று கூறியுள்ளார் பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

மன்னராட்சிக் காலங்களில் இவ்வாறான கோமாளிகள் அரசவையில் இருந்தார்கள். அவர்கள் மக்களையும் மன்னரையும் மகிழ்ச்சி படுத்துவதனை முதன்மைநோக்கமாகக்கொண்டவர்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"பௌத்த பிக்குகளை விமர்சனம் செய்வதற்கு முன்னதாக மேர்வின் சில்வா அமைச்சர் தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக தனது புதல்வரை உரிய முறையில் வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனையவர்களை குற்றஞ் சுமத்துவதனை நிறுத்தி அமைச்சரும் அவரது புதல்வரும் தங்களை திருத்திக்கொள்ள வேண்டும்.

யாருக்கு எவ்வாறான மொழியில் எந்த வகையிலான வார்த்தைகளை பயன்படுத்த வேண்டும் என்பது நன்றாகத் தெரியும். அது குறித்து எவரும் அறிவுரை ஆலோசனை வழங்கத் தேவையில்லை"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)



## இன்றைய பேஸ்புக் தத்துவம்

ஆண்கள் பொய் சொல்ல மாட்டார்கள்! பெண்கள் நிறைய கேள்விகள் கேட்காமல் இருந்தால்...

# ரிலாக்ஸா வாசியுங்க....

# அவள் வருவாளா..?



ஜோதிகாவுக்கு கதாபாத்திரம் பிடித்தால் நிச்சயம் நடிப்பார். என் படத்தில்தான் அவர் நடிக்க வேண்டும் என்ற எந்த எண்ணமும் எனக்கு இல்லையென சூர்யா தெரிவித்துள்ளார்.
ஜோதிகாவுக்கு பல படங்களில் நடிக்க அழைப்பு வருகிறது. ஆனால் அவர் ஏற்காமல் விலகினார். அண்மையில் இயக்குநர் பாண்டிராஜ் தான் இயக்கும் புதிய படத்தில் நடிக்க ஜோதிகாவிடம் கேட்டிருக்கிறார். அதற்கு இன்னும் அவர் பதில் சொல்லவில்லை.
இந்த நிலையில், ஜோதிகா மீண்டும் நடிக்க வருவாரா? என்று சூர்யாவிடம் கேட்டதற்கு பதில் அளித்துள்ளார்.
அவர் இது தொடர்பில் கூறியதாவது,
பச்சைக்கிளி முத்துச்சரம், மொழி போன்ற படங்களில் ஜோதிகா பிரமாதமான கதாபாத்திரங்களில் நடித்திருந்தார். அவர் மீண்டும் நடிக்க வருவதாக இருந்தால் அது சவாலான வேடமாகவும், அர்த்தமுள்ள வேடமாகவும் இருக்க வேண்டும். அவருக்கு பிடித்த கதை அமைந்தால் நிச்சயம் நடிக்க வருவார்.
என் படத்தில்தான் அவர் நடிக்க வேண்டும் என்ற எந்த எண்ணமும் எனக்கு இல்லை என்றும் சூர்யா குறிப்பிட்டுள்ளார்.

பையன் ஒருத்தன் பேஸ்புக்கில் ஒரு பொண்ணுடன் 'சட்' பண்ணுகின்றான்.

பையன் : ஹாய்...
பெண் : ஹலோ..
பையன் : எங்க இருக்கிங்க???
பெண் : அப்பாவோட பி.எம்.டபுள்யூ காரில் லண்டன் போறதுக்கு விமான நிலையம் போய்க் கொண்டிருக்கிறன். விமான நிலையம் போய், விமானத்தில ஏறிட்டு அதுக்குப் பிறகு உன்னோட கதைக்கிறன். ஓகேயா... ?
பையன் : ஓகேங்க..!
பெண் : ஆமா, நீங்க எங்க இருக்கிறீங்க ... ?
பையன் : நீங்க இருந்து போற பஸ்ல உங்க பின்னாடி சீட்லதான் உட்கார்ந்துட்டு இருக்கேன்...உங்களுக்கும் சேர்த்து நான் ரிக்கெட் எடுத்துட்டேன். உங்கள ரிக்கெட் எடுக்க வேண்டாம்ன்னு சொல்லத்தான் கூப்பிட்டேன்.
...... ??????

## தன்னைப் பற்றிய அறிவு எப்பொழுது தன்னை வெளிப்படுத்துகிறது?

சிந்தையின் முழு அழிவின் பின்னரே தன்னைப் பற்றிய அறிவு ஆத்ம ஞானம் தன்னை வெளிக்காட்டும். சிந்தனையின் அழிவின் பின் நிலைத்திருக்கும் சலனமற்ற அமைதியே உண்மையான அறிவு ஆகிறது.

சாயி சிந்தனை

# நச்சின்னு கடி



டொக்டர், எங்க அப்பாவுக்கு இன்னும் பத்து நாளுக்குப் பிறகு சத்திர சிகிச்சை செய்யுங்க.'
'ஏன்'
'சொத்துக்களை என் பேருக்கு அப்பா இன்னும் மாத்தி எழுதல...'

'இப்ப புறப்புட்டு போன பஸ் எங்கயாவது போய் விபத்தில மாட்டிடும் என்று சொல்றீங்களே நீங்க என்ன ஜோசியரா?'
'இல்ல, அந்த பஸ் சாரதி.'

அம்மா: எதற்காக செல்லம் அழுதுக்கிட்டே வாறாய்...?
சிறுவன்: அப்பா சுவற்றில் ஆணி அடிக்கும் போது சுத்தியல் தவறி அவர் கையில் பட்டு விட்டது அம்மா..
அம்மா: இதற்கு போய் அழலாமா, நானா இருந்தா சிரிச்சி இருப்பேன்.
சிறுவன்: நானும் அதைத்தான் செய்தேன்!

சத்திர சிகிச்சைக்கு முன் நோயாளி மருத்துவரிடம் கூறுகிறார்... 'டொக்டர், எனக்கு சொந்தம் என்று சொல்லி யாருமே இல்லை. உங்களத்தான் நான் தெய்வமா நினைக்கிறேன்...'
'அப்போ... அறுவைச் சிகிச்சை முடிந்த பிறகு யார் வந்து உங்க 'பொடியை' வாங்குவாங்க..?'

# ஏற்றமும், ஏமாற்றமும் நிறைந்ததுதான் வாழ்க்கை



பத்து வருடங்களுக்கு மேலாக சின்னத்திரை, பெரிய திரையில் நடித்து ,வருகிறார் சந்தோஷி. தற்போது இளவரசி தொடரில் கதாநாயகியாகவும், 63 நாயன்மார்கள் தொடரில் காரைக் காலம்மையாராகவும் நடித்து வருகிறார். ஏற்றமும், ஏமாற்றமும் நிறைந்ததுதான் வாழ்க்கை என்கிறார் சந்தோஷி. அம்மு தொடர் மூலமாக அறிமுகமானேன். அப்போது எனக்கு 18 வயதுதான். அதற்கு பிறகு நிறைய தொடர்களில் நடித்தேன். ராதிகாவின் அத்தனை தொடர்களிலும் நடித்தேன். திடீரென்றும் நண்பர்கள் சினிமா ஆசையைத் தூண்டி விட்டார்கள்.
மிகுந்த எதிர்பார்ப்புடன் பாபா படத்தில் நடித்தேன். முதல் படமே சூப்பர் ஸ்ரார் படம் சினிமாவில் நல்ல இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். படம் தோல்வி அடைந்ததால் சினிமா வாய்ப்பும் இல்லாமல் சின்னத்திரை வாய்ப்பும் இல்லாமல் தவித்தேன். இடையில் உன்னை சரணடைந்தேன், ஆசை ஆசையாய் படங்களில் தங்கை கதாபாத்திரத்தில் நடித்தேன். அதிலிருந்து தங்கை கதாபாத் திரங்களாகக் குவிந்ததால் போரடித்து சினிமாவிலிருந்து ஒதுங்கினேன். பெரிய இடைவெளிக்கு பிறகு மீண்டும் ராதிகா கைகொடுத்தார். இளவரசி தொடர் மீண்டும் வாழ்வு கொடுத்தது. அதில் ஜோடியாக நடித்தவரே நிஜ வாழ்க்கையிலும் ஜோடியானார். இப்போது 63 நாயன்மார்கள் தொடரில் காரைக்காலம்மையாராக நடிக் கிறேன். மனதுக்கு சந்தோஷமாக இருக்கிறது. ஏற்றமும், ஏமாற்றமும் நிறைஞ்சதுதான் வாழ்க்கை. இரண்டையும் ஏற்றுக் கொண்டு வாழப் பழக வேண்டும். இது என்னோட அனுபவம்.



விமர்சனம்

# அதிக் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர்கள் ஆண்களே!

சசிபாலா, இணுவில்



ஆண்களோ தமது உழைப்புக்கு ஏற்றாற் போல சாதாரண ஆடம்பரமற்ற வாழ்க்கை வாழ்கின்றார்கள்.

'வரவு எட்டணா செலவு பத்தணா..' என பழைய சினிமாப் பாடல் கூறுவது இன்றைய உலகில் மிகப் பொருத்தமானதாகும். எல்லாவற்றுக்கும் காரணமாக முதலில் பிறருடன் ஒப்பிட்டுப் பார்த்தல் என்பதே பல பிரச்சினைகளுக்கு காரணமாகின்றது.

அதாவது பெண்கள் எப்பொழுதுமே பிற பெண்களுடன் தம்மை ஒப்பிட்டு அடுத்த வீட்டுப் பெண் புது சேலை, புதிய நகைகள் என வாங்கும் போது பெயரளவுக்காகத் தம்மால் முடியாத நிலையென்றாலும் வெளி வேடத்துக்காக அயலவர்களிடம் கடன் வாங்கியோ அல்லது வேறு வழிகளிலோ பணம் பெற்று தமது சக்திக்கு மீறின வகையில் மற்றவர்கள் போல ஆடம்பரமாக வாழ நினைக்கிறார்கள்.

ஆனால் ஆண்களோ தமது உழைப்புக்கு ஏற்றாற் போல சாதாரண ஆடம்பரமற்ற வாழ்க்கை வாழ்கின்றார்கள். ஒருகுடும்பத்தை எடுத்துக் கொண்டால் அதில் ஆண், பெண் பிள்ளைகள் இருந்தால் அதில் ஆண் மகனோ சைக்கிளிலோ அல்லது பேருந்திலோ அலுவலகங்களுக்கு செல்லக்கூடிய நிலையிலும் பெண் பிள்ளை என்றால் மற்ற பெண்களோடு ஒப்பிட்டு தமக்கு சூட்டிபெப், பிளசர் வேண்டுமென அடம்பிடித்து பெற்றோரின் பணத்தையே கரைத்துக் குடிக்கின்றார்கள்.

அதனைவிட சில குடும்பங்களில் 'பட்ஜெட்' போட்டு மாதா மாதம் வரவு - செலவுக் கணக்கு பார்த்து குடும்ப பொருளாதார நிலையை நடத்துகின்ற குடும்பத் தலைவர்கள் பலர் காணப்படுகின்றனர்.

ஆனால் அவர்களை இந்தச் சமூகம் கஞ்சன் என பட்டப்பெயர் சூட்டி அவர்களைக் கேலி செய்கிறார்கள். அதேசமயம் குடும்பப் பெண்கள் சிலர் எந்த வித எதிர்கால சிந்தனைகளுமின்றி தமது வீட்டுக்கும் தமக்கும் எது தேவையானது, எது தேவையில்லாது என்று அறியாமல் வீதிகளில் அங்காடி வியாபாரிகளிடம் கண்டதையும் வேண்டி வீணே பணத்தைச் செலவழிக்கின்றார்கள்.

இதனைக் கணவன் தட்டிக் கேட்டால் புருசன் கொடுமைப்படுத் துகிறான், தமக்குச் சுதந்திரம் இல்லை என ஆண்கள் மீது பழி சுமத்துகின்றார்கள். ஆண்கள் மழை, வெயில் பாராது கஷ்டப்பட்டு உழைத்து தமது குடும்பத்துக்குக் கொடுக்கும்போது அதைப் பெண்கள் புத்திசாலித்தனமாகச் செலவழிக்காமல் பகட்டு வாழ்க்கைக்காக அற்பத்தனமான நவநாகரிக மோகம் காரணமாகவும் வீணே செலவழிக்கின்றார்கள்.

நீங்களும் எழுதலாம்....

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

அதிக சிக்கனத்தைக் கடைப் பிடிப்பவர்கள்

ஆண்களா? பெண்களா?

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.



## காதல் இல்லையேல்....

கருவாகவுள்ள போது
பிறப்பின் மீது காதல்
பால் குடிக்க
துடிக்கும் போது
தாய் மேல் காதல்
பள்ளிக்குச் செல்லும் போது
புத்தகத்தின் மீது காதல்
பராயம் வரும் போது
பாலினம் மீது காதல்
சாகத் துடிக்கும் போது
மீண்டும் சாதிக்கக் காதல்
வாழ்வே காதல் தான்
காதல் இல்லையேல்
வாழ்வில்லை.

*த.நி.ஷனா*
*ஓட்டுமடம், யாழ்ப்பாணம்*

# "இளைஞனே கொட்டிடு வீரமாய் நம் கனவுகள் நாளைய வெற்றி என்று.."

ஒவ்வொரு சமூகமும் தமக்கென சில விழுமியங்களை ஒரு வட்டத்துக்குள் வகுத்து கொண்டது. அதனாலே ஏற்றுக் கொள்ளுதல் என்பது அன்றைய கால கட்டத்தில் அவசியமாகிப் போனது.

இதனையும் மீறி எதிர்ப்பைக் காட்டிய புதிய சிந்த னையை தூவிய இளம் சிந்தனையாளர்கள் முளையிலே கிள்ளி எறியப்பட்டனர். சொந்த சிந்தனையை, எதிர்காலக் கனவுகளை வெளிப்படுத்த சமூகம் இடம் கொடுக்கவில்லை. இந்தக் கால கட்டம் இப்போ முடிவுக்கு வந் தாயிற்று.

*அண்டங்கள் தாவுவோம்....*
*கண்டங்கள் பாயுவோம்*
*உலகத் திக்கனைத்தும்....!*
*உள்ளங்கை வசமாகும்....!*
*உயரிய தொழில் நுட்ப*
*மாற்றங் காணுவோம்*

விஞ்ஞான உலகில் அபரிமிதமான வளர்ச்சி இன்று உலகை உள்ளங்கைக்குள் கொண்டு வந்து விட்டது. இந்த மாற்றங்கள் எதிர்கால கனவின் அடிப்படையிலே உருவானது. துடிப்பு மிக்க இளம் சிந்தையிலே துளிர்த்த விடயங்களே இன்று உலகை ஆண்டு கொண்டு இருக்கின்றது. "இது தான் இறுதியானது" என்று எதையுமே வரையறுத்து கூற முடியாத அளவுக்கு மாற்றங்கள் நிகழ்கின்றன.

புதிய பல கனவுகள் இப்போ நிஜங்களாகிப் போயுள்ளன. இன்றைய புதியவைகள்



அன்றைய தினத்திலேயே பழையனவாகி போய்க் கொண்டிருக்கின்றன! யுகங்கள் இப்போ நிமிடங்களாகிக் கொண்டிருக்கின்றன!

*வெற்றி நோக்கிய பயணம் இது...!*
*இலட்சிய கனவுகள் புடை சூழ....!*
*ஆர்வ வேட்கைகள் அணி வகுக்க...!*
*காலத்தின வேக சரி நிகராய்...*
*மாற்றங்கள் புதியன புகுந்திடவே....*
*இளைஞனே கொட்டிடு வீராமாய்...!*
*"நம் கனவுகள் நாளைய வெற்றி என்று"*

நாளைய கனவுகள் நோக்கி இளையோர் முன்னேறுகின்ற பொழுதுதான் அவன் சாதனைக்கான சோதனைகளும் ஆரம்பமாகின்றன! இன்று சிந்தனை கலைப்பான்கள் மத்தியிலே நாம் கனவு கண்டு கொண்டிருக்கின்றோம்.

நமது எதிர்கால எண் ணங்களை, தவிடு பொடியாக்க எத்தனையோ மதுக்கடைகளும் இரவுப் பூக்களும் காத்திருக்கின்றன.

அவை தன்பாட்டில் இருக்கட்டும் உன் கனவுகள் அவற்றையும் தாண்டி மிக வேகமாய் மலர வேண்டும் அப்போதுதான் உன் எதிர்கால வெற்றியை அடைய முடியும்!

*(தொடரும்)*

இன்று சிந்தனை கலைப்பான்கள் மத்தியிலே நாம் கனவு கண்டு கொண்டிருக்கின்றோம். நம் எதிர்கால எண்ணங்களை, தவிடு பொடியாக்க எத்தனையோ மதுக் கடைகளும் இரவுப் பூக்களும் காத்திருக்கின்றன.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் இளவல்கள் வட்டம் என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனாங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.......................................

முகவரி :-.......................................

.................. திகதி

.................. கையொப்பம்

**இளவல்கள் வட்டம்** ,
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## நீ வருவாய் என...

மனம் வரைந்த ஓவியம்
நம் இருவரின் காதல் காவியம்
உயிரே வெறுக்காதே
என் உறவைத் தடுக்காதே
கனவை கலைக்காதே
என் காதலைச் சிதைக்காதே
உன்னுடன் பேசும்
ஒவ்வொரு நொடியும்
நான் உன்னோடு
வாழ்கின்றேன் என்பதைத்
தெரிந்து கொள்
என் காதலைப் புரிந்து கொள்
உருகும் மெழுகுவர்த்தியாய்
உன்னை நினைத்து
அனுதினம் கவியால் பாடுகின்றேன்
மறக்க முடியாத உன்
உருவைத் தேடுகின்றேன்
உன்னருகில் வாழ நாடுகின்றேன்
நீ வரும் வரை
வழிமேல் விழி
வைத்துக் காத்திருக்கும்- என்
நெஞ்சம் ஒரு தீப்பந்தமாக....

*ந.பிறின்சி,*
*யுவசக்தி வீதி.*

# கைத்தொலைபேசியில் சாரதிகள் உல்லாசம் பஸ் பயணிகளோ பெரும் உயிர் ஆபத்தில்

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

வவுனியா,ஓக.21

கைத்தொலைபேசியில் உல்லாசமாக உரையாடிக் கொண்டு பஸ்களைச் செலுத்தும் தனியார் பஸ் சாரதிகளால் தாம் உயிரைக் கையில் பிடித்தவாறு பயணம் செய்ய வேண்டிய பெரும் அபாயகரமான நிலை ஏற்பட்டுள்ளதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக ஏ-9 வீதியில் நீண்ட தூரம் பயணிக்கும் பஸ்களிலேயே இந்த நிலைமை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 19 ஆம் திகதி இவ்வாறான ஒரு சம்பவத்தை எதிர்நோக்கிய பயணி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.போதனா வைத்திய சாலைக்குச் செல்வதற்காக காலை 7.30 மணிக்கு வவுனியாவில் இருந்து தனியார் பஸ்ஸொன்றில் புறப்பட்டோம். பஸ் புறப்பட்டதில் இருந்து அதனைச் செலுத்திய சாரதி ஒரு கையால் கைத்தொலைபேசியைப் பிடித்து உரையாடியவாறு இருந்தார்.

பஸ்ஸைச் செலுத்திக் கொண்டு கைத்தொலைபேசியில் உரையாட வேண்டாம் என்று நாங்கள் அந்தச் சாரதியிடம் கெஞ்சிக் கேட்டோம். உடனே அவர் எங்களைக் கண்டபடி திட்டினார். நான் இப்படித்தான் பஸ் செலுத்துவேன். நீங்கள் விரும்பினால் இறங்கிப் போங்கள் என்று கூறினார். பொலிஸாரைக் கண்டவுடன் கைத்தொலைபேசியை வைப்பதும் பின்னர் எடுத்து உரையாடுவதுமாக அவர் இருந்தார்.

இதனால் காலை 7.30 மணிக்கு வவுனியாவில் இருந்து புறப்பட்ட பஸ் முற்பகல் 11.45 மணிக்கே யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தது.

இதனால் நாங்கள் வைத்திய சாலைக்கு உரிய நேரத்துக்குப் போகமுடியாத நிலை ஏற்பட்டது- என்றார்.

தனியார் பஸ் சாரதிகளின் இவ்வாறான நடவடிக்கைகள் தனியார் குறித்து பஸ் சங்கங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-421)

# குடும்பஸ்தரை தாக்கியது மாடு



பூநகரி,ஓக.21

மேய்ச்சலுக்காக மாடுகளை இட்டுச் சென்ற குடும்பஸ்தரை காட்டினுள் நின்ற குளு மாடு ஒன்று துரத்திக் கொம்புகளால் தாக்கி காயப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பூநகரியில் இடம்பெற்றது.

குளு மாட்டினால் தாக்கப்பட்டு காயமடைந்த பூநகரி நெடுங்குளத்தைச் சேர்ந்த கந்தசாமி சிவகரன் (வயது- 28) என்பவர் தொடைப் பகுதியில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-9)

# யானை தாக்கியதில் இளைஞர் படுகாயம்

வவுனியா,ஓக.21

வவுனியா செட்டிகுளம் பகுதியில் வயல் காவலுக்கு நின்ற இளைஞரொருவரை யானை தாக் கியதில் அவர் படுகாயமடைந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதா வது:-

கடந்த 19 ஆம் திகதி அதி காலை செட்டிகுளம் வயல் பகுதியில் இளைஞர்கள் காவலுக்கு இருந்துள்ளனர்.

அதிகாலை 3 மணியளவில் அங்கு வந்த யானையொன்றை விரட்ட இளைஞர்கள் வெடி கொளுத்தியெறிந்துள்ளனர். ஆத்திரம் அடைந்த அந்த யானை அங்கு நின்ற இளைஞர் ஒருவரைத் தூக்கி வீசியது.

சம்பவத்தில் படுகாயமடைந்த வவுனியா செட்டிகுளத்தைச் சேர்ந்த எஸ்.லோகேஸ்வரன் (வயது-28) வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (த-421)



வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் கூட்டம் அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

பஸ் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் வசதியீனங்கள் குறித்து இதில் கலந்துரையாடப்பட்டது. மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனும் இதில் பங்கேற்றார். (த-21)

# பிரதேச சபைச் செயலாளரை நியமனம் செய்வதில் தாமதம்

## ஊழியர்கள் பெரும் பாதிப்பு

பிரதேச சபை செயலாளர் நியமனத் தாமத்தினால் 60 க்கு மேற்பட்ட குடும்பங்களின் ஜீவனோபாயம் கேள்விக் குறியாக ஆகியுள்ளது.

பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபைக்கு செயலாளர் இன்னமும் நியமிக்கப்படாததால் சபையில் கடமையாற்றும் 60 க்கு மேற்பட்ட உத்தி யோகத்தர்கள் ஊழியர்களின் ஓகஸ்ட் மாதச் சம்பளம் உரிய வேளையில் வழங்கப்படுமா என்பது கேள்விக்குறியாக ஆகியுள்ளது.

செயலாளர் இல்லாததால் ஜூலை மாதம் சம்பளம் மாற்று ஒழுங்குகள் மூலம் ஓகஸ்ட் எட்டாம் திகதி வழங்கப்பட்டதாகவும், அடுத்த வாரம் ஓகஸ்ட் மாதத்துக்குரிய வேதனம் வழங்க வேண்டிய சூழ்நிலையில் இதுவரை செயலாளர் நியமிக்கப்படாததால் ஓகஸ்ட் மாதச் சம்பளம் வழங்குவதிலும் தாமதங்கள் ஏற்படக் கூடிய நிலை உள்ளதாகவும் பணியாளர் தரப் பில் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பாடசாலையில் வளங்கள் பற்றாக்குறை

முல்லைத்தீவு,ஓக.21

அம்பலவன்பொக்கணை பாடசாலைகான வளங்களை அதிகரிக்குமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தரம்-1 தொடக்கம் தரம்-11 வரையான வகுப்புகளைக் கொண்ட இந்தப் பாடசாலையில் 200 வரையான மாணவர்கள் கல்வி பயிலுகின்ற போதிலும் பாடசாலையில் இடநெருக்கடி தளபாட நெருக்கடி. காணப்படுகின்றன.

போர்க்காலத்தில் பெரும் அழிவுகளை இந்தப் பாடசாலை எதிர்கொண்டிருந்த போதிலும் மீள்குடியேற்றத்தின் பின்னரும் கூட இதற்கான வளங்கள் அதிகரிக்கப்படவில்லை.

இந்தப்பாடசாலைக்குத் தேவையான வளங்களை அதிகரித்து வசதிகளை உருவாக்குமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-18)

# திருநாவற் குளத்தில் கஞ்சா விற்பனையால் அசௌகரியம்

வவுனியா, ஓக.21

வவுனியாவில் கடந்த சில மாதங்களாக திருநாவற்குளச் சந்திப் பகுதியில் கஞ்சா விற்பனையில் சில வியாபாரிகள் ஈடுபட்டுவருவதாகக் கூறப்படுகிறது.

இதனால் மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருவதாகப் பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

திருநாவற்குளத்தில் கஞ்சா விற்பனை தினமும் இடம்பெற்று வருவதனால் இளைஞர்கள் மத்தியில் அதன் பாவனையும் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அவர்கள் கல்வி நிலையங்களுக்குச் செல்லாமல் இருப்பதுடன், பெண்களுடன் தகாத நடவடிக்கையில் ஈடுபடுதல், கலாசாரச் சீரழிவு நடவடிக்கை களை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். எனவே இந்தக் கஞ்சா விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-402)

# ஒட்டுசுட்டான் மக்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

மாங்குளம், ஓக.21

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 2 கிலோமீற்றர் தூரத்துக்கு குழாய் மூலம்



குடிதண்ணீர் வழங்குவதற்கான வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் மாத நடுப் பகுதியில் பூர்த்தி செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வேலைத் திட்டத்தை புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மருத்துவர் எ.றஜீவனின் நிதி அனுசரணையுடன் புஸ்பராணி தொண்டு நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

அகில இலங்கை ரீதியில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தமது சேவையை விஸ்தரித்து வருவதாக புஸ்பராணி தொண்டு நிறுவனத்தின் இலங்கைக்கான தலைவி திருமதி ஶ்ரீதரன் பவிதா தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் அரை ஏக்கர் நிகழ்ச்சித் திட்டத்தில் 135 குடும்பங்களுக்கு குடியிருப்பு வசதிகளும் தமது நிறுவனத்தால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியவர்கள், பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் 30 குடும்பங்கள் ஆகியோருக்கு மாதாந்தம் 4 ஆயிரத்து 300 ரூபா பெறுமதி கொண்ட உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறினார். (த-422)

# கிளிநொச்சியில் 6599 குடும்பங்களுக்கு ரூ.1 கோடி 94 லட்சம் வாழ்வாதார உதவி

## 2010 முதல் இன்று வரை வழங்கப்பட்டது

மாங்குளம்,ஓக.21

கிளிநொச்சி மாவட்டத்தில் போருக்குப் பின்னரான காலப் பகுதியிலிருந்து கடந்த மாத இறுதி வரை பொருளாதார மேம்பாட்டு உதவியாக 6,599 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு ஒரு கோடி 94 லட்சத்து 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக பொருளாதார அமைச்சின் கிளிநொச்சி மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் அருணாசலம் விஜயகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொருளாதார மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு விவசாயம், மீன்பிடி, சிறு வியாபாரம், சிறு கைத்தொழில், தொழில் பயிற்சி, தொழில் முயற்சி என்பவற்றுக்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் நடப்பாண்டு ஜூலை 31 வரை ஆடு, மாடு, கோழி வளர்க்கும் 1,935 குடும்பங்களுக்கு 56 லட்சம் ரூபாவும், விவசாயத்துக்காக 2,419 குடும்பங்களுக்கு 66 லட்சத்து முப்பதாயிரம் ரூபாவும், சிறு வியாபாரத்துக்கு 1,088 குடும்பங்களுக்கு 33 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும், மீன்பிடி தொழில் அபிவிருத்திக்கு 462 குடும்பங்களுக்கு 12 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும், சிறு கைத் தொழிலுக்கு 661 குடும்பங்களுக்கு 20 லட்சத்து 55 ஆயிரம் ரூபாவும், தொழிற்பயிற்சி, தொழில் முயற்சிக்கு 34 குடும்பங்களுக்கு 5 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும் என. மொத்தமாக 6599 குடும்பங்களுக்கு ஒரு கோடி 94 லட்சத்து 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

பெண்களை மட்டும் தலைமைத்துவமாக கொண்டு இயங்கும் 397 குடும்பங்களுக்கு தலா 69 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன- என்றார். (த-422)

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டை திறக்கப்படுகின்றது 27 ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஓக.21
இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் மீள் புனரமைப்புச் செய்யப்பட்ட அச்சுவேலி கைத்தொழில் பேட்டை எதிர்வரும் 27ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில்கள் அபிவிருத்தி முயற்சி அமைச்சின் செயலாளர் எஸ்.சிவஞான சோதி தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றம் சிறுகைத்தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சு மற்றும் கைத்தொழில் அதிகார சபையின் ஏற்பாட்டில் அச்சுவேலியில் மீள் புனரமைப்புச் செய்யப்பட்ட இந்தக் கைத்தொழில் பேட்டையில் 22 காட்சியறைகள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுவரும் இந்தக் கைத்தொழில் பேட்டையை புனரமைப்புச் செய்ய இந்திய அரசு 225 மில்லியன் ரூபாவையும், இலங்கை அரசு 50 மில்லியன் ரூபாவையும் வழங்கியிருந்தன.

கைத்தொழில் பேட்டையின் கட்டுமானப் பணிகள் தற்போது முடிவடைந்துள்ளதை அடுத்து எதிர்வரும் 27ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு இது வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது. விவசாய உபகரணங்கள், மென்பொருள்கள், உணவு மற்றும் பான வகைகள், உள்ளூர் உற்பத்தி பொருள்கள், மீள் உற்பத்திப் பொருள்கள், மீன்பிடி வலைகள், குழாய் போன்ற உற்பத்திப் பொருள்களைத் தயாரிக்கும் 22 காட்சிக்கூடங்கள் கைத்தொழில் பேட்டையில் அமைக்கப்பட்டுள்ளன.

அதனைவிட உள்கட்டுமானப் பணிகள், நீர்வழங்கல் வசதி, மின்சார வசதி, கழிவுநீர் அகற்றல் வசதி, தீயணைப்புபிரிவு, சுற்றுமதில், நிர்வாகக் கட்டமைப்பு உட்கட்டமைப்பு வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

60இற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் விண்ணப்பித்துள்ள நிலையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறை சார்ந்தவர்களையும், உள்ளூர் உற்பத்திகளை முதன்மைப்படுத்தி ஏற்றுமதிக்கான உற்பத்திகளை மேற்கொள்பவர்களுக்கும் தெரிவின் அடிப்படையில் வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன. தற்போது 7 பேர் தமது தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். 30 ஆண்டு குத்தகையில் இந்தக் காட்சிக் கூடங்கள் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இந்தத் திறப்பு விழாவுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்திய உயர் ஸ்தானிகர் வைகே சிங்கா, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தி முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடமாகண ஆளுநர் ஜி.எ.சந்திரசிறி ஆகியோருக்கும் அரச அதிகாரிகளுக்கும் நிறுவனத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ந-14)

## கரம்பகம் கிராமத்துக்கு மின்சாரம்

தென்மராட்சி, ஓக.21
தென்மராட்சி கிழக்கு கரம்பகம் கிராமத்துக்கான மின் விநியோகத் திட்டம் நேற்று முன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த மாகாண சபைத் தேர்தல் காலத்தில் இந்தப் பகுதிக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்விநியோகத்துக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டு, மின்மாற்றிகளும் பொருத்தப்பட்டன.

அந்தப் பகுதியில் கடந்த 2011 ஆம் ஆண்டு மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு சுமார் 100 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மின் விநியோகத் திட்டம் அயல் கிராமமான ஒட்டுவெளிக்கும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (து-9)

## வேலணைக்கு 10,000 லீற்றர் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஓக.21
யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி பத்தாயிரம் லீற்றர் குடிதண்ணீர் வேலணைப் பகுதிக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

வேலணைப் பிரதேசத்தில் நிலவும் குடிதண்ணீர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் யாழ்.மாநகர முதல்வரிடம் கேட்டுக் கொண்டதற்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பவுசர் மூலம் குடிதண்ணீர் அங்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. (து-7)



அரியாலைப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. யாழ். மாநகர சபைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். கிஷோக்குமார் தலைமையில் மாம்பழம் சந்திக்கு அருகில் உள்ள பிரப்பங்குளம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (து-17)

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிதாக உறுப்பினர்கள் இணைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.21
சர்வதேசக் கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக உறுப்பினர்களை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

சங்கங்கள் தமது ஒவ்வொரு கிளை விற்பனை நிலையங்கள் ஊடாகவும் குறைந்தது 50 உறுப்பினர்களை புதிதாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கூட்டுறவு குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பணியாளர்கள், கிளை முகாமையாளர்கள் ஆகியோர் இந்த நடவடிக்கையில் முழுமையாக ஈடுபட வேண்டும்.

சில சங்கங்கள் புதிதாக உறுப்பினர்களை இணைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. மேலும் சில சங்கங்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபடுவதற்குப் பின்னடித்து வருகின்றன.

புதிதாக உறுப்பினர்களை இணைப்பதற்கு கிளை நிலையங்களில் இது தொடர்பான அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

கூடுதலான உறுப்பினர்களை இணைக்கும் சங்கங்களுக்கு கூட்டுறவாளர் விழாவில் வைத்து பரிசுகள் வழங்கப்படும்- என்றார். (து-17)

## தண்ணீருக்கு அலையும் கால்நடைகள் மிதிவெடியில் அகப்பட்டுக் கால் இழப்பு

### கிளாலிப் பகுதியில் இந்தப் பரிதாப நிலை

வலி.தென்மேற்கு, ஓக.21
கிளாலிப் பகுதியில் வறட்சி காரணமாக குடிதண்ணீருக்கும் உணவுக்கும் அலைந்து திரியும் கால்நடைகள் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள சூனியப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களை நாடிச் செல்வதால் மிதிவெடிகளில் அகப்பட்டு கால்களை இழப்பதுமல்லாமல் இறந்து போகும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து கவலை தெரிவித்துள்ள இப்பகுதி மக்கள் கால்நடைகளின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் குளங்களை ஆழமாக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக கிளாலிப் பகுதியிலுள்ள ஏழு குளங்களிலும் இருந்த நீர் முற்றாக வற்றிவிட்டது. அதேநேரம் மழையின்மை காரணமாக புற்றரைகளும் கருகி விட்டன.

இதனால் இந்தப் பகுதியிலுள்ள ஆயிரத்துக்கும் அதிகமான கால்நடைகள் குடிதண்ணீரையும் உணவையும் தேடி அலைந்து திரிகின்றன.

குடிதண்ணீரைத்தேடிஅலைந்து திரியும் கால்நடைகள் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள சூனியப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளுக்குச் செல்வதால் அங்கு புதைக்கப்பட்டுள்ள மிதி வெடிகளில் சிக்கிக் கால்களை இழப்பது மட்டுமல்லாமல் இறக்கவும் நேர்கிறது. வெடியில் சிக்குண்ட 15 இக்கும் அதிகமான கால்நடைகள் மூன்று கால்களுடன் நடமாடி வருகின்றன.

இந்த அபாயகரமான நிலையைக் கருத்திற் கொண்டு கால்நடைகளின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் குளங்களை அழமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (து-115)

## கல்வியங்காடு பகுதியில் இருவருக்கு வாள் வெட்டு

யாழ்ப்பாணம், ஓக.21
கல்வியங்காட்டுச் சந்திக்கு அருகில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலைய முகாமையாளரையும், பணியாளரையும் இனந்தெரியாத நபர்கள் வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு 8.30 மணியளவில் சம்பந்தப்பட்ட இருவரும் எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை அவர்களைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் அவர்கள் இருவரையும் தள்ளிவிழுத்திய பின் சரமாரியாக வாளால் வெட்டி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

கல்வியங்காடு கலைமகள் வீதியில் இடம்பெற்ற இந்த வாள் வெட்டுச் சம்பவத்தில் முகாமையாளரான எஸ்.ஐயாத்துரை (வயது-62), அவரது உதவியாளர் கே.கதிரமலைநாதன் (வயது-52) ஆகியோரே காயமடைந்தனர்.

குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் முகாமையாளர் ஏற்கனவே இரண்டு தடவைகள் தாக்குதலுக்கு இலக்கானதுடன் அவரிடமிருந்து பணமும் அபகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-17)

## சிறந்த பண்ணையாளர் தெரிவு வடமாகாணத்தில்

யாழ்ப்பாணம், ஓக.21
வடமாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் வழிகாட்டலின் கீழ், மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் அனுசரணையுடன் கால்நடை வைத்திய பிரிவுகள் தோறும், சிறந்த கால்நடைப் பண்ணையாளர்களைத்தெரிவு செய்து பரிசுகள் வழங்கிக் கௌரவிக்க மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதன்படி 2014 ஆம் ஆண்டுக்கான சிறந்த பண்ணையாளர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பணப் பரிசில்கள் 2015 ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறவுள்ள உழவர் தின விழாவின்போது வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பண்ணையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி போட்டிகள் ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு ஆகிய 3 பிரிவுகளாக இடம்பெறவுள்ளன. போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் பண்ணையாளர்கள் உரிய படிவங்களை தமது பிரிவிலுள்ள கால்நடை வைத்திய பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.



பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச கால்நடை வைத்திய பணிமனைகளில் ஒப்படைக்குமாறு கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (கு)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கூட்டமைப்பின் டில்லி பயணம்

வெளிநாட்டு ஊடகவியலாளர்களை நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் சந்தித்த ஜனாதிபதி ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங் கைக்கு கட்டாயம் பயணம் செய்யவேண்டும், இலங்கை மக்கள் இந்தியப் பிரதமரின் வருகைக்காக ஆவலுடன் உள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

மோடியை அழைத்துப் பேசுவதன் மூலம் இலங்கை - இந்திய உறவை மேலும் அபிவிருத்தி செய்யமுடியும், இந்தியாவிடமிருந்து வரக்கூடிய அழுத்தங்களைக் குறைக்க முடியும் என்று ஜனாதிபதி கருதுகிறார். பிரதமர் மோடியும் இலங்கைப் பிரச்சினையை விட புவிசார் அரசியல் தொடர்பிலேயே கூடிய அக்கறை செலுத்தி வருகிறார். இப்படியான சூழ்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் இன்றைய புதுடில்லி பயணம் மோடியை நாடிபிடித்துப் பார்க்க உதவும் என்று எதிர்பார்க்கலாம். போரின் பின்னரான பல பிரச்சினைகளை எதிர்நோக்கும் வடக்கு, கிழக்கு மக்களுக்கு இந்தியாவின் உதவி மிகவும் முக்கியமானதாகும். அமெரிக்கா உட்பட்ட பல நாடுகள் இலங்கைப் பிரச்சினை யில் இந்தியாவின் நோக்கங்களையும் கருத்தில் கொண்டு செயற்படுகின்றன என்பதை நாம் மறந்துவிட முடியாது.

மோடி பிரதமராகப் பதவியேற்ற பின்னர் கூட்டமைப்பினர் புதுடில்லி சென்று மோடியைச் சந்திப்பது இதுதான் முதல் தடவை. மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரஸ் அரசுபோன்று வாய்ப்பேச்சுடன் நின்றுவிடக் கூடாது மோடி அரசு. செயல்திறன் உள்ளதாக இருக்க வேண்டும். இதன்மூலமே தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறமுடியும்.

கடந்த மே மாதம் மோடி பிரதமராகப் பதவியேற்ற நிகழ்வில் புதுடில்லி சென்று கலந்துகொண்ட ஜனாதிபதி, அடுத்த நாள் மோடியைச் சந்தித்துப் பேசினார். இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். இலங்கைப் பிரச்சினைகள் குறித்தும் பேசப்பட்டது. ஆனால், இதுவரை மோடியின் இலங்கைப் பயணத்துக்கான திகதியை இந்தியா முடிவு செய்ய வில்லை. மோடியின் இலங்கை விஜயம் குறித்த திகதியை முடிவுசெய்யாமல் கூட்டமைப்பை டில்லிக்கு அழைத்தமை ஜனாதிபதிக்கு நிச்சயமாக ஏமாற்றம் அளித்திருக்கும்.

கூட்டமைப்பின் இந்தியப் பயணம் குறித்த தகவல் ஊடகங்கள் மூலம் வெளிவருவதற்கு முதல்நாள்தான், இலங்கை அரசு அனுமதி வழங்கினால் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மோடி சந்திப்பார் என்று சுப்பிரமணிய சுவாமி கூறியிருந்தார். கூட்டமைப்பினர் புதுடில்லி செல்ல இலங்கை அரசு அனுமதி வழங்கியதா அல்லது கூட்டமைப்பு புதுடில்லி செல்லப்போவதை முன்னதாகவே அறிந்துகொண்டு இலங்கை அரசின் அனுமதியுடன்தான் செல்கின்றனர் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கும் நோக்கத்துடன் சுப்பிரமணிய சுவாமி கதைவிட்டாரா? என்பதெல்லாம் கேள்விக்குறியாகவே உள்ளன. எனினும் கூட்டமைப்பின் டில்லி பயணம் சுப்பிரமணிய சுவாமிக்கு சாட்டையடிதான்.

அரசியல் கோமாளியாக வர்ணிக்கப்படும் சுப்பிரமணிய சுவாமி ராஜபக்ஷவின் மிகவும் நெருக்கமான நண்பர். காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் இந்து ஆசிரியர் என். ராம், ராஜபக்ஷவுக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்தார். ராமின் இடம் தற்பொழுது சுப்பிரமணிய சுவாமிக்கா என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது. இந்திய பொதுசன உறவு நிறுவனம், இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கைகள் தொடர்பில் இலங்கையில் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்களைக் கண்டறிந்து செயற்படுத்துகிறது.

மோடி அரசு பதவியேற்க முன்னர், தென்னிலங்கையில் பி.ஜே.பி. குறித்து ஒருவித அச்ச உணர்வு நிலவியது. தற்பொழுது அந்த அச்சம் நீங்கிவிட்டது. தென்னிலங்கை மக்களின் நம்பிக்கையை மோடி அரசு பெற்று வரும் அதே ச்சமயம், தமிழ் மக்களினால் சந்தேகத் துடன் நோக்கப்படுகின்றது. இதனை நீக்க கூட்டமைப்பின் புதுடில்லி பயணம் உதவவேண்டும்.

மன்மோகன் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியில் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ஒழித்துக்கட்டும் இலங்கையின் நடவடிக்கைகள் இந்தியாவின் அழுத்தம் காரணமாக இடைநிறுத்தப்பட்டன. 13ஆவது திருத்தம் ஒழிப்புக் குறித்து தற்பொழுது தென்னிலங்கையில் எவரும் பேசுவதில்லை. 13ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று கிடைக்கக்கூடிய தீர்வையே தமிழ் மக்கள் ஆத்மார்த்தமாக விரும்புகின்றனர் என்பதைக் கூட்டமைப்பும் நன்குணரும். ஆனால் தற்போதைய நிலையில் 13ஆவது திருத்தத்தையேனும் முழுமையாக அமுல்படுத்தி தமிழ் மக்களின் இருப்பையாவது பாதுகாப்பதற்கு மோடி அரசைக் கூட்டமைப்பு வலியுறுத்தவேண்டும். 13ஆவது அரசமைப்புத் திருத்தம் இலங்கை- இந்திய ஒப்பந்தம் மூலம் உருவாக்கப்பட்டதால் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வைக்கும் தார்மீகக் கடமை மோடி அரசுக்கு உண்டு. அத்துடன் 13க்கு மேலாக (13+) செல்வதன் மூலமே பிரச்சினைகளுக்கு முழுமையான தீர்வு காணமுடியும் என்பதை மோடி அரசு கருத்திற்கொண்டு செயற்படுவது அவசியமாகும்.

# இந்தியா தலைகீழாக நின்றாலும் சீனா-இலங்கையின் பக்கம்தான்






சேரலாதன்

கிழக்கு மாகாணத்திலுள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலையில் சீன அரசின் உதவியுடன் விமானங்களைப் பராமரிக்கும் நிலையமொன்றை இலங்கை அமைக்கவுள்ளதாக வெளிவந்த செய்திகள் இந்தியாவுக்கு உவப்பாக இருக்கப்போவதில்லை.

சீனப் பூச்சாண்டியைக் காட்டிக் காட்டியே இந்தியாவைத் தனது கட்டுப்பாட்டினுள் வைத்திருந்த இலங்கை, இறுதியில் இந்தியாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்வதற்கு ஆரம்பித்துவிட்டது.

சீனாவுக்கும், இந்தியாவுக்குமிடையே நீண்ட காலமாகவே பகையுணர்வு நிலவி வருகின்றது. எல்லைப் போரின் பின்னர் இந்தப் பகையுணர்வு நீறுபூத்த நிலையிலுள்ள நெருப்பாக மாறிவிட்டது. பேச்சுவார்த்தைகள் என்ற



பெயரில் காலம் விரயமாவதைத் தவிர தீர்வொன்றும் எட்டப்படவில்லை.

எல்லைப் பிரச்சினையை ஒரு சாட்டாக வைத்து இந்தியா மீது போர் தொடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்துக்காக சீனா காத்திருக்கின்றது. இதனை உணர்த்தும் வகையில் இரண்டு நாடுகளின் எல்லைப் பகுதியில் சீனர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனையொரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருப்பதற்கு மட்டுமே இந்தியாவால் முடிகின்றது.இதற்கு மேலாக சீனா மீது போர் தொடுப்பதற்குரிய துணிவு இந்தியாவிடம் இருப்பதாகத் தோன்றவில்லை. 1962 ஆம் ஆண்டு சீனாவிடமிருந்து கிடைத்த அனுபவங்கள் இந்தியாவை மேலும் ஒரு போரில் ஈடுபடுவதிலிருந்து பின் வாங்கச் செய்கின்றது.

தற்போதைய நிலையில் பொருளாதார மற்றும் இராணுவ பலத்தில் சீனா- இந்தியாவைப் பின்னுக்குத் தள்ளிவிட்டுள்ளது. அமெரிக்காவைத் தொடக்கூடிய அளவு தூரத்தில் அந்த நாடு இந்த இரண்டு விடயங்களிலும் முன்னேறி உள்ளது.

இந்த நிலையில் இலங்கையை வளைத்துப் பிடிப்பதில் இந்த நாடுகள் மும்முரமாக உள்ளன. இலங்கையொரு சிறிய தீவாக இருந்த போதிலும் பூகோள ரீதியில் முக்கியமானதொரு இடத்தில் அமைந்துள்ளது. மேலும், இயற்கையாக அமைந்த திருகோணமலைத் துறைமுகம் சர்வதேச ரீதியில் அனைவரது கண்களையும் உறுத்தி நிற்கின்றது. இலங்கையின் அண்டை நாடு என்ற வகையில் இந்தியா இலங்கை விவகாரங்களில் அக்கறை காண்பித்து வரும் நிலையில் சீனா ஓசையின்றி அங்கு காலூன்றி வருகின்றது.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதமராக இருந்தபோது அவரது கணவரான மறைந்த முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் நினைவாக பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் சீன அரசின் முழுமையான நிதியுதவியுடன் அமைக்கப்பட்டது. அதன் பராமரிப்புச் செலவுகளையும் சீன அரசே ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கைக்குப் பெருமளவில் கடன்களை வழங்குவதும் சீனாதான். காலப்போக்கில் இலங்கையை முழுமையாக ஆக்கிரமிக்கும் அளவுக்கு சீனா வழங்கும் கடன்களின் தொகை விஸ்வரூபம் எடுத்துள்ளது. மேலும் பல்வேறு கட்டுமானப் பணிகளிலும் சீனா இலங்கையில் ஈடுபட்டுள்ளது. இவற்றையெல்லாம் சீனா இந்தியாவுக்கு விடுக்கும் சவால்களாகவே நோக்க முடிகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை சீனா கடுமையாக எதிர்த்தது. முதலில் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்த இந்தியா பின்னர் நடுநிலை வகிப்பதாகக் கூறி வாக்களிப்பிலிருந்து நழுவிக் கொண்டது. இந்தியாவின் உறுதியற்ற நிலைப்பாட்டுக்கு இதுவொரு உதாரணமாகும். தற்போது இலங்கை மீதான சர்வதேச விசாரணைகளை எதிர்ப்பதாக இந்தியா கூறிக் கொள்கின்றது.

ஆனால், இந்தியா என்னதான் குத்துக் கரணம் அடித்தாலும் இலங்கையை சீனாவிடமிருந்து பிரிக்கவே முடியாது- ஏனென்றால் இலங்கை விரும்பினால் கூட அதுவொரு முடியாத காரியமாகவே தென்படு கின்றது. அந்த அளவுக்கு இலங்கை - சீனாவிடம் கடமைப்பட்டு நிற்கின்றது.

இந்த நிலையில்தான் திருகோணமலை விவகாரம் கிளம்பியுள்ளது- ஏற்கனவே திருகோணமலையிலுள்ள சம்பூரில் அனல் மின் உற்பத்தி நிலையமொன்றை இந்தியா அமைத்துள்ளது. இந்த நிலையில் அந்தப் பகுதியில் சீனா கால் ஊன்றுவதை அந்த நாடு விரும்பவேமாட்டாது. ஆனால், சுமார் 1,200 ஏக்கர் நிலப்பரப்பில் குறித்த விமானங்களைப் பராமரிக்கும் நிலையம் அமையவுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட செய்தி கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே சம் பூரில் இந்தியா அனல் மின் நிலை யத்தை அமைத்ததால் அங்கிருந்து வெளியேறிய தமிழர்களின் கண்ணீர் இன்னமும் வற்றாத நிலையில் சீனாவுக்கு அதே அப்பாவித் தமிழர்களின் 1,200 ஏக்கர் நிலம் தாரை வார்த்துக் கொடுக்கப்படவுள்ளது.


கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழர்களை ஓரம் கட்டும் செயற்பாடுகளே இவையென்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை. போருக்குப் பின்னர் வடக்கு, கிழக்குப் பிரதேசம் தமிழர்களின் பூர்வீக மண் என்பதை முற்றாகவே இல்லாதொழிக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசு இராணுவத்தினரின் உதவியுடன் ஈடுபட்டு வருகின்றது. இராணுவத்தினரின் தேவைக்கெனக் கூறிக்கொண்டு தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தமது உரிமைகளை இழந்து சிறுபான்மையினர் என்ற அவப்பெயருடன் வடக்கு, கிழக்கில் வாழுகின்ற ஓர் அவலநிலை உருவாகப் போகின்றது.

ஆனால் இந்தியாவும்- சீனாவும் தமது ஆதிக்கப் போட்டிக்கான ஒரு களமாகத் திருகோணமலையைத் தேர்வு செய்துவிட்டனவா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை. தமது எல்லையில் நிலவும் பிரச்சினைகளுக்குரிய தீர்வை எட்ட முடியாது காலத்தை இழுத்தடித்து வரும் இந்த இரண்டு நாடுகளும் சுண்டங்காய் அளவே உள்ள இலங்கையில் உரிமை கோருவது எள்ளி நகைப்பதற்குரிய ஒன்றாகவே உள்ளது.

சொல்லப்போனால் இலங்கை அரசு விலாங்கு மீனைப் போன்று சீனாவுக்குத் தலையையும், இந்தியாவுக்கு வாலையும் காட்டிக் கொண்டு தனது பிழைப்பை நடத்தி வருகின்றது. ஆனால் அதன் உண்மையான அன்பும், நெருக்கமும் சீனாவின் பக்கமே உள்ளது. இதை இதுவரை உணர்ந்து கொள்ளாதது இந்திய இராஜதந்திரத்தின் மிகப்பெரிய தோல்வி என்றே கருதவேண்டியுள்ளது.

மோடியின் பிரதிநிதிகளாக எத்தனை சுப்பிரமணிய சுவாமிகள் இங்குவந்து பல்லைக்காட்டி நின்றாலும் இலங்கை அரசு தனது கொள்கையிலிருந்து மாறப் போவதில்லை. ஏனென்றால் சீன அரசு விரித்த வலையில் அது வசமாகவே மாட்டிக் கொண்டுவிட்டது.

ஆனால் இங்கிலாந்து மண்ணில் தொடர்




தோல்விகளால் துவண்டுபோய்க் காணப்படும் இந்திய கிரிக்கெட் அணி போன்று இந்திய அரசும் இலங்கையில் அவ மானங்களை எதிர்கொள்ளத்தான் போகின்றது. எத்தனை நரேந்திர மோடிகள் வந்தாலும் தற்போதைய நிலையில் இந்தியா தலை நிமிர்ந்து நிற்கப் போவதில்லை. இது அந்த நாட்டின் சாபக்கேடே ஒழிய வேறொன்றுமில்லை.

# மன அழுத்தத்தை வெற்றி கொள்வோம்


தட்சா.ஜோ

காலஒட்டத்தில் உழைப்பு என்ற ஒன்றுக்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. பணத்துக்கான ஓட்டமாகவே வாழ்க்கையும் நகர்கிறது. இந்த வாழ்க்கையில் ஏற்படும் போட்டி, பொறாமை, பழிவாங்கல், புரிந்துணர்வின்மை ஆகியவற்றால் மன அழுத்தத்துக்கு உள்ளாக்கப்படுகின்றோம். ஆண்களோ, பெண்களோ யாராக இருந் தாலும் மனஅழுத்தம் என்பதை உணராதவர்களாக இருக்க முடியாது. வாழ்க்கை என்பது இன்பமும், சுவாரசியமும் கலந்தது. வாழ்க்கையின் ஓட்டத்தில் சில காலகட்டத்தில் நாம் தொந்தரவுக்கு உள்ளாகலாம். ஏமாற்றப்படலாம். இந்த நேரத்தில்தான் எம்மைப் பற்றி நாங்களே குறைவாகவும் தோல்வி மனப்பான்மை உடையவர்களாகவும் நினைக்கின்றோம். எம்மை அறியாமலே எங்களைப் பற்றியும் எமது வாழ்க்கை பற்றியும் எதிர்மறையான கருத்துக்களை எம்முள் திணிக்கின்றோம்.

மன அழுத்தம் என்பது ஒரு காலகட்டத்தில் தற்கொலையிலும் போய் நிற்கக் கூடியது. இந்தச் சந்தர்ப்பங்களில்தான் எங்களைப் பற்றிய நல்ல விடயங்களை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சொல்வது சுலபம். செய்வது கடினம் என்று நீங்கள் நினைப்பதை நான் ஒத்துக்கொள்கின்றேன். இருப்பினும் நம்முள் எதிர்மறையான மனப்பான்மை தோன்றும் சந்தர்ப்பங்களில் அதனை அழித்தே ஆகவேண்டும்.



மன அழுத்தங்கள் ஏற்படும் வேளைகளில் மோசமான விடயங்களைப் பற்றி மேலும் நினைத்துக் கொண்டிருக்காமல் எங்களுக்கு பிடித்தமான விடயங்களை செய்யும் வகையில் மனதை திருப்ப வேண்டும். நாம் அப்படிச் செய்கிறோமா? இல்லை. என்ன பிரச்சினையோ அதனையே நினைத்து அதற்குள்ளே சுழன்றுகொண்டிருப்போம். அதனை விட்டு வெளியே வரமுயற்சிப்ப தில்லை.



பொதுவாக எல்லோரும் சந்திக்கும் பிரச்சினைகளில் ஒன்றுதான் இந்த மன அழுத்தம். அதிகப்படியான வேலைப்பளுவினால் மட்டுமன்றி, சுவையில்லாத நேரம் கடந்த உணவுகள், எரிச்சலூட்டும் வகையிலான உடன் பணிபுரிவோரின் செயல்கள், அதிகாரிகளின் கோபம், ஏமாற்றம், பயம், நிராகரிப்பு, எரிச்சல், அதிக வேலை, அதிக சிரத்தை, குழப்பம், போர்கள், திருமணங்கள், விவாகரத்துகள், நோய்கள், பதவி இழப்பு, பெயர் இழத்தல், கடன், வறுமை, தேர்வு, போக்குவரத்து நெரிசல், வேலை அழுத்தம், கோபம், நட்புமுறிவு, உறவு விரிசல் என நம்மைச் சுற்றி நிகழும் எல்லா விதமான காரணிகளும் மன அழுத்தத்துக்குள் நம்மை இட்டுச் செல்ல முடியும்.

புகை பிடித்தல், சரியான உணவுப் பழக்கம் இல்லாமை, போதை மருந்துப் பழக்கம், குடிப்பழக்கம், சரியான தூக்கம் இல்லாமை இவையெல்லாம் மன அழுத்தத்தை நாம் விலை கொடுத்து வாங்கும் செயல்கள். புகை பிடிக்கும்போது உடலில் கலக்கும் நிக்கோட்டினுக்கு மன அழுத்தத்தை அதிகரிக்கும் சக்தி இருப்பதாக ஆராய்ச்சிகள் நிரூபித்திருக்கின்றன.

இறுக்கமான சுழலில் சுழன்று கொண்டிருக்கிறது உலகம். எல்லாத் துறையிலும் எல்லாப் பணி நிலைகளிலும் அனைவரும் ஒருவிதமான மன இறுக்கத்துடனேயே உழன்று கொண்டிருக்கிறார்கள். மன அழுத்தத்தைக் குறித்து மருத்துவர்கள் குறிப்பிடுகையில்; எதிர்பாராத சுழலுக்கு மனிதன் தள்ளப்படும் போதே அதிக மன அழுத்தம் உருவாகின்றது என்கிறார்கள். குழந்தைகள் எதிர்பார்ப்புகள் அதிகம் இல்லாதவர்கள், அவர்கள் எதையும் ஆனந்தத்துடன் பெற்றுக்கொள்ளும் தன்மையுடையவர்கள். எனவே, அவர்களால் மன அழுத்தம் இல்லாமல் வாழ முடிகிறது.

மன அழுத்தம் உருவாகும்போதுதான் வெறுப்பு, எந்த ஒரு செயலையும் செய்ய முடியாத தவிப்பு என ஒன்றன் பின் ஒன்றாக எல்லாம் வரும். வேலைக்குச் செல்வது என்று முடிவெடுத்துவிட்டால் நிச்சயம் சில சமயங்களில் அங்கு அதிகப்படியான வேலையை செய்ய வேண்டிவரும். சக பணியாளர்களுடன் முரண்பாடுகள் வரும். அதிலும் குறிப்பாக பெண் பணியாளர்கள் பல சிக்கல்களை சந்திக்க நேரிடும். அப்படி அதிகப்படியான வேலையைச் செய்யும் போது, மனமானது சோர்ந்து விடுவதோடு, உடல்நலத்தையும் பாதிக்கும்.

மன அழுத்தம் உறவுகளிலும் விரிசலை ஏற்படுத்திவிடுகிறது என்பதை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். எமது மன அழுத்தத்தை எமது உறவுகளுக்கு நாம் திணிக்க முற்படும் போது அங்கு உறவு முறிவடையும் வாய்ப்புக்கள் அதிகம் ஏற்படும்.

மனஅழுத்தத்தில் இருந்து நாம் சுயமாக வெளிவரமுடியும். கடினமான பொழுதுகளும் நம் வாழ்வில் வந்திருக்கும். அந்தச் சந்தர்ப்பங்களில் துணை தேவைப்படும். அந்த துணையின் உதவியுடன் மன அழுத்தத்தில் இருந்து வெளிவரலாம்.

மன அழுத்தத்திலிருந்து வெளிவருவதற்காக உளவியல் நிபுணர்கள் பல வழிகளை முன் வைத்துள்ளனர். எந்தவொரு விடயத்தையும் மறக்கச் செய்து வலிகளை குறைப்பதில் இசைக்கு நிகர் வேறில்லை என்கிறார்கள். அமைதியான மற்றும் மென்மையான இசையையோ அல்லது உங்கள் மனதுக்குப் பிடித்த இசையையோ கேட்பது மிகப் பொருத்தமான ஒன்றாகக் கூறப்படுகின்றது. மன அழுத்தங்களோ அல்லது உறவுகளில் ஏற்பட்ட விரிசல்களையோ குறைக்கும் ஆற்றல் மென்மையான இசைக்கு உள்ளது.

எங்களுக்குப் பிடித்த ஒருவர் எமது மனம் நோகும்படி நடந்தால் அல்லது எங்களை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்ற எண்ணம் எங்கள் மனதில் உருவாகும் போது மன அழுத்தத்துக்கான தடம் ஆரம்பிக்கின்றது. கோபப்படுத்தல், பயப்படுதல், கட்டுப்பாட்டை மீறிய கண்ணீர், அருகில் இருக்கும் பொருள்களை நிலத்தில் வீசுதல், கதவை ஓங்கி அடித்தல், வெளிவட்டாரத் தொடர்புகளை துண்டித்தல், தனிமையை விரும்புதல், சுயசித்திரவதைகள் என்பன மன அழுத்தத்தின் அறிகுறிகளாகக் காணப்படுகின்றன.

உடனடியாக மன அழுத்தத்தில் இருந்து எம்மால் வெளிவர முடியாது படிப்படியாக அதிலிருந்து வெளிவரலாம். பிடித்த ஆசிரியர் எழுதிய புத்தகத்தைப் படிப்பது, வீட்டை விட்டு வெளியேறி சற்றே காலாற நடந்து செல்வது, அருகிலுள்ள தோட்டம், பூங்கா போன்ற இடங்களுக்குச் செல்வது போன்றவற்றின் மூலமாக இறுகிய மனம் சற்றுத் தளர்வுற்று பிரச்சினைகளை பேசித்தீர்க்க முடியும். அந்தநிமிடம் முதல் வாழ்க்கையின் கவலைகள் உடையத் தொடங்கும்.

நாங்கள் மனதளவில் துன்பப்படும் போது வேண்டிய மிகச்சிறந்த விடயம் என்னவென்றால் அந்த மனதைக் குடையும் விடயத்தைப் பற்றி சம்பந்தப்பட்ட நபருடன் பேசுவதுதான். ஆனால் பேசுவதற்கு சம்பந்தப்பட்ட நபர் தயாராக இல்லாத பட்சத்தில் நாம் பொறுமை காக்க வேண்டும் என்பது அவசியமாகின்றது. பொறுமை யுடன் மனம் விட்டு பேசு வதன் மூலம் மனம் அமைதி பெறும். அது தான் எங்களால் முடியாத காரியமாயிற்றே.

உங்களுடைய உணர்வுகள் மற்றும் பிரச்சினைகளைப் பற்றி எழுதுவது மன அழுத்தத்தை வெகுவாக ஆற்றுப்படுத்தும் என்பதும் உளவியலாளர்கள் சொல்லும் விடயம். இன்றைய சமுதாயத்தினராகிய நாமும் எழுதுகிறோம். ஆனால் என்ன எழுதுகிறோம். சமூக வலைத்தளங்களில் எமது இறுதிப் பதிவை எழுதுகிறோம். அண்மைக்காலமாக காதல் தோல்வியால் மன அழுத்தத்துக்கு ஆளாகியவர்களின் செயல்கள் குடாநாட்டை கதிகலக்கி வருகின்றன. பிரச்சினை என்று வந்து விடால் சண்டை போட்டு, அழுது, ஆர்ப்பாட்டம் செய்து, நாமும் பதற்றமாகி, மற்றவர்களையும் பதற்றமடையச் செய்வதையே வாடிக்கையாகவே வைத்துள்ளோம். இதுவே உறவுகளிடையே விரிசலை உருவாக்குகின்றது. அதுவே மன அழுத்தத்தை கொண்டுவருகின்றது. அது உச்சக்கட்டத்தை அடையும் போது நம்மை நாமே வருத்திக் கொள்கிறோம். பிரச்சினை முடிந்து அமைதியாகிய பின்னர் நாம் செய்தவற்றை நினைத்துப் பார்த்தால் எமக்கே கவலையாக இருக்கும். நாம் ஏன் இப்படி இருக்கின்றோம் என யோசிப்போம். மற்றவர்களிடம் நான் மிகவும் நன்றாக இருக்கிறேன் என்று நாம் பதில் அளிக் கும் போது உங்களின் மன அழுத்தத்தின் நிலையை நாங்கள் அறிந்துகொள்ளலாம். உங்களை விரும்புபவர்களின் ஆதரவு மனஅழுத்தத்தைக் குறைக்கச் சிறந்த வழியாகும். மன அழுத்தத்திலிருந்து விடுபட்டு அமைதியான வாழ்வு வாழ எல்லோராலும் முடியும்...! வாழ்ந்து பாருங்கள்...

---

வாசகர் திருமுகம்

## ஏன் இந்த அநியாயம்?

நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள மோட்டார் சைக்கிள் பாதுகாப்புத் தரப்பினருக்கும் மாநகர சபையினருக்குமிடையே எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்று உள்ளதாகவே எண்ணத் தோன்றுகின்றது. ஒவ்வொரு வருடமும் நல்லூர் ஆலயத் திருவிழாக்களின் போது 25 நாள்களும் அதிகாலையில் ஆலயத்துக்குச் செல்லும் அடியவனில் நானும் ஒருவன். அவ்வாறே இந்த வருடமும் கடந்த முதலாம் திகதி காலையில் ஆலயத்துக்குச் செல்லும் போது அரசடி வீதியிலுள்ள முதலாவதாகக் காணப்பட்ட செல்லப் பிள்ளையார் மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் எனது மோட்டார் சைக்கிளை பாதுகாப்புக்காக விட்டிருந்தேன். திரும்பி வந்து வாகனத்தை எடுத்தபோது மாநகரசபைத் தீர்மானத்தின் பிரகாரம் வாகன பாதுகாப்புக்கு 20 ரூபா எனக் கூறி வசூலித்தனர். 20 ரூபாவுக்குரிய சிட்டையும் தந்திருந்தனர். கடந்த 9ஆம் திகதி மாலை கோயிலுக்குச் செல்லும் போது மாநகர சபையினரின் வாகனப் பாதுகாப்புக் கட்டணம் தொடர்பிலான துண்டுப் பிரசுரம் ஒன்று அனைத்துப் பாதுகாப்பு நிலையங்களிலும் ஒட்டப்பட்டிருந்ததை அவதானித்தேன். கடந்த 10 ஆம் திகதி காலையில் மேற்குறித்த நிலையத்தில் வாகனத்தை விடும்போது குறித்த நிலையத்திலும் குறித்த துண்டுப் பிரசுரம் ஒட்டப்பட்டிருந்தது. ஆலயத்துக்கு சென்று விட்டு திரும்பி வந்து வாகனத்தை எடுக்கும்போது 10 ரூபா இனை நான் வழங்கிய போது அங்கு பொறுப்பாக நின்றவரால் 20 ரூபா தரவேண்டும் எனக் கூறப்பட்டது. நான் குறித்த துண்டுப் பிரசுரம் பற்றி கோரியபோது, நாம் மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையில் தேவையான வகையில் கவனித்தே அனுமதி பெற்றுள்ளோம். நீர் வேண்டுமானால் இதிலுள்ள தொலைபேசி எண்ணுடன் கதைத்துக் கொள்ளும். தற்போது 20 ரூபாவைத் தந்து விட்டுச் செல்லும் எனக் கூறப்பட்டது. அடுத்த நாள் காலையில் நான் இந்த விடயம் தொடர்பாக அந்த தொலைபேசி இலக்கத்துக்கு அறிவித்தபோது நடவடிக்கை எடுப்பதாகக் கூறப்பட்டது. எனினும் தொடர்ந்து இதே நிலைமையே காணப்பட்டது. பின்பு பத்திரிகைகள் மூலமாகவும் இந்த விடயம் தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் இன்று காலையில் குறித்த நிலையத்தில் வாகனத்தை விட்டதன் பின்னர் திருப்பி எடுக்கும் போது 20 ரூபா கட்டாயமாக அறவிடப்பட்டது. இது தொடர்பில் மீண்டும் வினவியபோது நீர் விரும்பினால் வேறு எந்த நிலையத்திலாவது உமது வாகனத்தை விடலாம். இங்கு விடுவதாக இருந்தால் இது தான் கட்டணம் எனவும், நாம் கொடுத்த பணமே இன்னும் நாங்கள் உழைக்கவில்லை எனவும் கூறப்பட்டது. தொடர்ந்தும் இந்த நிலைமையே காணப்படுகின்றது. இது மாநகரசபையினருடன் வாகன பாதுகாப்பு நிலையத்தினர் செய்து கொண்ட எழுதப்படாத ஒப்பந்தமா என்பது நல்லூரானுக்கு மட்டுமே வெளிச்சம். இதன் மூலம் பொதுமக்களின் பணம் ஒவ்வொரு நாளும் பெருமளவில் எத்தரப்பினராலோ சுரண்டப்படுகின்றது என்பது மட்டுமே உண்மையாகும். கடந்த வருட உற்சவ காலத்தின் போதும் முதல் பத்து நாள்களும் இவ்வாறான நிலைமைகளே காணப்பட்டன என்பதனையும் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஞா.விவேகன்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அனுபவ பூர்வமான அறிவு கைகொடுக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எளிதாகப் பணிகளை செய்து முடிப்பார்கள். செயல் திறன் அதிகரிக்கும். புத்திசாதுரியம் அதிகரிக்கும். பயணங்களின்போது கவனம் தேவை.

**இடபம்:** குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது குறை சொல்லியபடி இருப்பார்கள். குடும்பத்தில் இருவரில் ஒருவர் புரிந்து கொண்டு செயல்படுவது நன்மையைத் தரும். பிள்ளைகள் எதிர்காலம் குறித்து தேவையான பணிகளைக் கவனிப்பீர்கள்.

**மிதுனம்:** எதிலும் ஆதாயம் கிடைக்கும். பேச்சு திறமை அதிகரிக்கரிக்கும். எதிர் பாலினத்தவரிடம் பழகும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் வீண் அலைச்சல் குறையும். வாழ்க்கை துணையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** வியாபாரம் தொடர்பாக செய்து முடிக்க நினைக்கும் காரியங்கள் தள்ளிப்போகலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல், வேலைப்பளு இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**சிங்கம்:** பிள்ளைகள் மூலம் மனம் மகிழும் காரியங்கள் நடைபெறும். உறவினர்கள் வருகை இருக்கும். பேச்சுத் திறமையால் காரியங்களைச் சாதகமாகச் செய்து முடிப்பீர்கள். அலைச்சல் குறையும். காரிய அனுகூலம் உண்டாகும்.

**கன்னி:** எல்லாவித வசதிகளும் உண்டாகும். தேடிப்போனதும் தானாகவே வந்து சேரும். அறிவு திறன் அதிகரிக்கும். நெருக்கமானவர்களுடன் இனிமையாகப்பேசிப் பொழுதைக் கழிப்பீர்கள். மனோ தைரியம் கூடும். மதிப்புக் கூடும்.

**துலாம்:** தொழில் வியாபாரம் சிறப்பான முன்னேற்றம் பெறும். வாடிக்கையாளர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டுப் பெறுவார்கள். சிலருக்கு உத்தியோகம் கிடைக்கலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வியில் கூடுதல் கவனம் தேவை. நீண்ட நாள்களாகச் செய்ய நினைத்த ஒரு காரியத்தைச் செய்து முடிப்பீர்கள். மதிப்பும், மரியாதையும் கூடும்.

**தனுசு:** மனம் மகிழும் சம்பவங்கள் நடைபெறும். மனக்கவலை குறையும். எல்லாவகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். திடீர் செலவு உண்டாகலாம். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம்.

**மகரம்:** தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும் என்ற தன்னம்பிக்கை ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி வரும். அலுவலக வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும்.

**கும்பம்:** குடும்பத்தில் வெளிநபர்களால் ஏதாவது குழப்பம் ஏற்படலாம். சொந்த விடயங்களுக்கு அடுத்தவர் ஆலோசனைகளை கேட்பதைத் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் நலனுக்காக செலவுகள் செய்ய வேண்டி இருக்கும்.

**மீனம்:** தீர ஆலோசனை செய்து பக்குவமான அணுகு முறையால் வெற்றி காணும் நாள். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக்கூடும். புதிய நபர்களின் நட்புக் கிடைக்கும்.

## நாளை

**ஆவணி-06 வெள்ளிக்கிழமை | 22.08.2014**

திதி: துவாதசி பி.ப.02.34 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் மு.இ.11.40 வரை
சுபநேரம்: 06.05-07.35 வரை
இராகுகாலம்: 10.35-12.05 வரை
பிரதோஷ விரதம்

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## நாம் அறிபவை அனைத்தும் ஆன்மாவின் வெளிப்பாடே

"நீ முட்டாள்தனமாக யாரை வழிபடுகிறாயோ, அவரை உனக்கு நான் கூறுகிறேன்."


அறியப்படுபவற்றுள், மிக நன்றாக அறியப்படுபவர் ஏகமான அந்த ஒரே கடவுள் தான். எங்கும் நாம் காணும் ஒரே பொருள் அவரே. தாங்கள் இருப்பதை அனைவரும் அறிவர். 'நான் இருக்கிறேன்' என்பது எல்லோருக்கும் தெரிகிறது. விலங்குகளுக்கும் தாங்கள் இருப்பது தெரியும். நாம் அறிபவை அனைத்தும் ஆன்மாவின் வெளிப்பாடே. இந்த உண்மையைக் குழந்தைகளுக்குக் கற்பியுங்கள், அவர்கள் புரிந்து கொள்வார்கள். அறிந்தோ அறியாமலோ ஒவ்வொரு சமயமும் ஆன்மாவை வழிபட்டு வந்திருக்கிறது, அறியாமல் செய்தாலும் அதையே வழிபடுகிறது. ஏனெனில் ஆன்மாவைத் தவிர வேறு எதுவுமில்லை.

நமக்குத் தெரிந்த அளவில் உலக வாழ்வைப் பற்றிக் கொண்டு கண்ணியமில்லாமல் நாம் தொங்குவது தான் துயரம் அனைத்துக்கும் காரணம். ஏமாற்றுக்கும் திருட்டுக்கும் இடம் கொடுப்பது இதுவே. பணத்தை அது ஒரு தெய்வமாக்குகிறது, அச்சமும் தீமைகளும் பின் தொடர்கின்றன. பொருளை ஒரு பொருட்டாக மதிக்காதே, வாழ்க்கை உட்பட எதனிடத்தும் நீ பற்றுக்கொள்ளாமல் இருந்தால் அச்சமே இல்லை.

"இந்த உலகில் பலவற்றைக் காண்பவன் திரும்பத் திரும்ப மரணத்துக்கு உள்ளாகிறான்."

எல்லாம் ஒன்று என்பதைக் காணும்போது, உடலின் மரணமோ, மனத்தின் மரணமோ நமக்கு நேர வழியில்லை. எல்லா உடல்களும் என்னுடையவை, ஆகவே எனது உடலும் அழிவற்றதே. ஏனெனில் மரம், விலங்கு, சூரியன், சந்திரன், பிரபஞ்சம் அனைத்துமே எனது உடல் அல்லவா? எனக்கு எப்படி மரணம் நேரம் முடியும்? ஒவ்வோர் மனமும் ஒவ்வோர் எண்ணமும் என்னுடையதே. பிறகு மரணம் எப்படி நேர முடியும்? ஆன்மா பிறந்ததும் இல்லை; சாவதும் இல்லை. இதை உணரும் போது ஐயங்கள் அனைத்தும் அகன்றுவிடுகின்றன. "நான் இருக்கிறேன்; அறிகிறேன்; நேசிக்கிறேன்" இவை குறித்தும், ஒரு போதும் சந்தேகங்கள் உண்டாவதில்லை. எனக்குப் பசி இல்லை, ஏனெனில் உண்பவை அனைத்தும் என்னால் தானே உண்ணப் படுகின்றன. ஒரு முடி உதிர்ந்து விட்டால், நாம் இறந்துவிட்டதாகக் கருதுவதில்லை. ஓர் உடல் இறப்பது என்பது ஒரு முடி உதிர்வதற்குச் சமமானதே....

# என்புகளில் காணப்படும் துவாரங்களை அடைக்க புதிய பொலிமர் கண்டுபிடிப்பு



விபத்துக்கள், அறுவைச் சிகிச்சையின் போது அல்லது பிறப்பிலேயே என்புகளில் ஏற்படும் துவாரங்களை அடைக்க புதிய பொலிமர் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பஞ்சுபோன்று மென்மையாகக் காணப்படும் இந்த பொலிமர் டெக்ஸஸாஸிலுள்ள A&M என்ற பல்கலைக்கழகத்தில் Dr.Melissa Grunlan என்பவரின் தலைமையில் ஆய்வில் ஈடுபட்ட குழுவினால் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை 60 டிகிரி செல்லிசியஸிற்கு வெப்பம் ஏற்றும்போது மிருதுவான தன்மையை அடைகின்றது. இதனால் துவாரங்களில் இலகுவாக உட்புகுத்தக்கூடியதாக இருக்கும் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | | | | | 4 |
| | | 6 | | | | 5 | 1 | |
| 7 | 5 | 1 | 9 | | 4 | 8 | | |
| 2 | 8 | | | 9 | 6 | | | 5 |
| | | | | | | | | |
| 3 | | | 2 | 5 | | | 6 | 7 |
| | | 7 | 3 | | 1 | 2 | 4 | 6 |
| | 6 | 3 | | | | 7 | | |
| 8 | | | 6 | | | | 5 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 3 | 8 | 7 | 6 | 4 | 9 | 1 | 5 |
| 7 | 4 | 9 | 1 | 5 | 3 | 6 | 8 | 2 |
| 1 | 6 | 5 | 9 | 8 | 2 | 3 | 7 | 4 |
| 8 | 2 | 4 | 3 | 1 | 6 | 5 | 9 | 7 |
| 9 | 7 | 1 | 2 | 4 | 5 | 8 | 3 | 6 |
| 3 | 5 | 6 | 8 | 7 | 9 | 2 | 4 | 1 |
| 6 | 9 | 3 | 4 | 2 | 7 | 1 | 5 | 8 |
| 4 | 1 | 2 | 5 | 3 | 8 | 7 | 6 | 9 |
| 5 | 8 | 7 | 6 | 9 | 1 | 4 | 2 | 3 |

# சமநிலை தவிர்ப்பு உதையை சாதகமாக்கிய சக்திவேல் வி.க.

கரணவாய், ஓக.21
பரபரப்பாகவும், விறுவிறுப்பாகவும் இடம்பெற்ற ஆட்டத்தில் சமநிலை தவிர்ப்பு உதையின் மூலம் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்தது கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக 'ஏ' அணி வெற்றி பெற்றது.



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும், கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் போட்டி ஆரம்பமாகி 2 ஆவது நிமிடத்தில் சக்திவேல் விளையாட்டுக் கழக வீரர் கரன் அசத்தலான கோல் ஒன்றைப் போட்டு எதிரணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார்.

இதனையடுத்து தம்மை தயார் நிலைக்குக் கொண்டு வந்த சென்.மேரிஸ் அணியினர் எதிரணியினர் கோல் போடுவதனை தடுத்து நிறுத்தியதுடன் பதில் கோல் போடுவதற்கு முனைப்புக் காட்டினர்.

ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் அணி வீரன் கமல்ரன் தனது கால்களுக்குள் அகப்பட்ட பந்தொன்றை நிதானமாகத் தட்டிச் சென்று எதிரணியின் கோல் காப்பாளரை ஏமாற்றி கோல் கம்பங்களுக்குள் சரண் புகவைத்தார்.


இதனால் ஆட்டம் 1:1 என்று சமநிலை அடைய ஆட்டம் மேலும் சூடுபிடித்தது. இருந்த போதும் மேலதிக கோல்கள் போடப்படாத நிலையில் போட்டி இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணி வீரர்களும் கடுமையாகப் போராடிய போதும் அவர்களால் கோல் போட முடியவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதனை அடுத்து வெற்றியாளர்களைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையின் மூலம் 4:3 என்ற கோல் கணக்கில் கொடுக்கிளாய் சக்திவேல் 'ஏ' அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

அதற்கு முன்னர் இடம்பெற்ற ஆட்டத்தில் உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகமும், வெற்றிலைக்கேணி சென். செபஸ்தியான் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் 4:1 என்ற அடிப்படையில் சென்.செபஸ்தியான் அணி வெற்றி பெற்றது. அந்த அணி சார்பாக சிவகுமார், டெனி ஆகியோர் தலா ஒரு கோலையும், அருமை 2 கோல்களையும் போட்டதுடன் பாரதி விளையாட்டுக் கழகம் சார்பில் சந்திரகாந்தன் ஒரு கோலைப் போட்டார். (5-108)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 21
கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகம் நடத்தும் சிவகுரு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் புத்தூர் எவரெஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிளஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (5-23)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 21
கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் விளையாட்டுக் கழகம் நடத்தும்; விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருநகர் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து இரணைமாதா நகர் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாச் சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் பச்சை அணி மோதவுள்ளது.

முற்பகல் 11.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் சந்திர உதயா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 1.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கலை ஒளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் கிறின் பீல்ட் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 2.30 மணிக்கும் இடம்பெறும் ஆட்டத்தில் லக்கி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் சென். ஜூசியா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (5-23)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 21
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். தோமஸ் யுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (5-23)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 21
உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நெடியகாடு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (5-23)

# சூடு பிடித்தன ஆட்டங்கள்

## பலாலி விண்மீன், திக்கம் இளைஞர் வி.க.வெற்றி

கரணவாய், ஓக.21
விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் அடிப்படையில் வல்வை விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அதில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும், வல்வை விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் எதிரணியினர் தம்மை தயார் நிலைக்கு கொண்டு வருவதற்குள்ளே 2ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட்டார் வல்வை விளையாட்டுக் கழக வீரர் சுரேன்.

இதனை அடுத்து தம்மைச் சுதாகரித்துக் கொண்ட விண்மீன் விளையாட்டுக்கழக அணியினர் பதில் கோல் போடுவதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்தனர்.

10 ஆவது நிமிடத்தில் அதற்கு கைமேல் பலன் கிடைத்தது. மத்திய பகுதியில் வைத்துக் கடத்தப்பட்ட பந்தை தனது கால்களுக்குள் வாங்கி எதிரணி வீரர்களுக்கு போக்குக் காட்டி அழகான கோல் ஒன்றைப் போட்டார் விண்மீன் அணி வீரர் காண்டீபன்.

இதனை அடுத்து இரு அணி வீரர்களும் மேலதிக கோல்களைப் போடாத நிலையில் 1:1 என்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி மீண்டும் சூடுபிடிக்க பந்தும் இரு அணி வீரர்களினதும் கால்களுக்குள் அகப்பட்டு அங்குமிங்கும் அலைந்தது.

கோல்போடுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் பல வீணடிக்கப்பட்டுக் கொண்டே இருந்தன.

ஆனாலும் 40 ஆவது நிமிடத்தில் காண்டீபன் மீண்டும் ஒருகோலைப் போட்டு தமது அணியை முன்னிலைப் படுத்தினார்.

தொடர்ந்து மேலதிக கோல்கள் போடப்படாத நிலையில் 2:1 என்ற கோல் கணக்கில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும், நாகர்கோவில் இளந்தென்றல் விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆட்டத்தின் பெரும்பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த திக்கம் இளைஞர் அணி யோகனின் அதிரடிக் கோல்கள் மூலம் 4:1என்ற அடிப் படையில் வெற்றி பெற்றது. திக்கம் இளைஞர் அணி சார்பாக சதீஸ்குமார், மைக்கல்ராஜ் தலா ஒரு கோலையும் யோகன் 2 கோல்களையும் போட எதிரணி சார்பாக மணிமாறன் ஒரு கோலைப் போட்டார். (5-108)

## தென்னாபிரிக்கா வெற்றி

தென்னாபிரிக்கா, சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 65 ஓட்டங்களினால் வெற்றி பெற் றுள்ளது.

சிம்பாப்வே புலவாயோவில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 49.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 257 ஓட் டங்களைப் பெற்றது. இதில் டு பிலேசிஸ் 55 ஓட்டங்களையும், டேவிட் மில்லர் 45 ஓட்டங்களையும், குயின்டன் டி கொக் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக பிரைன் விக்டோரி, புரொஸ்பர் உடேய்ஸா, ஜோன் நைம்பு, சீன் வில்லியம்ஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 49.1 பந்துப் பரிமாற்றங்களில் 196 ஓட்டங்களைப்பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. சீன் வில்லியம்ஸ் 55 ஓட்டங்களைப் பெற்றார். வெய்ன் பார்னல், ரயன் ஹரிஸ் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பார்னல் தெரிவானார். (5)

## சென்.அன்ரனிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 21
திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கிறின்லைட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (5-23)



## பிற்போடப்பட்டது அரையிறுதி ஆட்டம்

கரணவாய், ஓக.21
பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தி வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் அனைத்தும் தவிர்க்க முடியாத காரணத்தினால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக போட்டி இடம்பெறும் மைதானத்தில் நீர் தேங்கி நின்று சேறும் சகதியுமாகக் காணப்படுவதினாலேயே இந்தப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளன.

போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (5-108)




# ஒரு நாள் தொடரிலும் அசத்துமா இலங்கை ! பலமான அணி அறிவிப்பு

பாகிஸ்தானுக்கு எதிரான சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான இலங்கை அணியின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. சுழற்பந்து வீச்சாளர் சுராஜ் ரந்திவ், வேகப்பந்து வீச்சாளர் தம்மிக பிரசாத், சகலதுறை வீரர் திசர பெரேரா ஆகியோர் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

சுராஜ் ரந்திவ் 2011 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கை ஒருநாள் குழாத்தில் இடம் பிடித்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

இலங்கை அணி:

அஞ்சலோ மத்யூஸ் (அணித்தலைவர்), திலகரட்ண டில்ஷஜுன், உபுல் தரங்க, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, தினேஷ்சந்திமால், அஷஜுன்; லகிரு திரிமன்ன, லசித் மலிங்க, நுவான் குலசேகர, தம்மிக்க பிரசாத், ரங்கன ஹேரத், பிரசன்னா, ரந்திவ், திசாரா பெரேரா. (5)

# இங்கிலாந்தின் உள்ளூர் ஆட்டத்தில் விளையாடித் தேறுங்கள்

## இந்தியாவுக்கு அறிவுரை சொல்கிறார் மைக்கல் வோகன்

ஐ.பி.எல். கிரிக்கெட்டை விடுத்து இங்கிலாந்து உள்நாட்டு கிரிக்கெட்டில் விளையாட இந்திய கிரிக்கெட் வீரர்கள் முன் வர வேண்டும் என்று இங்கிலாந்து முன்னாள் அணித் தலைவர் மைக்கல் வோகன் தெரிவித்துள்ளார்.



இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரின் மிகப்பெரும் தோல்வியின்பின்னர், இந்தியஅணித் தலைவர் டோனியிடம், ஐ.பி.எல். கிரிக்கெட் ஆட்டம்தான் இந்திய வீரர்களின் பின்னடைவுக்குக் காரணமா என்று கேட்டபோது, 'ஐ.பி.எல். மீது பொறாமை வேண்டாம்' என்று உணர்ச்சிவசப்பட்டு பதில் அளித்தார்.

ஆனால் மைக்கல் வோகன், ஐ.பி.எல். கிரிக்கெட்டிற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை விடுத்து இங்கிலாந்தில் வந்து உள்நாட்டு கிரிக்கெட்டில் இந்தியவீரர்கள் விளையாட வேண்டும் என்று கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை சில கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். என்னுடைய பரிந்துரை இங்கிலாந்து உள்நாட்டு கிரிக்கெட்டில் விளையாட வைப்பதாகும். ஐ.பி.எல். கிரிக்கெட்டின் பண மழைக்கு வெளியே பரவலான கிரிக்கெட் அணுகுமுறைகளுக்கு, ஆட்டங்களுக்கு இந்திய வீரர்கள் பலர் தங்களை உட்படுத்திக் கொள்வது அவசியம். இங்கிலாந்தில் எப்படி துடுப்பெடுத்தாடுவது பந்து வீசுவது என்பதை அவர்கள் கற்க வேண்டும்.

கடந்த 30 ஆண்டுகளில் பெரிய வீரர்கள் பலர் இங்கிலாந்து உள்ளூர் கிரிக்கெட்டில் விளையாடியுள்ளனர். இது நிச்சயம் வளர்ச்சிக்கு உதவும், என்கிறார். சுனில் கவாஸ்கர், கபில்தேவ், சச்சின் டெண்டுல்கர், ராகுல் டிராவிட், சேவாக், சகீர்கான், முரளி கார்த்திக் என்று இந்திய வீரர்கள் பலரும் இங்கிலாந்தில் ஆடியுள்ளனர்.

அதற்கு மேலாக லாரா, ரிச்சர்ட்ஸ், கேரி சோபர்ஸ் உள்ளிட்ட அயல்நாட்டு முன்னணி வீரர்களும் இங்கிலாந்து உள்ளூர் கிரிக்கெட்டினால் பயனடைந்துள்ளனர். வசிம் அக்ரம், வக்கார் யூனிஸ், சக்லைன் முஷ்டாக் தற்போது சயீத் அஜ்மல், இந்தியாவின் ஹர்பஜன் சிங் என்று உள்ளூர் கிரிக்கெட்டில் நிறைய கற்றுக் கொண்டுள்ளனர். (5)

# டுவிட்டரில் நிர்வாணப் படம்: நன்றி கூறிய இங்கிலாந்து வீரர்



இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் இயன் பொத்தம் டுவிட்டர்பக்கத்தில் நிர்வாணப்படம் ஒன்று வெளியாகியிருந்ததைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்துள்ளார். இயன் பொத்தம் இங்கிலாந்து அணியின் முன்னாள் பன்முக வீரர். இங்கிலாந்து பந்து வீச்சாளர்களில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நீண்ட நாளைய சாதனைக்குரியவர் இயன் பொத்தம்.


இப்போது ஜேம்ஸ் அண்டர்சன் இவரது சாதனையை முறியடிப்பதற்கு மிக அருகில் உள்ளார். இவரது டுவிட்டர் பக்கத்தை சுமார் 3,10,000 பேர் பின் தொடர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் நிர்வாணப் படத்தை பார்த்த இயன், தனது டுவிட்டர் பக்கம் ஹேக் செய்யப் பட்டுள்ளது கண்டு அதிர்ந்து போனார். முன்னாள் வெல்ஷ் அணியின் உதைபந்தாட்ட வீரர் ராபி சேவேஜ், பொத்தமின் டுவிட்டர் பக்கம் ஹேக் செய்யப்பட்டதை அவருக்கு அறிவுறுத்தினார்.

இதனையடுத்து பொத்தம் உடனடியாக நான் எனது கடவுச்சொல்லை மாற்றிவிட்டேன், சில விஷமிகள் இங்கு வருகை தந்துள்ளனர் என டுவீட் செய்தார்.

ஆனாலும் ஹேக்கருக்கு நான் நன்றி கூறுகிறேன். இந்தப் புகைப்படத்தினால் 20 நிமிடங்களில் 500 ஹிட்கள் கிடைத்தது. 25 நிமிடங்களில் ஹிட்டை 700ஆக உயர்த்தி விடுங்கள் என்று நகைச்சுவையாக டுவீட் செய்துள்ளார் இயன் பொத்தம். (த)

# மின்னல் வேகம் மீண்டும் வந்தது




உலகின் அதிவேக ஓட்ட வீரரான உசைன் போல்ட், உபாதையின் பின் பங்கு பற்றிய முதற் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார். கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் முதல் இவர் உபாதை காரணமாக போட்டிகளில் பங்குபற்றவில்லை. அண்மையில் பிரேசிலில் நடைபெற்ற நூறு மீற்றர் ஓட்டப் போட்டியில் 10.06 செக்கன்களில் ஓடி முடித்து வெற்றியைப் பெற்றுள்ளார். (5)

# இந்தியாவுக்கு ஆப்படிக்க இங்கிலாந்து தயார்

ஒருநாள் தொடரிலும் இந்திய அணியை வீழ்த்த, டெஸ்ட் தொடரில் களமிறங்கிய அதே இங்கிலாந்து அணி எந்த வித மாற்றமும் இன்றி ஒருநாள் தொடரிலும் விளையாடவுள்ளது. இங்கிலாந்திற்கு இந்திய கிரிக்கெட் அணி சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. நடந்து முடிந்த ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அபாரமாக கைப்பற்றியது.

வெற்றி மிதப்பில் உள்ள இங்கிலாந்து அணி, எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் தொடங்கவுள்ள ஒரு நாள் போட்டிக்கான அணி வீரர்கள் பெயரை அறிவித்துள்ளது. டெஸ்ட் அணியில் இருந்த அதே வீரர்கள் தவிர மேலும் நால்வரை கொண்டு 15 வீரர்கள் கொண்ட பட்டியலை இங்கிலாந்து கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து அணி விவரம்:

அலிஸ்டர் குக், ஹரி பல்லன்ஸ், இயன் பெல், மொயின் அலி, ஜேம்ஸ் அண்டர்சன், ஜோஸ் பட்லர், ஸ்டீவன் பின், கிறிஸ் வோகஸ், கிறிஸ் ஜோர்டான், ஜோ ரூட், பென் ஸ்டோர்க்ஸ், இயான் மோர்கன், ஜேம்ஸ் டிரட்வெல், ஹேரி குர்னே, அலெக்ஸ் ஹேல்ஸ்.

இவர்களுடன் புதிதாக தொடக்க வீரராக அலெக்ஸ் ஹேல்ஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதில் இயான் மோர்கன் உள்ளிட்ட கடைசி நால்வரும் ஒருநாள் போட்டிக்காக புதிதாக சேர்க்கப்பட்டவர்கள். எஞ்சிய 11 பேரும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர்கள். (5)



# யூத் ஒலிம்பிக்கில் நைஜீரியா விலகல்




ஆபிரிக்க நாடுகளில் பரவி வரும் எபோலா வைரஸ் நோய் அச்சுறுத்தல் காரணமாக யூத் ஒலிம்பிக் போட்டியில் இருந்து விலகுவதாக நைஜீரியா அறிவித்துள்ளது.

ஆட்கொல்லி நோயான எபோலா ஆபிரிக்க நாடுகளில் வேகமாகப் பரவி வருகிறது. இந்நோய்க்கு இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர். பத்து இலட்சத்துக்கும் அதிகமானோர் இந்நோயால் பாதிக்கப் பட்டுள்ளதாக கடந்த வாரம் உலக சுகாதார நிறுவனம் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.

மேலும், எபோலா நோய்க்கு எதிராக சர்வதேச சுகாதார நிறுவனம் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது. எனவே, மற்ற நாடுகளிலும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இதன் எதிரொலியாக எபோலா நோய் பரவியுள்ள சியரா லியோன், லைபீரியா ஆகிய நாடுகள் சீனாவில் நடைபெற உள்ள யூத் ஒலிம்பிக் போட்டியில் இருந்து விலகின. அந்த வரிசையில் தற்போது நைஜீரியாவும் இணைந்துள்ளது.

யூத் ஒலிம்பிக் போட்டியில் இருந்து நைஜீரியா விலகியதை சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர் தோமஸ் பாக் உறுதி செய்துள்ளார்.

இது தொடர்பாக தோமஸ் பாக் மேலும் கூறுகையில், எபோலா நோய் தாக்கியுள்ள இந்த கடினமான சூழ்நிலையில் ஒலிம்பிக் போட்டியில் இருந்து சியரா, லியோன் மற்றும் லைபீரியா நாடுகள் விலகியதை மதிக்கிறோம்.

இதேபோல் நைஜீரியாவும் விலக முடிவு செய்துள்ளதாக தகவல் அனுப்பியிருக்கிறது. இது வீரர்களுக்கு மிகவும் கடினமானது என்பதை நினைக்கும்போது கவலையாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார். (த)

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**பழையமாணவர் சங்கம் - யாழ்ப்பாணம்.**

அண்மையில் ஒய்வுபெற்ற எமது கல்லூரி அதிபரின் மணிவிழா தொடர்பான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் எவற்றிலும் நாம் ஈடுபடவில்லை என்பதை யாழ்ப்பாணம் இந்து கல்லூரி சமூகத்துக்கு அறியத்தருகின்றோம்.

தலைவர்
பழைய மாணவர் சங்கம்.

(சி/16127(10)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# பிளெட்சரை கழற்றிவிடும் இந்தியா

இந்திய அணியின் இயக்குனராக ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டதையடுத்து பயிற்சியாளர் டன்கன் பிளெட்சர் விலக முடிவெடுத்தால் அவரை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கட்டுப்படுத்தாது என்று கிரிக்கெட் சபை அதிகாரிகள் தெரிவித்தள்ளனர்.

டன்கன் பிளெட்சருக்கு அதிகாரம் எதுவும் மீதமில்லை. ரவி சாஸ்திரியே முடிவெடுப்பார், இது பிளெட்சருக்கும் நன்றாகத் தெரிந்திருக்கும். இந்தத் தருணத்தில் உதவிப் பணியாளர்கள் தெரிவு அவருக்கு இல்லாத நிலையில் அவரின் பங்கு குறைவுதான்.

அடுத்ததாக மேற்கிந்தியத் தீவுக்கு எதிராக நடைபெறும் உள்நாட்டுத் தொடருக்கு முன்பாக அவர் விலக முடிவெடுத்தால் கிரிக்கெட் சபை அவரைத் தடுக்கப்போவதில்லை. பிளெட்சர் விலகுவதாக சூசகமாகத் தெரிவித்தாரா என்று குறித்த அதிகாரிகளிடம் கேட்டக்கப்பட்டதற்கு, அது போன்ற சில விடயங்களை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அவருக்கு உணர்த்தியுள்ளது. ரவி சாஸ்திரியும் டோனியும் உத்திகளை வகுப்பார்கள், சஞ்சய் பாங்கரின் திறமைகள் நிரூபிக்கப்பட்ட ஒன்று. இப்போது உள்ள வேகப்பந்து வீச்சாளர்கள் தேசிய கிரிக்கெட் பயிற்சிக் கல்லூரி பாரத் அருணிடம் பயிற்சி பெற்றவர்கள். ஆகவே டன்கன் பிளெட்சர் என்ன செய்து விடப்போகிறார். இதனை அவர் சூசகமாகப் புரிந்து கொண்டாரேயானால் அவர் பதவி விலகலாம். அது ஏற்கப்படும்.

புதிய அணி இயக்குநரும், புதிய உதவிப் பயிற்சியாளர்களும் ஆஸ்திரேலியா தொடருக்கு முன்பாக இந்திய வீரர்களின் திறமைகளை அறுதியிட முடியும். என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (5)

## மூன்றாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வவுனியா

கத்திற்கு இடமாக ஒருவர் சுற்றித் திரிந்துள்ளார். இதனை அவதானித்த பொலிஸார் அவரிடம் விசாரணையை மேற்கொண்டனர். இதன்போது குறித்த நபர் வவுனியா பகுதியைச் சேர்ந்த பிரான்சிஸ் என்பவரது மகன் அந்தோனி என்றும், 2005 ஆம் ஆண்டு பிரான்ஸுக்குச் சென்றதாகவும், 9 ஆண்டுகள் கழித்து கடந்த மே மாதம் 25ஆம் திகதி ஒரு மாத விஸாவில் தமிழகத்திற்கு வந்துள்ளதாகவும் தெரியவந்தது.

மேலும் விஸா முடிந்து விட்ட நிலையில் மீண்டும் இலங்கைக்குப் படகு மூலம் செல்வதற்காக மண்டபத்தைச் சேர்ந்த சண்முகம் என்பவரை அந்தோனி தொடர்பு கொண்டு ரூபா 40 ஆயிரம் கொடுத்ததாகவும், காலையில் படகு வரும் அதில் ஏறி இலங்கைக்குச் சென்று விடலாம் எனத் தெரிவித்ததையடுத்து தான் கடற்கரையில் நின்றதாகவும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து அந்தோனி கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை 40 ஆயிரம் ரூபா பணத்தை பெற்றுக்கொண்டு படகு மூலம் இலங் கைக்கு அவரை அனுப்ப முயன்ற மண்டபத்தை சேர்ந்த முகவர் சண்முகத்தைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (த-10)

### 15 வயது

இதனையடுத்துச் சம்பவ இடத் துக்கு விரைந்த அதிகாரிகள் சிறுமியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் சிறுவனை அழைத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாகச் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்களினால் பொலிஸாருக்கும் கரைச்சி பிரதேசசெயலருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

**மரண அறிவித்தல்**

**ஐயாத்துரை குருக்கள் அனந்த சர்மா (அசோக்)**



கைதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குருக்கள் அனந்த சர்மா (அசோக்) கடந்த 18.08.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துகுமாரசுவாமி குருக்கள்-வள்ளியம்மா தம்பதியரினதும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதிக்குருக்கள்-சங்கரியம்மா தம்பதியரினதும் பேரனும், ஐயாத்துரை குருக்கள்-சகுந்தலாஅம்மா தம்பதியரின் மகனும், சிவகடாட்சம் தம்பதியரின் மருமகனும், விஜிகலாவின் அன்புக் கணவரும், ஹரி, அக்ஷயா ஆகியோரின் தந்தையும், அரஹரகுருக்கள், ஆதவசர்மா ஆகியோரின் சகோதரரும், சர்மிளா, நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனரும், அபிஷா அஹஸ்தியா, அபூர்வா, ஆத்மிகா ஆகியோரின் பெரியப்பாவும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் ஐயர்-விசாலாட்சி அம்மா மற்றும் கணேசக் குருக்கள்-சுசிலா தம்பதியினர், ஜெகநாதக்குருக்கள்-விமலேஸ்வரி தம்பதியர், சோமசுந்தரக்குருக்கள்-பவானிஅம்மா தம்பதியர், சிவசுப்பிரமணிய சர்மா-சாரதாதேவி தம்பதியர் இராமச்சந்திர சர்மா-சுலோச்சனா தம்பதியினர் ஆகியோரின் பெறாமகனும், சோமஸ்கந்த குருக்கள், றங்கநாதக்குருக்கள்-ஜெகாதாம்பிகை தம்பதியினர், சுந்தரேஸ்வரக் குருக்கள்-மகேஸ்வரி தம்பதியினர், கேதீஸ்வரக் குருக்கள்-வடிவாம்பிகை தம்பதியினர் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.08.2014 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி வடக்கு,
கைதடி.

(51119)
(10)

தகவல்:
ஐயாத்துரைக் குருக்கள்
குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**



**இளையதம்பி துரைசிங்கம்**

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், ஆவரங்கால் சிவன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி துரைசிங்கம் நேற்று (20.08.2014) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவனேஸ்வரியின் கணவரும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும், கந்தசாமி-நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கனகம்மா, நல்லம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் மைத்துனரும், சுந்தரலிங்கத்தின் சகலனும் இரத்தினத்தின் மைத்துனரும், தங்கராசாவின் சகலனும், நவரட்ணராணி (UK), மனோன்மணி (உபதபாலதிபர் ஆவரங்கால்), காலஞ்சென்ற சிவராஜா (முன்னாள் பிரதேச சபை செயலாளர், பச்சிலைப்பள்ளி) மற்றும் விநாயகலிங்கம் (UK), வரதலக்ஷ்மி (UK), இரவீந்திரா (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்), நிமலா (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராஜா (Appex Engineering (pvt) Ltd.), தங்கராஜா (மலேசியா), கேதீஸ்வரி (ஆசிரியை, ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), கனேஸ்வரி (UK), மாணிக்கவாசகர் (UK), திருச்செல்வம் (சுவிஸ்), கஜந்தினி (சுவிஸ்), சிவகுமார் (UK) ஆகியோரின் அன்பு மாமனும், லக்சிகா (UK), துளசிஜா (UK), நீபன், வைஸ்ணவி (ஸ்ரீ புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), விதுர்சனா (நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்) சிந்துஜன் (Royal Institute-Colombo), விதுர்ஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), விதுஜென் (சென் ஜோன்ஸ் கல்லூரி), சியானிஷா (நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), கோபிகன் (UK), துசிகன் (UK), பிரகலை (UK), வேணுகானன் (UK), ஆதவன் (UK), திருசினி (சுவிஸ்), வேணுஜன் (சுவிஸ்), துசாந்தன் (சுவிஸ்), துசிந்தன் (சுவிஸ்), துசான் (சுவிஸ்), அஸ்வின் (UK) ஆகியோரின் அன்புப் பேரனும், சுந்தர்ராஜன், சுசீந்திரா, சுகுமார், சுரேந்திரன், சுரேஸ்குமார், தயானந்தன், ஜெயந்தினி, ஜெயந்தன் ஆகியோரின் பெரியதகப்பனும், காலஞ்சென்றவர்களான செல்வராஜா, சரஸ்வதி, சரோஜினிதேவி மற்றும் செல்வரத்தினம், தங்கராஜா, சகுந்தேஸ்வரி, யோகராஜா, விமலராணி, வரதராஜா, பத்மராணி, யோகசிவம், காலஞ்சென்ற வாமதேவன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.08.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.
T.P: 021 205 8017, 077 022 0683

(51116)
(10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# கல்முனைக்குடி பெரிய பள்ளி விவகாரம் பேசித் தீர்க்கப்பட வேண்டும்

## உலமா கட்சித் தலைவர் தெரிவிப்பு

கல்முனை, ஒக. 21

கல்முனைக்குடி பெரிய பள்ளிவாசல் செயற்றிட்டம் தொடர்பான பிரச்சினையை சுமுகமான பேச்சு வார்த்தை மூலம் தீர்க்காமல் நீதிமன்றம் வரை கொண்டு சென்றமை கவலைக்குரியது என உலமா கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;

கல்முனைக்குடி பெரிய பள்ளிவாசல் திருத்த வேலைகள் 1980களில் ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் பூர்த்தியடையாமல் உள்ளன. இந்தப் பள்ளிவாசலை திருத்தும் முயற்சியில் 80ஆம் ஆண்டுகளில் கல்முனைக்குடி பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் வேண்டிக்கொண்டதற்கிணங்க நாம் மக்காவிலுள்ள ராபித்தா மூலம் சிறிய நிதியை பெற்றுக் கொடுத்தோம். அதன்பின் முன்னாள் அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் பல வழிகளில் நிதி பெற்றுக் கொடுத்தார். அதன் பின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் எடுத்துக்கொண்ட முயற்சி காரணமாக பள்ளிவாசல் திருத்த வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்று பூர்த்தி நிலையை எட்டியுள்ளது. இவற்றின் மூலம் மேற்படி பள்ளிவாசல் அபிவிருத்தி விடயமாக கல்முனையின் அரசியல் வாதிகளும் பிரமுகர்களும் பெரிதும் அக்கறையுடன் செயற்பட்டு வந்துள்ளனர்.

ஆனாலும் மேற்படி பள்ளிவாசலின் உள்வீதியருகில் நிறுவப்படவுள்ள வாகனத் தரிப்பிடம் சம்பந்தமாக அண்மையில் சில அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு விடயம் நீதிமன்றம் வரை சென்றுள்ளதாக அறிகிறோம். அதுவும் சமூக ஒற்றுமை என்ற கோஷத்துடன் புறப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தோரே இதில் வாதிகளாகவும், பிரதிவாதிகளாகவும் உள்ளதன் மூலம் மேற்படி கட்சியினரால் சிறியதொரு பிணக்கைக்கூட பேச்சு மூலம் தீர்க்க முடியாதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் உடைக்கப்பட்டபோது அதற்காக நீதிமன்றங்களை நாடாதோர் பள்ளிவாசல் அபிவிருத்தியில் உடனடியாக நீதிமன்றம் சென்றமை கவலைக்குரியது.

இந்தச் சிறிய பிரச்சினையை பேச்சு மூலம் தீர்க்கமுடியாமல் போனமை கல்முனை முஸ்லிம்களுக்கு பெருத்த அவமானமாகவே கொள்ளத்தக்கது.

ஆகவே, ஊரின் நலன் கருதி இந்த விடயத்தை பேச்சு, விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வின் மூலம் தீர்க்க வேண்டுமென்பதே கல்முனைக்குடி மக்களது விருப்பமாகும். அதற்கு ஏற்ற வகையில் ஊர்ப் பெரியவர்கள், உலமாக்கள், அரசியல்வாதிகள் என அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் பிரச்சினையைப் பேசித் தீர்க்க முன் வர வேண்டும் எனத் தெரிவித்தார்.

(த-10)

## துணுக்காய் பிரதேச சபை அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புதல்- 2014

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 01.01.2013 ஆம் திகதி முதல் துணுக்காய் பிரதேச சபை அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கு அமைவாகவும், உள்ளூராட்சி அமைச்சுச்செயலாளரின் NP/05/01/GE6/UNS/RQ இலக்க 08.03.2013 ஆம் திகதிய கடிதத்திற்கமைவாகவும். வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களின் NP/14/01/ET/ET5/Ser.min/Gen.2013 இலக்க 20.01.2014ஆம் திகதிய கடிதங்களுக்கமைவாகவும் துணுக்காய் பிரதேசசபையின் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவி | பதவிப்பெயர் | வகுப்பு |
|---|---|---|
| 01 | சாரதி | III |
| 02 | சுகாதாரத்தொழிலாளி | III |

சேவை நிபந்தனைகள்:
01. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
02. ஊழியர் விதவைகள் தபுதார்கள் ஓய்வூதியத்திற்குப் பங்களிப்புச்செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடங்கள் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

அடிப்படைத்தகைமைகள்:
01. விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.அத்துடன் துணுக்காய் பிரதேசசபை எல்லைக்குள் தொடர்ச்சியாக 06 வருடங்கள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல்வேண்டும். கிராம உத்தியோகத்தரால் வழங்கப்பட்டவதிவிடச்சான்றிதழ் பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அல்லது

02. நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தும் வாக்காளர் பட்டியலின் மூலப்பிரதி மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
03. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித்திகதியில் ( 05.09.2014) 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல்வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்களுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
04. நன்னடத்தை உடையவராகவும்,சிறந்த ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யும் முறை:
01. அங்கீகரிக்கப்பட்ட நேர்முகக்குழுவினால் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுவதுடன் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிட்டதற்கமைவாக கல்வித்தகைமை, தொழில் அனுபவம், வேலை மனப்பாங்கு என்பவற்றுக்கு புள்ளிகள் இடப்பட்டு தெரிவுகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரி நேர்முகப் பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.
02. துணுக்காய் பிரதேச சபையில் அமைய,தற்காலிக, ஒப்பந்த, பயிலுநர், தன்னார்வ சேவை செய்யும் ஊழியர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

விண்ணப்பிக்கும் முறை:
1. துணுக்காய்ப்பிரதேச சபை அலுவலகத்தில் ரூபா.50/= செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இவ்உள்ளூராட்சி மன்றத்தில் கடமைபுரிபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரியமுறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாதிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியினால் தெளிவாகப்பூரணபப்படுத்தப்படுதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.
4. ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்கவேண்டும்.
5. ஆள்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமை அற்றவர் என நியமனத்திற்கு முன்னரோ, நியமனத்திற்குப்பின்னராகவோ அல்லது நியமனத்தின்போதோ முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத்தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுத்தப்படும்.
6. விண்ணப்பங்கள் யாவும் விண்ணப்பமுடிவு திகதி 05.09.2014 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக 'செயலாளர், பிரதேசசபை, துணுக்காய்' என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். முடிவு திகதிக்குப்பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

இல1: சாரதி:
கல்வித்தகைமைகள்:கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரு திறமைச்சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது 8 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் 5 பாடங்கள் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.
போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதபட்சத்தில் தரம் 8 கல்வித்தகைமையாகக் கொள்ளப்படும்.

ஏனைய தகைமைகள்:
1. விண்ணப்பதாரி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை, தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்கு குறையாத பாரவண்டி செலுத்தக்கூடிய வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை விண்ணப்ப இறுதித் திகதிக்கு மூன்று (03) வருடத்திற்கு முன்பு பெற்றிருத்தல் வேண்டும். (வாகன வகுப்பு C,C1)
2. மோட்டார் வாகனச்சாரதியாக மூன்று வருட (3) அனுபவத்திற்கான சான்றிதழ்.
3. விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 5அடி 2½ அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்
4. விண்ணப்பதாரி இரவு பகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடிய உடல்உறுதியைக் கொண்டதுடன் சிறந்த கண்பார்வையினைக்கொண்டவராக இருத்தல் வேண்டும்.
5. பெருந்தெரு விதிமுறை பற்றிய சிறந்த அறிவைக்கொண்டிருக்கவேண்டும்.

சம்பளம்:
2007.08.24 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 06/2006(IV) இற்கமைய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL-3-2006-A(12470-18X130-14810)

இல-2 சுகாதாரத்தொழிலாளி:
கல்வித்தகைமைகள்:-கல்விப்பொதுதராதர சாதாரண பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச்சித்திகள் உள்ளடங்களாக ஆகக்குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஒரே தடவையில் 5 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதபட்சத்தில் தரம் 8 கல்வித்தகைமையாகக் கொள்ளப்படும்.
சம்பளம்: 24.08.2007 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச்சுற்றறிக்கை இல 06/2006(IV) இற்கமைய மாதாந்தச்சம்பள அளவுத்திட்டம் PL-1-2006-A(11730-18X120-13890)

பிரதேச சபை,
துணுக்காய்,
11.08.2014.

(சி.16116) (5.6)

க.சத்தியநாதன்,
செயலாளர்,
பிரதேச சபை, துணுக்காய்.

### கோணேஸ்வரத்தில் கும்பாபிஷேகம்

மூதூர், ஒக.21

திருக்கோணேஸ்வர ஆலயத்தின் பாலஸ்தாபனமும் மஹாகும்பாபிஷேகப்பெருவிழாவும் இடம்பெறவுள்ளது. இருபத்திரண்டு வருடங்களின் பின்னர் நடைபெறவுள்ள திருக்குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா (மஹாகும்பாபிஷேகம்) நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணி முதல் 5.30 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது எனவும் இதில் அடியவர்களைக் கலந்து கொள்ளுமாறும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(த-10-40)

## ஆறாண்டு விழிகளில் தர்ஷன்



சிவானந்தசுந்தரம்
பிறேமதர்ஷன்
(தர்ஷன்)
(யா/இந்துக் கல்லூரி
2007-உயிரியல் மாணவன்)

பிறப்பு
05.05.1988

இறப்பு
26.08.2008
திதி : 21.08.2014

எங்கள் அன்பிற்காக வாழ்ந்த மகனே!
அன்புத் தம்பியை மறந்தவனே
எங்களையே உன் உலகம் என்று வாழ்ந்தாயே
ஒவ்வொரு நிமிடத்தையும் எமக்காய் செலவழித்தாயே
ஏன் எங்களைத் துடிக்க வைத்துவிட்டு
காணகத்துள் நீ உறங்குகிறாய்
காணத்துடித்துக் கதறி அழுகின்றோம்
குடும்பத்தினர் நாம்.

என்றும் நினைவுடன்
நெல்லியோடை, அச்சுவேலி.
பூனியனடி, உடுப்பிட்டி.
அம்மா, அப்பா, தம்பி

(51040) (7.6.3)

## காணி விற்பனைக்கு

தாவளை - இயற்றாலை - வரணி
கோயில்பற்று நி.ப.10½, வேம்பிராய் -
வரணி வீதியில் மேற்குப்புற
ஒழுங்கையில் 200m தூரத்தில்
அமைந்துள்ளது

தொடர்பு: 072 840 6891 (51041) (45.6)

## வைத்தியம்

அனைத்து நாள்பட்ட நோய்களுக்கும்,
குழந்தை தேவையான
தம்பதியர்களுக்கான விஷேட பக்க
விளைவு இன்றிய மூலிகை
சித்த ஆயுர் வேத சிகிச்சை
Dr. R. Sivagurunathan
077 730 1669
வியாழன், வெள்ளி, சனி
நல்லூரில் சந்திக்கலாம். (சி.15799) (45.6)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 22.07.2014
செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்
பரமநாதன் செல்வராஜா
அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள்
இன்று (21.08.2014) வியாழக்கிழமை
முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில்
நடை பெறும், அத்தருணம் தாங்களும்
வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும்
கலந்துகொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்
குடும்பத்தினர்
இல.56/1, வீமவாடு, (12ஆம் கட்டை)
077 627 7332

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Swiss Agency for Development and Cooperation SDC
Swiss Cooperation Office Sri Lanka

## TENDER NOTICE

Swiss Cooperation Programme Office Jaffna invites tender for the following civil works from **ICTAD registered contractors.** The documents can be collected from the locations given against each action from 21st August, 2014.

| Lot Number | Description of work | Minimum ICTAD level required | Contact Location |
|---|---|---|---|
| 7F-07872.02-(iii) | Rehabilitation Kiranchchikulam. Poonagary. | C8 in irrigation | 18/10,Wyman road, Nallur, Jaffna. |

- The tender document could be obtained upon the payment of non- refundable tender fee of Rs.1,000.00 (Rs. One Thousand only) from 9.30 am to 3.00 pm week days only.
- Contractor should submit a request letter to collect the document on the Company's business letterhead.
- Certificate of ICTAD registration and related experience should be submitted with the tender document.
- Quotations should be received either by post or hand for deposit in the special 'sealed box' available at SDC.Jaffna Office before 3rd Sept, 2014, 9.00 am.
- Name of the tender should be written on top left hand corner of the envelope.
- Tenders will be opened at 9.30 am on the same day at SDC, conference hall and representatives of contractors can be present.

**Swiss Cooperation Programme Office, Jaffna.**
**Head of Office,**
**18/10, Wyman Road, Jaffna.**
**Tel:+94212224740, Fax:+94212226280**
**jaffna@sdc.net, www.swisscoop.lk**

(C16117)(12.6)

## நாஹா மருத்துவ நிலையம்

* எலும்புகளின் பாதிப்பும் - வாதமும் தீராத புண்கள், ஆஸ்மா,குடற்புண்கள், உடற்பருமனும், நீரிழிவும்.
* குழந்தையின்மை கெற்பநோய்-சிறப்புச் சிகிச்சை

தொடர்பு: வங்கி முன்லேன்
சாந்தலத்தை வைரவர் கோயிலடி (ஜெயந்தி வீடு)
மானிப்பாய். தொ.பே.: 077 321 2740 (51050)(5.6)

## வீடு விற்பனை

கோப்பாய் தெற்கு, வீரபத்திரர் கோயிலடியில் வீடு விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் தொடர்பு கொள்ளவும் அல்லது நேரில் வரவும். தரகர்கள் தேவை இல்லை.

தொ.பே.:077 929 1600
பழைய வீதி, வீரபத்திரர் கோயிலடி,
கோப்பாய் தெற்கு,கோப்பாய்.
(51049)(5.6)

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பணிநிலை வெற்றிடம்

### விற்பனை உதவியாளர்

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. சம்பள அளவுத்திட்டம் - (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 66/2006 சுற்றுநிருபத்திற்கமைய 308/15 ஆவது சம்பளக்குறியீடு)

$$\frac{9450 - 11000}{75 \times 10 - 80 \times 10}$$

இதரபடிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.

2. வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)
3. தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளரின் 17ஆவது சம்பளத்திட்ட விற்பனை உதவியாளர் பதவி ஒன்றில் 05 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ், க.பொ.த (சாதாரணதரத்தில்) எண்கணிதம்/வர்த்தக கணிதம்/கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தி.

குறிப்பு: சங்க எல்லைப்பரப்பிற்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4. விண்ணப்பிக்கும் முறை: மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10.00 இனைச் செலுத்திப் பெற்று, பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விற்பனை உதவியாளர் 308/15 பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், 127, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 03.09.2014ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பதாரி சங்கப்பணியாளர் எனின் குறித்த சங்கத்தினூடாகவே விண்ணப்பிக்கவேண்டும்.**

மு.ஜெ.சுஜீந்திரன், தலைவர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

(சி16125)
(12.3.6)

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## பணிநிலை வெற்றிடம்

### விற்பனை உதவியாளர்

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. சம்பள அளவுத்திட்டம் - (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 66/2006 சுற்றுநிருபத்திற்கமைய 308/17 ஆவது சம்பளக்குறியீடு)

$$\frac{8950 - 10300}{65 \times 10 - 70 \times 10}$$

இதரபடிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.

2. வயது 18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)
3. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ்

அல்லது

ஆ. 08ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03)வருடங்களுக்கு குறையாத அனுபவம்

குறிப்பு: சங்க எல்லைப்பரப்பிற்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

4. விண்ணப்பிக்கும் முறை: மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10.00 இனைச் செலுத்திப் பெற்று, பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விற்பனை உதவியாளர் 308/17 பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், 127, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 03.09.2014ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பதாரி சங்கப்பணியாளர் எனின் குறித்த சங்கத்தினூடாகவே விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.**

மு.ஜெ.சுஜீந்திரன், தலைவர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

(சி16124)
(12.3.6)

## மரண அறிவித்தல்

### திருமதி பூலோகமணி சரவணமுத்து



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பூலோகமணி சரவணமுத்து 19.08.2014 ரொறண்டோ, கனடாவில் காலமானார்.

அன்னார் சரவணமுத்து (முன்னாள் தபால் அதிபர், கப்பல் வானொலி உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அபிராமி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, அப்புத்துரை, கந்தையா, வீரசிங்கம் ஆகியோரின் அருமைத் தங்கையும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் தவமணி, தியாகராசா, காலஞ்சென்ற இராசாத்தி மற்றும் பூமணிதேவி, பாக்கியம், வள்ளிப்பிள்ளை, சந்திரேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், இரவிச்சந்திரன், ஜெகச்சந்திரன், உதயச்சந்திரன், விமலச்சந்திரன், சரத்சந்திரன், ஜனார்த்தனன், விஸ்வப்பிரியா, ஜெகநிவாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சதீஸ்குமார், சுதர்சினி, ஜெயந்தினி, பிரியதர்சினி, தேவகுஞ்சரி, சிவாஜினி, நர்மதா ஆகியோரின் அன்பு மாமியும், சாந்தகுமார், கமலேஸ்வரி, பிறேமலதா, ரூபலதா, மகேஸ்வரன், கேதீஸ்வரன், ஹேமலதா, முகுந்தன், ஜெயலதா, Dr.அனுசியா, Dr.அனுசாந்தினி, அனுராதா, துஷ்யந்தி, மாயவன், பார்த்தீபன், துவாரகா ஆகியோரின் உறவு மாமியும், ஜெசிக்கா, ரசிக்கா, டாவின், அலிசியா, ஜெடன், விறைடன், பிரியங்கா, வியங்கா, விசாகினி, அபிசாகினி, லக்சாகினி, சிந்தியா, சிசிலியா, விரித்திகா,சாதுரி, கங்கையன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், சபரினா, விவிஷன்,சிட்னி, ஸ்ரெசனி, சில்வியா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், சுப்பிரமணியம் - சாரதாதேவி தம்பதிகள், முருகேசம்பிள்ளை - ஜெகதீஸ்வரி தம்பதிகள், K.K.யோகநாதன் - லோகேஸ்வரி தம்பதிகள், பகவத்சிங்கம் - கிரிஜா தம்பதிகள், விஜயநாதன் - மஞ்சுளா தம்பதிகள் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ரொறண்டோ கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரவணமுத்து - 0019053929595 (Mobile)
மகன் - ரவிச்சந்திரன் - 0015148670517
மகள் - விஸ்வப்பிரியா - 0014163565342 (C16120) (12.6)

கணவர், பிள்ளைகள்,
தகவல்: தவமணி கந்தையா
(மைத்துனி- மீசாலை)

# தொண்டுப் பணியாளர் மீதான வன்செயல் சம்பவங்கள் அதிகரிப்பு

கொழும்பு, ஓக.21

நேற்றுமுன்தினம் உலக மனிதாபிமான தினம் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் மனிதாபிமான தொண்டுப் பணிகளில் ஈடுபடும் பணியாளர்களைக் கடத்துதல், மோசமாகக் காயப்படுத்துதல், கொலை செய்தல் ஆகியன என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற இத்தகைய 460 சம்பவங்களில் 155 பேர் கொல்லப்பட்டனர். இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலப் பகுதியிலும் காஸா, தென் சூடான் உள்ளிட்ட பல பிரதேசங்களிலும் மனிதாபிமான தொண்டுப் பணியாளர்கள் மீதான தாக்குதல் மற்றும் கொலைச் சம்பவங்கள் அதிகரித்திருப்பதைக் காண முடிகின்றது.

2003 ஆம் ஆண்டு ஈராக் தலைநகர் பாக்தாத்தில் ஐ.நா.தலைமை அலுவலகம் மீதான குண்டுத் தாக்குதலில் புகழ்பெற்ற மனிதாபிமானத் தொண்டரான சேர்ஜியோ வெய்றா டி மேகோ உள்ளிட்ட 22 பேர் தமது உயிர்களை இழந்தனர். இதை நினைவு கூரும் வகையில் உலக மனிதாபிமான தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டு மட்டும் ஓகஸ்ட் 18ஆம் திகதி வரை 79 மனிதாபிமானத் தொண்டுப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை- காஸாவிலும் தென் சூடானிலும்தொண்டுப் பணியாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்பட்டன.

உலக மனிதாபிமான தினம் கொல்லப்பட்ட பணியாளர்களுக்குப் புகழாரம் செலுத்துவதோடு மனிதாபிமானத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தன் பற்றுறுதியையும் எடுத்துக் கூறுகின்றது. (க)

## பணியாளர் தேவை

பக்க வடிவமைப்பாளர்:
* Photoshop * Coral Draw

முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்.

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
82/20,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 224 7428 (சி/16076) (3.6)

## J.C.B (பைக்கோ) வாடகைக்கு



குறிப்பு :★ போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.
★ஒப்பந்தவேலைகளுக்கு விஷேட விலைக்கழிவு வழங்கப்படும்.

தொடர்பு: 021 224 1466 (யாழ்ப்பாணம்)
077 771 2482 (கல்லுண்டாய்) /077 984 7285 (பருத்தித்துறை)

புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்
207, K.K.S.வீதி, சுன்னாகம்.
(50575)
(4.6.3)

## இடமாற்றத்தை முன்னிட்டு.....



யாழ் மாநகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!
இருப்பகற்றலை முன்னிட்டு
சில தினங்கள் மட்டுமே.

* பட்டு சாறிகள்
* சீகுன் சாறிகள்
* ஸ்ரோன் சாறிகள்
* சல்வார்கள்
* இந்தியன் ரொப்
* சேட்
* ஜீன்ஸ்
* குருதா

மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393
(50643)(7.6.3)



## மானிப்பாயில் கைதானோருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஓக 22

வாள் உள்ளிட்ட ஆயுதங்களை வைத்திருந்த குழுவுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மானிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தை அண்மித்து கைது செய்யப்பட்ட இருவருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாயில் வாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் ஒரு குழுவினர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் குறித்த இரண்டு பேரும் தொடர்புகளைக் கொண்டிருந்ததாகக் கிடைத்த குற்றச்சாட்டில் இருவரும் கைது செய்யப்பட்டனர். அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க் கிழமை வெளியான செய்தியில் மானிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தைச் சேர்ந்தவர்கள் என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. அதனை மானிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தை அண்மித்துக் கைது செய்யப்பட்டனர். என்று திருத்தி வாசிக்கவும். (த-4)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன்
செ. செந்தூரனின் தாயார்
திருமதி சுப்புலட்சுமி செந்தில்நாதன்
அவர்கள் மறைந்த செய்தி கேட்டு துயரடைகிறோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
நண்பனின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

**2005 - A/L நண்பர்கள்**
சார்பாக க. நிமலகாந்த்
யாழ். மத்திய கல்லூரி
(51047) (45.6)

## AAT பதிவுகளும் விரிவுரைகளும்

**தொழிற்றுறை கணக்காளராய் வருவதற்கான துரித வழி**

* O/L பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள் ஆரம்ப பிரிவில் இணைந்து இக்கற்கை நெறியினை 11/2 வருடங்களில் பூர்த்தி செய்ய முடியும்.
* A/L வர்த்தகப் பிரிவில் மூன்று பாடங்களுடன் ஆங்கில பாடமும் சித்தி அடைந்திருப்பின் அடிப்படை நிலை (Foundation) விலக்கழிக்கப்பட்டு (Excemotion) நேரடியாக இடைநிலைக்கு பதிவினை மேற்கொண்டு ஒரு வருடத்தில் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்யலாம். ஆங்கில பாடம் இல்லாதவர்கள் அடிப்படை நிலையில் ஆங்கில பாடத்தினை மட்டும் பரீட்சை எழுதிக்கொண்டு சம காலத்தில் இடைநிலை பரீட்சையையும் எழுத முடியும்.
* B com, BBA, HNDA, HNDM, HNDC, NCAT கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு ஆரம்ப, இடைநிலை பிரிவுகள் விலக்கழிக்கப்பட்டு 6 மாதங்களில் இறுதி நிலை பரீட்சை எழுதி AAT தகைமை பெறமுடியும்.

பதிவுக்கான இறுதித் திகதி : 05.09.2014
**பரீட்சைகள் யாவும் தை மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.**
ஆரம்ப நிலை, இடைநிலை இறுதிப் பரீட்சை இவற்றுக்கான விரிவுரைகள் ஆரம்பம் 23.08.2014 (காலை 9 மணி)

விவரங்களுக்கு
**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.
021 222 8148

(C/16121) (7.6.3)

## தொடர்ச்சிகள்

### கூட்டமைப்பினர்

தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைவாக, புதிய பிரதமரைச் சந்திப்பதற்கு தற்போது நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிக்கையில்,
"நாளை (இன்று) மதியம் டில்லிக்கு புறப்படவுள்ளோம். நானும், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ. சுமந்திரன், பொன்.செல்வராஜா ஆகியோரும் இந்தியாவுக்கு வரவுள்ளனர்.
வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம். மறுநாள் சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளோம்."- என்று அவர் குறிப்பிட்டார்.
சந்திப்புக்களில் என்ன விடயங்கள் கலந்துரையாடப்படும் என்று அவரிடம் கேட்டபோது, "பேசவேண்டிய சகல விடயங்களையும் பேசுவோம்"- என்று அவர் தெரிவித்தார்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படாது என்று தெரிவித்தார். அதுகுறித்து இரா. சம்பந்தனிடம் கேட்டபோது, "நான் இதைப் பற்றிப் பேச விரும்பவில்லை" என்று பதிலளித்தார்.
இந்த விடயம் பற்றி இந்தியப் பிரதமருடன் பேசுவீர்களா? என்று கேட்டபோது, "சகல விடயங்களையும் உள்ளடக்கியே பேசுவோம்" என்று அவர் தெரிவித்தார்.
அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், "13 ஆவது திருத்தத்தை தாண்டிய அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்த இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுப்போம்" என்று கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். (ந-5)

### காலநிலை

குறித்த அறிக்கை ஒன்று கூறியுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணம், கம்பஹா ஆகிய மாவட்டங்கள் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் சாத்தியங்கள் உண்டு என்றும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.
தற்போதைய பூகோள போக்குகளில் மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டால், 2050 ஆம் ஆண்டில் இலங்கை தனது வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 வீதம் வீழ்ச்சியை காணும் என்றும் நூற்றாண்டின் இறுதியில் அது 6.5 வீதமாக அதிகரித்துவிடும் என்றும், ஆனால், உரிய தகவமைத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டால், அதனை 1.4 வீதமாக குறைத்து விடலாம் என்றும் அந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.
இந்த நூற்றாண்டின் இறுதியில் இலங்கையின் வெப்பநிலை 3 வீதத்தால் அதிகரிப்புடன், நெற்பயிர்ச்செய்கை வறட்சியால் பாதிக்கப்படும் நிலைமை அதிகரிக்கும் என்றும், 2080 ஆம் ஆண்டளவில் அளவில் தாழ்நாட்டு உலர்வலயங்களில் உற்பத்தி மூன்றில் ஒரு பங்கால் வீழ்ச்சி அடையும். மழை வீழ்ச்சி குறைவதால், தாழ்நாட்டு மற்றும் மத்திய மலைநாட்டில் உள்ள தேயிலை உற்பத்தியும் பாதிப்படையும் என்றும் அந்த அறிக்கை கூறுகின்றது.
யாழ்ப்பாணத்துக்கும் பெரும் பாதிப்பு இலங்கையின் பரந்து பட்ட கரையோரப் பிரதேசத்தில், மீன்பிடிக்கு கணிசமான பாதிப்பு ஏற்படுவதுடன், கடுமையான அலைகள், நீர் மட்டம் உயர்தல் ஆகியவற்றால் கரையோர உயிர் தொகுதியும் பாதிக்கப்படும். அதனால் யாழ்ப்பாணம், மற்றும் கம்பஹா பகுதிகள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும்.
உயிர் காவிகள் மூலம் பரவுகின்ற டெங்கு போன்ற நோய்கள் அண்மைக் காலமாக இலங்கையில் அதிகரித்துக் காணப்படுகின்றது. 2090 ஆம் ஆண்டளவில் அந்த நோயாளர்களின்எண்ணிக்கை ஆண்டுக்கு 353, 000 வரை அதிகரிக்கும். இரண்டாயிரம் பேர்வரை இறப்பார்கள் என்றும் அந்த அறிக்கை மேலும் கூறுகின்றது. (ந-5)

### ஐ.நா. விசாரணை

யுள்ளார்.
ஐ.நா.பொதுச் செயலாளரின் பேச்சாளர் ஸ்ரீபனி டுஜாரிக், நேற்றுமுன்தினம் நியூ யோர்க்கில் ஊடகவியலாளர் களைச் சந்திக்கும்போதே பான் கீ-மூனின் கருத்தை வெளியிட்டார்.
"ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழுவுக்கு இலங்கை அரசு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று பான் கீ-மூன் வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலை மேம்படுத்துவதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தலைமையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அவர் தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளார்.
நாட்டின் சமாதானம் மற்றும் பாதுகாப்பு, மனித உரிமைகள், நீடித்த நிலையான முன்னேற்றத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படும் விசாரணையின் முக்கியத்துவத்தை உணர்ந்து இலங்கை அதனை அனுசரிக்க வேண்டும் என்று பொதுச் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்." - என்று ஸ்ரீபனி டுஜாரிக் ஊடகவியலாளர் சந்திப்பின் போது தெரிவித்தார்.
அதேவேளை, நேற்று முன்தினம் இலங்கையை தளமாகக் கொண்ட வெளிநாட்டு ஊடகவியலாளர்களைச் சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நா விசாரணைக் குழுவை இலங்கைக்குள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் என்று உறுதியாகத்தெரிவித்தார். (ந-5)

### 'விசா'

தற்கு எமக்கு அனுமதி மறுக்கப்பட்டது.
ஆனாலும் எமது குழு நம்பகத்தன்மை வாய்ந்த முறையில் விசாரித்து அறிக்கையொன்றை முன்வைத்தது. இலங்கை விடயத்திலும் இது சாத்தியமாகவே அமையும். எனவே எமது நடவடிக்கைக்கு யாருமே தடையாக இருக்கமுடியாது"- என்று அவர் தெரிவித்துள்ளார். ஒரு வாரத்துக்கு முன்னர் ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு வழங்கிய நேர் காணலிலும் நவநீதம்பிள்ளை இதனையே சுட்டிக்காட்டியிருந்தார்.
நேற்று முன்தினம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நா. விசாரணைக் குழு இலங்கைக்குள் வருவதற்கு ஒரு போதும் நுழைவிசைவு வழங்கப்பட மாட்டாது என்று உறுதியாகத் தெரிவித்திருந்தார். (ந-5)

### யாழ்ப்பாணம்

கம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தச் செயற்பாடு வடக்கின் 5 மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
இந்த நிலையில் கொழும்பு அரசின் திறைசேரியால், நேரடியாக வடக்கின் 3 மாவட்டங்களுக்கும் கிழக்கின் 2 மாவட்டங்களும் வறட்சி மீள் கட்டுமான நிதி வழங்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்துக்கு 100 மில்லியன் ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கு 50 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 60 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன. அதே போன்று கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு தலா 30 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வடக்கின் யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்டம் என்பவற்றுக்கு இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.
ஏனைய மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியில், வறட்சியைத் தவிர்ப்பதற்கான நீண்டகால நோக்கிலான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. விவசாயக் கிணறுகள், குளங்கள் தூர்வாருதல், பொது மக்கள் பாவனைக்குரிய குளங்களை மீள புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
இந்த நிதி கொழும்பு அரசின் திறைசேரியால் நேரடியாக ஒவ்வொரு மாவட்டச் செயலகங்களுக்கும் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டுள்ளது. குறித்த நிதியில் அபிவிருத்தி வேலைகள் மேற்படி மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இதேவேளை யாழ். மாவட்டத்தில் வறட்சியைத் தணிக்கும் பொருட்டுநீண்டகால நோக்கிலான திட்டங்கள் தொடர்பில் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் யாழ்.மாவட்ட அரச அதிபர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கலந்துரையாடல் நடத்தியிருந்தார். நீண்ட கால நோக்கிலான மேற்படி திட்டத்துக்குரிய நிதி அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இல்லை என்று மேற்படி கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ந-5)

### அரச அதிபருக்கு

மிடல் பணிப்பாளர், யாழ். மாவட்ட அரச அதிபருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்துள்ளார்.
குறித்த முறைப்பாடு தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் விளக்கம் கோரப்பட்டுள்ள போதும் அவரது பதில் இன்னமும் கிடைக்கப் பெறவில்லை என்றுயாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.
கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றும் ஆர். கிருஷ்ணராஜன், வருடாந்த இடமாற்றத்தின் அடிப்படையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடமாற்றத்துக்கு விண்ணப்பித்திருந்தார். இந்நிலையில் தீடீரெனக் காரணம் எதுவும் குறிப்பிடப்படாமல் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, 30 பக்க அறிக்கை ஒன்றையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அவர் சமர்ப்பித்துள்ளார்.
பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடி ஒன்றை வெளிக்கொண்டு வந்தமைக்காகப் பழிவாங்குடன் நோக்குடன் காரணம் எதுவும் குறிப்பிடப்படாமல் இந்த மாத ஆரம்பத்தில் தீடீர் இடமாற்றம், யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகத்தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.
மேலும் நிதி திட்டமிடல் அமைச்சின் கீழ் பணியாற்றும் தனக்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் இடமாற்றம் வழங்கமுடியாது என்றும் அந்த முறைப்பாட்டில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் யாழ்.மாவட்டத் திட்டப் பணிப்பாளர் ஆகியோரிடமிருந்துமனிதஉரிமைகள்ஆணைக் குழு விளக்கம் கோரியுள்ளது. குறித்த விளக்கம் இன்னமும் அனுப்பி வைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

### கூட்டமைப்பை

ளான திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஆகியன இலங்கை தொடர்பான தவறான புரிந்துணர்வுடன் உள்ளன. வைகோ தலைமையிலான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம், பழ.நெடுமாறன் தலைமையிலான உலகத் தமிழர் பேரவை, சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி, தொல். திருமாவளவன் தலைமையிலான விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகியன தமிழகத்தின் முக்கிய அரசியல் கட்சிகள் அல்ல. அவை சமூக அமைப்புகள். எனவே.அவை குறித்து நாம் கருத்திற்கொள்ளத் தேவையில்லை.

**இந்தியாவின் தீர்வு இலங்கைக்குப் பொருந்தாது**

இலங்கை விவகாரம் தொடர்பில் இந்தியா முன்வைக்கும் தீர்வு எமக்குப் பொருந்தாது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினூடாகக் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தம் அன்றைய காலகட்டத்திற்கு மட்டுமே பொருந்தும். அது அந்தக் காலத்துடன் முடிந்துவிட்டது. நாம் எமக்குத் தேவையான உள்நாட்டுப் பொறிமுறையினூடாகத் தீர்வுகாண வேண்டும். எனவே, இலங்கை - இந்திய ஒப்பந்தம், 13 ஆவது திருத்தம் தொடர்பில் இரு நாடுகளின் தலைவர்களுக்குமிடையில் பேச்சுநடத்தி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்.

**அரசு பெரும் தவறிழைத்து விட்டது**

ஆயுதப் போராட்டத்துடன் தொடர்பு வைத்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு தரப்பினருக்கு யுத்தம் முடிவடைந்த கையுடன், தண்டனை வழங்கியிருக்க வேண்டும். அல்லது புனர்வாழ்வளித் திருக்க வேண்டும். தீவிரவாதத்துடன் தொடர்பு வைத்திருந்தவர்களுக்கு அரசியலில் பிரவேசிக்க இடமளிக்கக்கூடாது - என்றார்.

### அழகு

அத்தோடு அழகுசாதனப் பொருள்களின் தன்மை குறித்து மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அக்கட்சி எச்சரித்துள்ளது.
பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜாதிக ஹெல உறுமயவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அக்கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினரான நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.
"நாட்டில் தற்போது முக்கிய பிரச்சினையாக அழகுக்கலை சார் பிரச் சினைகள் உருவெடுத்துள்ளன. கடந்த 12 ஆம் திகதி கூட பீ.ஏ. பிரியங்கனி என்ற வைத்தியர் இதனால் உயிரிழந்தார். அதுமட்டுமல்லாது, இதே பிரச்சினையால் நாட்டில் கடந்த சில மாதங்களுக்குள் மட்டும் மூவர் உயிரிழந்துவிட்டனர். இதற்கெல்லாம், அழகுக் கலை மற்றும் அழகியல் சாதனங்கள் குறித்த போதிய அறிவின்மையே காரணமாகும்.
அரசும் இதுபோன்ற பிரச்சினைகளை கண்டுகொள்ளாமலேயே இருக்கின்றனது. கடந்த வாரம் மரணமடைந்த அந்த வைத்தியர் சென்ற அழகு சிகிச்சை நிலையத்தில், காலாவதியான சாதனங்களும் மருந்துகளுமே இருந்துள்ளன. இதற்கு சுகாதார அமைச்சும், இலங்கை வைத்திய சங்கமுமே பொறுப்புக் கூறவேண்டும்." - என்றார்.

### சர்வதேச

தில் இன ரீதியான பதற்றநிலை தலைதூக்கலாம். யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளால் முஸ் லிம்களும் பாதிக்கப்பட்டனர். இதன் பின்னர் முஸ்லிம்கள் தங்களது பாதுகாப்பை தாங்களே உறுதிசெய்யத் தொடங்கினர்.
விடுதலைப் புலிகளின் தோல்விக்கு பின்னர் இந்த குழுக்கள் தற்பாதுகாப்பு என்ற நிலையிலிருந்து விலகி வேறு பாதையில் செல்ல முயற்சிக்கின்றன. குறிப்பாக சர்வதேச இஸ்லாமிய அமைப்புகளுடன் இவர்கள் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. இதனை உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும். பயங்கரவாதத்துக்கு அப்பால் இலங்கை கடந்த காலத்தில் கிளர்ச்சிகளில் ஈடுபட்ட அமைப்புகளின் ஆபத்தையும் எதிர் நோக்குகிறது.
அந்த அமைப்புகள் இலங்கைக்குள் தங்களை மறுபடி ஒன்றிணைத்து தமது இடதுசாரிக் கொள்கையை முன்னெடுக்க முயல்கின்றன என்று எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இவர்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய முகவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துகின்றனர் என்றும் தெரியவருகின்றது - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### விபத்தில்

பிரிவைச் சேர்ந்த நளின் பிரதீப் என்ற பொலிஸ் உத்தியோகத்தரே படுகாயமடைந்துள்ளார். பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் கொழும்புத் துறைப் பகுதிக்குச் சென்ற வேளையில் மோட்டார் சைக்கிள் வீதியில் சறுக்கியதில் மோட்டார் சைக்கிளின் பின்புறமாக இருந்தவர் விழுந்து படுகாயமடைந்துள்ளார். (த-106)

### வடக்கில்

சாலை அபிவிருத்தித் திட்டத்தின் நிலைமைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.
மேலும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் தாதியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் வடக்கு மாகாணத்துக்கு இந்த வருடம் 98 தாதியர்கள் நியமிக்கப்படவுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இந்த வார இறுதியில் தமது கடமைகளைப் பொறுப்பேற்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கின் 5 மாவட்டங்களிலுமுள்ள வைத்திய சாலைகளில் ஆயிரத்து 500 மேற்பட்ட தாதியர் வெற்றிடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### நான்கு

தங்கப் பொருள்கள் என்பவற்றை எடுத்துச் சென்றுள்ளனர்.
இதேபோல் சுற்றுமதிலால் ஏறி முருகன் ஆலயத்துக்குள் சென்ற திருடர்கள் வசந்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த முருகனின் கிரீடத்தைத் திருடிச் சென்று அதில் பொருத்தப்பட்டிருந்த தங்கக் குடைகளையும், பொருள்களையும் எடுத்துக்கொண்டு கிரீடத்தைச் சிவபெருமான் ஆலயத்தில் வைத்துள்ளனர்.
அருகாமையிலுள்ள அம்பாள் ஆலயத்தின் கூரை வழியாக உள்ளே சென்ற திருடர்கள் அங்கு காவலாளி கடமையில் இருந்த போதிலும் வைரவர் சுவாமியிலிருந்த ஐம்பொன்னால் செய்யப்பட்ட வேலையும் முடியையும் எடுத்துச் சென்று வெளி மண்டபத்தில் வைத்து உருக்கிப் பார்த்துவிட்டு அவற்றை அவ்விடத்திலேயே விட்டுச் சென்றுள்ளனர்.
மேற்படி மூன்று ஆலயங்களுக்கும் முன்புறமாக அமைந்துள்ள வைரவர் ஆலயத்துக்குச் சென்ற திருடர்கள் கதவை உடைத்து உள்ளே சென்று மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த வைரவர் சுவாமியை கீழே விழுத்தி விட்டு அதற்குள் ஒன்றுமில்லாததால் ஏமாற்றத்துடன் சென்றுவிட்டனர்.
இந்தத் திருட்டுக்கள் குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (த-4-115)

### கூட்டமைப்பின்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முடியும்.
இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வில் இந்தியா ஒரு தவிர்க்க முடியாத அங்கம் என்பதை இலங்கை அரசு தன் செயல்கள் மூலம் இன்று ஏற்றுக் கொண்டுள்ளது.
எனவே கூட்டமைப்பினர் இந்தியா சென்று தேசிய இனப் பிரச்சினைக்கு உரிய தீர்வை காண வழி தேடுவார்கள் எனின், அது இந்த நாட்டில் வாழும் எல்லா இன மக்களுக்கும் நன்மை தருவதாகும்.
இந்திய அரசு , இலங்கையின் உண்மை யதார்த்தத்தை உணர்ந்து செயல்படும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். அதிகாரத்தைப் பகிரப் பிடிவாதமாக இலங்கை அரசு மறுப்பதே, இலங்கையில் தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பிரதான முட்டுக்கட்டை என்பதை இந்திய அரசு உணர வேண்டும்.
இதனை விடச் சுப்பிரமணிய சுவாமி, இந்திய அரசின் பிரதிநிதி என்றும், அவர் வாயில் வரும் கருத்துகள், இந்திய அரசின் கருத்துக்கள் என்றும் காட்ட இலங்கை அரசு முயல்கிறது. அமைச்சர் மேர்வின் சில்வா, புதுடில்லி சென்று இந்திய அரசு சொல்லிக்கொடுத்ததைப் பேசினால் எப்படி இருக்குமோ, அப்படித்தான் இந்தச் சுவாமி டில்லியில் இருந்து இங்கே வந்து இந்த அரசு சொல்லிக்கொடுத்ததைப் பேசுவதாகும்.
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தமிழ், ஹிந்தித் திரைப்படங்கள் இலங்கையில் பாரம்பரியமாக ரசிக்கப்படுகின்றன. இவற்றில் நடிக்கும் நகைச்சுவை நடிகர்கள் இங்கே மிகவும் பிரபல்யம். இத்தகைய ஒரு நகைச்சுவை நடிகர்தான் சுப்பிரமணியசுவாமி - என்றார்.(த-5)

# கண் சிகிச்சை நிலையம் அமைக்க காணி வழங்குவதற்கு அனுமதி

## யாழ்.மாநகர சபையில் நேற்றுத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக.21
யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கண் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கென யாழ்.மாநகர சபை, மின்சார நிலைய வீதியில் உள்ள மின்சார சபைக் கட்டடம் உள்ள காணியை வழங்க ஒருமனதாகத் தீர்மானித்தது.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற மாநகர சபையின் விசேட கூட்டத்தில் யாழ். போதனா வைத்தியசாலை மேற்படி காணியை வைத்திய சாலையின் பயன்பாட்டுக்கு வழங்க உதவுமாறு விடுத்த கோரிக்கை குறித்து முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

கண் சிசிக்சை நிலையம் முக்கியமானதும், தேவையானதுமாகும். அதற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். யாழ்.நகரில் பெருமளவில் இட நெருக்கடி உள்ள நிலையில் அயல் கிராமங்களில் உள்ள வசதியான இடங்களில் அதனை அமைப்பதன் மூலம் அந்தப் பகுதிகளும் வளர்ச்சியடையும்; நெருக்கடிகளும் தவிர்க்கப்படும் என்று எதிரணி உறுப்பினர்கள் இ.இராஜதேவன், மேரியம்மா, சோமசுந்தரம் உட்பட ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் கிள மோடா சியஸ்சும் குறிப்பிட்டனர். இது தொடர்பாக யாழ்.போதனா வைத்திய சாலைப் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். பவானந்தராஜா, போதனா வைத்தியசாலையுடன் இணைந்தே இந்த கண் சிகிச்சை நிலையம் அமைக்கப்படவேண்டியுள்ளது. நோயாளர்களுக்கு வசதியாக இது அமைய வேண்டியுள்ளதாலேயே நாம் இந்தக் காணியைக் கோருகிறோம் என்று நிலைமையை எடுத்து விளக்கியதும் உறுப்பினர்கள் அனைவரும் அதனை ஒருமனதாக ஏற்றுக்கொண்டு காணியை வழங்கத் தீர்மானித்தனர்.

குறிப்பிட்ட காணியின் தெற்குப் பக்கத்தில் ஒரு பகுதி ஏற்கனவே யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு மாநகர சபையால் வழங்கப்பட்டிரு... நிலையில் மீதியாக உ... காணியை கண் சிகிச்... நிலையத்துக்கு வழங்க ... மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள மின்சார நிலை... கட்டடம் பண்டைய ஒல்லாந்தர் கால கட்டுமானச் சின்னமாக இருப்பதால் அது முற்றாக அழிக்கப்படாது. உட்புறம் நவீனமயப்படுத்தப்படும் என்று முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

கண் சிகிச்சை நிலையத்துக்கான கட்டடப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.பவானந்தராஜா தெரிவித்தார். (த-7)

# ரயில் நிலையம் பின்பாக தனியார் பஸ் நிலையம்

## யாழ்.மாநகர சபை நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஓக.21
யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு பின்னாலுள்ள 9 ஏக்கர் காணி தனியார் பஸ் நிலையம் அமைக்கப் பயன்படுத்தப்படும். இதற்கான தீர்மானம் நேற்று புதன் கிழமை நடைபெற்ற யாழ். மாநகர சபையின் விசேட கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நகர அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ்.ரயில் நிலையத்துக்கு பின்னாலுள்ள காணியில் தனியார் பஸ் நிலையத்தை அமைக்க சபை அனுமதிக்க வேண்டும் என்று முதல்வர் குறிப்பிட்டிருந்தார்.

நகர அபிவிருத்தி தொடர்பாக முன்னர் குறிப்பிட்ட காணியில் தனியார் பஸ் நிலையம் அமைப்பதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருந்ததைச் சுட்டிக்காட்டிய எதிரணி உறுப்பினர் இ.இராஜதேவன் இதனை எதிரணியினர் ஆதரிப்பதாகவும் தெரிவித்தார். (வ-7)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைகோரி கவனவீர்ப்பு

## முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சி ஏற்பாட்டில் நேற்று

யாழ்ப்பாணம், ஓக. 21
'துரோகிகளுக்கு சிம்மாசனம், அப்பாவிகளுக்குச் சிறைக் கூடமா' என்று கோஷம் எழுப்பியவாறு முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியினால் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று கவன வீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக நேற்று முற்பகல் 10 மணி முதல் 11 மணிவரை நடைபெற்ற இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் சுமார் 50 பேர் வரையில் கலந்து கொண்டனர். இதன்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கோஷம் எழுப்பப்பட்டது. கவனவீர்ப்புப் போராட்டத்தின் பின்னர், ஜனாதிபதிக்கான மனு யாழ். மாவட்ட அரச அதிபர் ஊடாக கையளிக்கப்பட்டது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இதன்போது விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

மேலும் விடு தலைப் புலிகள் அமைப்பில் முக்கிய பொறுப்பில் இருந்தவர்கள் பலர் தற்போது சுகபோக வாழ்க்கை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் ஆயிரத்து 300 தமிழ் அரசியல் கைதிகள் வரையில் சிறைச்சாலைகளில் வாடிக் கொண்டிருக்கின்றனர். அவர்களது எதிர் காலத்தை கருத்தில் கொண்டு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுவிப்ப தற்கு அல்லது, சட்டரீதியாக நட வடிக்கை எடுப்ப தற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு ஜனாதி பதியைக் கோருவ தாக குறித்த மனு வில் குறிப்பிடப்பட் டுள்ளது. (வ-5-21)





நந்தாவில் அம்மன் கோவில் பகுதியில் அமைக்கப்படும் ரயில் பாதைக்குரிய கடவைப்பாதைகள் தகுந்த முறையில் அமைக்கப் படவில்லை என்பதைக் கண்டித்தும், ரயில் கடவை பாதைகளை மக்களுக்கு தேவையான இரு இடங்களில் அமைத்துத்தருமாறு வலியுறுத்தியும் அந்தப்பகுதி மக்கள், மாணவர்கள் நேற்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். ஆர்ப்பாட்டத்தில் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சின்னத்துரை தவராசா, நல்லூர் பிரதேசசபை தலைவர் ப.வசந்தகுமார், ஓய்வுபெற்ற உதவிக்கல்வி பணிப்பாளர் சி.மாதவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-ரி)

# திண்மக் கழிவகற்றலை மேம்படுத்த புதியநடைமுறை விரைவில் அறிமுகம்

## சாவகச்சேரி நகர சபை நடவடிக்கை

சாவகச்சேரி நகரசபையால் தற்போது மேற்கொள்ளப்படும் திண்மக் கழிவு அகற்றும் செயற்றிட்டத்தை மேம்படுத்த புதிய திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வரியிறுப்பாளர்கள் தமது வளவுகளில் சேகரிக்கும் குப்பைகளை வட்டார ரீதியாக குப்பைகள் சேகரிக்கும் வாகனங்களில் போடுவதற்கு வசதியாக வாகனங்களில் ஒலி எழுப்பும் கருவிகள் பொருத்தப் படவுள்ளன. வட்டாரங்களில் வீதி வீதியாக குப்பை அகற்றும் வாகனங்கள் செல்கையில் இந்த ஒலி எழுப்பப்படும் என்றும் வரியிறுப்பாளர்கள் அந்த வேளையில் வளவுகளில் தம்மாமல் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள குப்பைகளை குறித்த வாகனத்தில் போடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சபையின் குப்பை அகற்றும் வாகனங்கள் தமது பகுதிகளுக்கு வந்து போவது தெரியாமல் உள்ளதாக வரியிறுப்பாளர்கள் முறைப்பாடுகள் தெரிவித்ததை அடுத்து புதிய நடவடிக்கையாக வாகனங்களில் ஒலி எழுப்பும் கருவி பொருத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# உயிரிழந்த கண்டி பெண்ணுக்கு எபோலா வைரஸ் பாதிப்பில்லை

யாழ்ப்பாணம், ஓக. 21
கண்டி, ரிக்கிகஸ் கடவலையைச் சேர்ந்த பெண்ணொருவர் இந்தியாவுக்குச் சென்று திரும்பிய நிலையில் உயிரிழந்திருந்தார். அவருக்கு உலகையே உலுக்கி வரும் எபோலா வைரஸ் தொற்றியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பரி சோதனைகள் முன்னெடுக்கப் பட்டிருந்தன. இந்த நிலையில் அவர் எபோலா வைரஸ் தாக்கி உயிரிழக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக கண்டி தேசிய வைத்திய சாலைப் பணிப்பாளர் பபா பலிஹவடன தெரிவித் துள்ளார்.

கண்டி, ரிக்கிகஸ்கடவலையைச் சேர்ந்த பெண்ணொருவர், இந்தியாவுக்கு சென்று அண்மையில் திரும்பியிருந்தார். அவர் சுகவீனம் காரணமாக கண்டி தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 24 மணி நேரத்தினுள்ளேயே அவர் உயிரிழந்திருந்தார்.

குறித்த பெண்ணுக்கு ஏற்பட்டிருந்த நோய் அறிகுறி மற்றும் வைத்தியசாலையின் ஆரம்பக்கட்ட பரிசோதனைகளின் அடிப்படையில், அப்பெண்ணுக்குஎபோலாவைரஸ் தாக்கம் இருந்திருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்பட்டது. அதனால் அவரது சடலத்திலிருந்து இரத்த மாதிரிகள் பரிசோத னைக்காக எடுக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் அவரது சடலம், சீல் வைக்கப்பட்ட சவப்பேளையினுள் வைக்கப்பட்டு நிலத்தின் கீழ் எட்டு அடி ஆழத்தில் புதைக்கப்பட் டிருந்தது. இதன் காரணமாக அவர் எபோலா வைரஸால் உயிரிழந்ததாக தகவல்கள் பரவியிருந்தன. இருப்பினும் அவரது இரத்த மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதன் அடிப்படையில் அவர் சாதார வைரஸ் தொற்று காரணமாகவே உயிரிழந்துள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-5)

# இறந்த கழுதை ஒருவாரமாகியும் அகற்றப்படவில்லை மக்கள் விசனம்



மன்னார், ஓக. 21
மன்னார் சாவற்கட்டு பகு... யில் புனித அந்தோனியா... கோயிலுக்கு முன்பாக உயி... ழந்து கிடக்கும் கழுதையொ... றின் உடலை பல தினங்க... கழிந்த நிலையிலும் அப்புற... படுத்த மன்னார் நகர சபை... நடவடிக்கை எடுக்கவில்லை... என்று அந்தப்பகுதி மக்க... விசனம் தொவிக்கின்றனர்.

ஒரு வாரத்தின் முன்னர் இற... அந்தக் கழுதையின் உடல... அங்கிருந்து அகற்றுவதற்... மன்னார் நகர சபை நட... டிக்கை எடுக்காததால் கழுதை... யின் உடல் சிதைந்து அங்... துர்நாற்றம் வீசுகிறது.

இதனால் அந்தப்பகுதியில் ... நாற்றம் வீசுவதுடன் சுகா... ரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்... வதாகவும் மக்கள் விசன... தெரிவிக்கின்றனர். (...

# திருமலை மருத்துவமனைக்கு அதிவிசேட உபகரணங்கள்

## சர்வதேச லயன்ஸ் கழக நிறுவனம் வழங்கியது



திருகோணமலை, ஓக.21
திருகோணமலை பொது வைத்தியசாலை கண் சிகிச் சைப் பிரிவுக்கு சர்வதேச லயன்ஸ் கழக நிறுவனம் 14.5 மில்லியன் ரூபா பெறுமதியான 12 அதி விசேட உபகரணங்களை அன்பளித்துள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட 12 அதி விசேட கண் சிகிச்சை உபகரணங்களை உத்தியோக பூர்வமாக சர்வதேச லயன்ஸ் கழக நிறுவனத்தால் கையளிக்கும் நிகழ்வு திருகோணமலை பொது வைத்தியசாலை கண் சிகிச்சைப்பிரிவில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. நிகழ்வில் சுகாதார அமைச்சின் சுகாதார சேவை துணைப் பொதுப் பணிப்பாளர் மருத்துவர் ஜெயசுந்தர பண்டார, 306 சி1 மாவட்ட லயன்ஸ் கழகஆளுநர்குசும்சந்தநாயக்க, சிங்க கழக ஆளுநர் 2012/2013 பு.ஜனரன்ஜன், திட்டத் தலைவர், பி.உதயசங்கர் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ)

## கடற்படைச் சிப்பாய்க்கு நேற்று பிணை அனுமதி

கிளிநொச்சி, ஓக. 22

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் இரு பிள்ளைகளின் தாயொருவரை பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்த முயன்ற கடற்படைச் சிப்பாய்க்கு கிளிநொச்சி நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி இரவு உறக்கத்திலிருந்த இரு பிள்ளைகளின் தாயொருவரை வாயைப் பொத்திப் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்த முயன்றபோது பெண் எழுப்பிய அவலக் குரலையடுத்து ஊர்மக்களால் பிடிக்கப்பட்ட கடற் படைச் சிப்பாய் பின்பு பளைப் பொலிசாரிடம் கையளிக்கப் பட்டார்.

கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட கடற் படைச் சிப்பாய் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இன்று அவரைப் பிணையில் செல்ல கிளிநொச்சி நீதி மன்றம் அனுமதியளித்தது. (த-18)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கையின் பிரபல பொருளியல் ஆசிரியரும் முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான



### சின்னத்துரை வரதராஜன்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வ தோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள், பணியாளர்கள், மாணவர்கள்.

**New Science World** (சி16:12) (12.3.6)

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்புலட்சுமி செந்தில்நாதன் (குஞ்சக்கா)



திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இல. 91, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்புலட்சுமி செந்தில்நாதன் 15.08.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பியப்பா செந்தில்நாதன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-சரஸ்வதி தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பியப்பா-சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற பத்மலோஜினி மற்றும் சற்குணம், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரியும் கமலவேணி, விமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் கௌசல்யா, அகல்யா, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரபாகரன், வாசவன், இந்துஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரகல்யா, பிரியங்கா, பிரவீணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.08.2014) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.91, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.
021 205 2201

தகவல்:
குடும்பத்தினர்

(61109)(7.6.3)

## சாவகச்சேரியில் தீ விபத்தால் பரபரப்பு

தென்மராட்சி, ஓக. 21

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு எழுந்த புகையினால் நகர்ப்பகுதி அல்லோல கல்லோலப்பட்டது.

சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் உள்ள காணி ஒன்றில் மாலை வேளையில் குப்பை எரித்ததால் அது பரவி நகரசபை மைதானத்தை அண்டிய பற்றைப் பகுதியில் தீ பரவி இரவு ஒன்பது மணிக்கு கொழுந்து விட்டு எரிந்தது. இதனால் நகரப் பகுதி ஒரே புகை மண்டலமாக காணப்பட்டது. இரவிரவாக யாழ். மாநகர சபையினால் தீயணைப்புப் பிரிவினர் வருகை தந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த னர். நகர்ப் பகுதி புகை மண்டலமாக காட்சி அளித்ததால் நகர சபையினர், பொலிஸார், படையினர் தீயை அணைக்க எடுத்த முயற்சிகள் பயனளிக்காததால் தீயணைப் புப் படை யினை வரவழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நேற்று காலையிலும் ஆங்காங்கே தீ பரவிய பொழுதும் நகர சபையினர் தண்ணீர் பௌசர் மூலம் தண்ணீர் விசிறப்பட்டு தீ அணைக் கப்பட்டது. (த-9)



இலங்கையில் முதற்தடவையாக ஒரே மேடையில் பத்து விதமான கல்லை நிகழ்ச்சிகளைக் கொண்ட கலைச் சங்கமம் ஒன்று யாழ்.மருத்துவ விஞ்ஞானப் பிரிவின் அனுசரணையுடன் நேற்று முன்தினம் நல்லூர் நல்லை ஆதீனத்தில் மிருதங்க வித்துவான் துரைராஜாவின் தலைமையிலும் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்றது. மூன்று நடன நிகழ்வுகளையும் ஏழு இசை நிகழ்வுகளையும் உள்ளடக்கிய இந்தக் கலைச் சங்கமத்தில் பிரதம விருந்தினராக மருத்துவ கலாநிதி கணேசமூர்த்தி, கௌரவ விருந்தினராக வைத்திய கலாநிதி பேரானந்தராஜா, பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். (த-ரி)

## மாகாண சபை கூட்டத் தொடர் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 21

வடக்கு மாகாண சபையின் 14 ஆவது கூட்டத் தொடர் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம் பமாகவுள்ளது.

இதன்போது 7 பிரே ரணைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள் எப்படவுள்ளன. (த-5)

- ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள். சரியாக உச்சரிப்பு. CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம் இன்றே பதிவுசெய்யுங்கள்.

பிரான்ஸ் செல்வோர் விரையுங்கள்...உடன் அழையுங்கள்...

021 222 8093 61,கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

BCHS

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

After A/L What Next???

இன்னும் சில நாட்களில் நீங்கள் பல்கலைக்கழகம் செல்லவேண்டும், படித்துப் பட்டதாரியாக வேண்டும் அல்லது வேறு உயர் கற்கை நெறிகளைக் கற்க வேண்டும் அல்லது போட்டித் தொழிற்சந்தையிலே நல்ல வேலை வாய்ப்பை பெற வேண்டும், இவ்வாறான உங்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனில், நீங்கள் வாழ்க்கையில் வளம்பெற வேண்டுமெனில் தற்போதைய காலகட்டத்தில் ஆங்கில அறிவு மிக, மிக அவசியமானது

Spoken English With Grammar - Quick Learning Course

- சர்வதேச தராதரத்திற்கேற்ற பாடத்திட்டம். Duration: (1 1/2 Months)
- கற்கைநெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறது.
- விரிவுரைகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video) நடைபெறுகின்றது.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும்.

Diploma In English Duration: (2 Months)

தற்காலத்திலே ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. உயர் கல்வி கற்பதாயினும் சரி, அலுவலகத்தில் வேலை புரிவதாயினும்சரி. Internet, E-mail, Internet Chatting மற்றும் நாளாந்த வாழ்க்கையிலே இலத்திரனியல் சாதனங்களை பாவிப்பதிலும் சரி ஆங்கிலத்தின் தேவையை யாரும் புறந்தள்ளமுடியாது. இதை நாம் நன்கு உணர்ந்து எல்லோரும் இலகுவில் கற்கக்கூடிய விதத்தில் ஒரு பாடத்திட்டத்தினைப் புதிய தொழில்நுட்பங்களுடன் (Audio & Video System) அமைத்துள்ளோம்.

B1 Exam Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளைவிட மிகவும் இலகுவானதுடன் IELTS-4.5இற்கு ஒப்பானது. இது British High Commission இனால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration: (2 Months)

IELTS Acadamic/General We do Official Online Registration for Exam Candidates Duration: (2 Months)

(International English Language Testing System)

Student Visa / Migration Visa மூலம் Canada, Newzeland, USA, Australia, UK போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்கானது.

We gurantee success rate 6.5 band and above

A1 Exam Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

U.K அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது (City & Guilds)
சான்றிதழின் கால எல்லை வரையறையற்றது
நம்பிக்கைக்குரிய சர்வதேசப் பரீட்சை
ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது Duration: (2 Months)

(C/16078)(7.6.3)

23/08/2014 @ 9.00am 25/08/2014 @ 3.00pm 27/08/2014 @ 9.00am

No.15, Sirambiyady Lane, Jaffna (Near Ariyakulam Junction & Sathosa). Tel : 0212224550
No.3, 6th Lane, VairavarKovil Rd, Vairavapuliyankulam, Vavuniya. Tel:0243245287
Head Office. No.30 1/5, W.A. Silva Mawatha, Colombo -06. Tel 0112500207

Hot Lines : 0777585913, 0777222422, 0714299935

"விவேகமுள்ளவர்களின் நம்பிக்கையான ஒரே தெரிவு"

HONDA

பிரம்மாண்டமான திறப்பு விழா
இன்று (21.08.2014) வியாழக்கிழமை
காலை 9.00 மணிக்கு

யாழ் நகரின் பிரதான காட்சியறை
HONDA WORLD,
214,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 077 0387 111, 021 222 3316

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.